பேசும் படம்

அக்டோபர் 1960 • 75 காசு

விரைவில் வருகிறது!
அறிமுகம் விஜயன்
L.விஜயலட்சுமி
நடிக்கும்
குமரி பிலிம்ஸ்
பாதை தெரியுது பார்!
மற்றும்
S.V. சகஸ்ரநாமம்
S.V. சுப்பையா
T.S. முத்தையா
T.K. பாலச்சந்திரன்
R. முத்துராமன்
A. வீரப்பன்
சுந்தரிபாய்
சாந்தினி
கதை, வசனம்
R.K. கண்ணன்
இசை
M.B. சீனிவாசன்
ஒளிப்பதிவு & டைரக்ஷன்: நிமாய் கோஷ்
NEGATIVE RIGHTS CONTROLLED BY: SAKTHI FINANCIERS, MADRAS.
குமரி பிலிம்ஸ் (பிரைவேட்) லிட்.,
124 - ஹபிபுல்லா ரோடு, சென்னை-17.
SANTHI
BHARATH STUDIO

நவம்பர் வெளியீடு !
ஏவி எம் புரொடக்ஷன்ஸ்
திலகம்
...டைரக்ஷன்...
கிருஷ்ணன் பஞ்சு
கதை, வசனம்: K.M. நாராயணசாமி
AVM
புரொடக்ஷன்ஸ்

தீபாவளி விசேஷ விற்பனை!

நவ நாகரீக

★ பட்டுப் பாவாடைகள்

★ சோளி - பீஸ்கள்

★ நவீன ரக பட்டுச் சேலைகள்

5, ஸன்னதி தெரு
மைலாப்பூர்
மதராஸ்-4.

ஆரணி ஸில்க் ஹவுஸ்

டெலிபோன்
71349

எமது ஜவுளி ரகங்கள் அனைத்தும் கீழ்க்கண்ட விலாஸத்தில் மதராஸ் விலைக்கே கிடைக்கும் :

சுதர்சன் அண்டு கம்பெனி

1/4, பிரின்ஸ்குலாம் முகம்மத் ரோட்,
காளிகாட் போஸ்ட், கல்கத்தா -26.

வீட்டில் சினிமா புரொஜக்டர்

உத்திரபிரதேச அரசாங்க உதவியைக் கொண்டது.



இந்த சினிமா புரொஜக்டரைக் கொண்டு உங்கள் வீட்டிலேயே நண்பர்களுக்கும் சினிமாவைக் காட்டி மகிழலாம். இதை மின்சாரம் (ஏ. ஸி அல்லது டி. ஸி.) அல்லது பாட்டரி விளக்கினால் இயக்கலாம். 35. மி. மீ. பிலிமில் 4'X4' உள்ள திரையில், வித விதவர்ணங்களில், முழுச் சலனத்தோடு படங்களைப் பார்க்கலாம். ஒவ்வொரு புரொஜக்டருடனும் 10 கெஜம் பிலிமும் படங்கள் கொண்ட விளக்கப் புத்தகமும் இனும். ஸ்பெஷல் (டீலக்ஸ்) மாடல் விலை ரு. 15.50 வி. பி. பி. சார்ஜுகள் ரு. 4.50. தனியே ஒவ்வொரு கெஜம் பிலிம் விலை 25 நயே பைசே. திரை ரு. 3. பூரண விநியோகஸ்தர்கள்

ANAND INDUSTRIES
Mandi Ramdas, Mathura.

50 முறை சுடும் பிஸ்டல்

லைஸன்ஸ் தேவையில்லை. 50 முறை தானாகவே சுடும் அமெரிக்கன் மாடல் பிஸ்டல். சுடும்போது வரும் ஓசை மிருகங்களையும் கள்ளர்களையும் நடுங்கச் செய்யும். சினிமா நாடகங்களுக்கு உபயோகப்படும். விரோதியிடமிருந்து காப்பாற்றிக்கொள்ள உபயோகமாகும். டீலக்ஸ் மாடல் விலை ரூ. 10/50 (50 குண்டுகள் இனும்) வி பி. சிலவு ரூ.2/50 இலங்கைக்கு ரூ. 4/50. பிஸ்டல் உறை பெல்டுடன் ரூ. 3/- உயர்ந்த ரகம் ரூ. 5/- தனி குண்டுகள் நூறு ரூ. 5/- ரிபேர் செய்ய எண்ணை ரூ. 1/-

TARUN TRADERS
(60-53) Post Beat 19
Aligarh City.

அக்டோபர்
வெளியீடு
நடிகர் திலகம்
சிவாஜி
கணேசன்
நடித்த
ஸ்ரீ
விஜயகோபால்
பிக்சர்ஸ்
கல்கியில்
வெளிவந்த
அகிலனின்
பாவை
விளக்கு
திரைக்கதை, வசனம் • A.P. நாகராஜன்
சங்கீதம் • K.V. மஹாதேவன்
பாடல்கள் • மருதகாசி
டைரக்ஷன் • K. சோமு
BAKTHA
தயாரிப்பு • விஜயரங்கம் & கோபன்ன

ELEGANT

தீபாவளி

இந்த பண்டிகை நாளன்று தி அஸோஸியேடட் ஸிமெண்ட்
கம்பெனீஸ் லிமிடெட் மற்றும் தி இந்தியா ஸிமெண்ட்ஸ் லிமிடெட்
கம்பெனியார் கடந்த காலத்தில் நாட்டின் சுபிட்சத்
திற்காக அவர்கள் செய்துள்ள தொண்டை நினைத்து மகிழ்ச்சியடை
வதுடன், வருங்கால சுபிட்சத்திற்கு இன்னும் தொடர்ந்து
பாடுபடுவோமென்று உறுதியளிக்கிறார்கள்.
இந்தியாவின் முன்னேற்றத்திற்கு அவசியமான ரோடுகள்,
வீடுகள், பாக்டரிகள், அணைகள் முதலிய எல்லாவித
நிர்மாண வேலைகளுக்கும் ஏஸிஸி ஸிமெண்டும், சங்கர்
பிராண்ட் ஸிமெண்டும் உபயோகிக்கப்படுகின்றன.

தி ஸிமெண்ட் மார்க்கெட்டிங் கம்பெனி ஆப் இந்தியா பிரைவேட் லிட்,
தி அஸோஸியேடட் ஸிமெண்ட் கம்பெனீஸ் லிமிடெட்
தி இந்தியா ஸிமெண்ட்ஸ் லிமிடெட்

தீபாவளி வெளியீடு!
என்ன எங்கே எப்போ?
மாடர்ன் தியேட்டர்ஸ்
கைதி கண்ணாயிரம்
சங்கீதம்:
K.V. மஹாதேவன்
டைரக்ஷன்:
A.S.A. சாமி

தீபாவளி
ரிலீஸ்...
தேவர் பிலிம்ஸ்
யானைப்பாகன்
தயாரிப்பு · சாண்டோ M.M.A. சின்னப்பா தேவர்
கதை·வசனம் · அய்யா பிள்ளை
சங்கீதம் · K.V. மஹாதேவன்
டைரக்ஷன் · M.A. திருமுகம்
elegant

படம் 19

காட்சி 2

பேசும் படம்

★ அக்டோபர் - 1960 ★

பொருளடக்கம்

		பக்கம்
1.	செய்திச் சுருள்	... 8
2.	செய்திப் படங்கள்	... 11
3.	சிவாஜி கணேசன்-வைஜயந்திமாலா	... 18
4.	ஜெமினி கணேசன்-சரோஜாதேவி	... 19
5.	ராகினி	... 20
6.	மனோரமா	... 21
7.	பம்பாயில் பத்மினி-ராகினி	... 22
8.	வைஜயந்திமாலா	... 23
9.	ராமராவ்-எம். சரோஜா (வர்ணப் போட்டோக்கள்)	24
10.	ஆளுக்கொரு வீடு-திரைக்கதை, வசனம்	... 25
11.	நடிப்புலகில் முதல்வர்	... 32
12.	ஸ்டுடியோ விஜயம்	... 42
13.	'ஸ்வீட்' சாவித்திரி	... 49
14.	தங்கரத்தினம் (படக்காட்சிகள்)	... 57
15.	வெட்டுங்கள் வெட்டுங்கள்	... 67
16.	நான் ரசித்த காட்சி	... 71
17.	புரொடக்ஷன் புருஷோத்தமன்	... 77
18.	ஒரு நிமிஷம்! ஒரு யோசனை!	... 79
19.	பாவை விளக்கு (படக்காட்சிகள்)	... 81
20.	புதிய பாதை (படக்காட்சிகள்)	... 85
21.	கேள்வி பதில்	... 90
22.	தபால் பெட்டி	... 98
23.	'பேசும்-படம்' போட்டோ ஆல்பம்	... 105
24.	தமிழ் பேசும் எகிப்திய நடிகை	... 125

★ NINETEENTH **YEAR OF PUBLICATION** ★

PESUM PADAM. Tamil Monthly Magazine: Printed and Published by T. V. Ramanath, at Ramanath Press, Arcot Road, Kodambakkam, Madras-24. Phone: 88728 Proprietors: Ramanath Publications. Managing Editor T. V. Ramanath.

EDITORIAL & PUBLICATION OFFICES:

Arcot Road, Kodambakkam, Madras - 24.

MEMBER: AUDIT BUREAU OF CIRCULATIONS LTD.

Registered as a Newspaper in Ceylon.

செய்தித் துகள்

தங்கரத்தினம்

நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரன் முதன் முதலாக டைரக்ட் செய்திருக்கும் 'தங்கரத்தினம்' முடிவடையும் தறுவாயிலிருக்கிறது. இராதாமணாளன் வசனம் எழுதியுள்ள இந்தப் படம், சமூக உயர்வுக்கு, ஜாதிக் கட்டுப்பாடும், உயர்ந்தவன்- தாழ்ந்தவன் என்ற மனோபாவமும் கூடாது என்பதை சொல்லுகிறது. தாழ்ந்த குடியில் பிறந்த பெண்ணை பணக்கார வாலிபன் மணந்து கொள்ளுகிறான். இந்த இரு முக்கிய பாத்திரங்களை எஸ். எஸ். ஆரும், விஜயகுமாரியும் ஏற்றுள்ளனர். தங்கவேலு. பிரேம் நசிர் டி.வி. நாராயணசாமி, தக்ஷிணாமூர்த்தி, ஹேமலதா மற்றும் பலரும் நடிக்கும் இப்படத்திற்கு கே. வி. மகாதேவன் இசை அமைத்துள்ளார். மெஜஸ்டிக் ஸ்டுடியோவில் படம் தயாராகி வருகிறது.

ராமனாதன் புரொடக்ஷன்ஸ் 'மகா மேதை' படத்தில் பிரேம் குமார் நடிக்கிறார்.

ஆளுக்கொரு வீடு

பி. என். பிள்ளை தயாரித்து வெளியிட்டிருக்கும் சுபாஷ் மூவீஸாரின் 'ஆளுக்கொரு வீடு' ஒரு வெற்றிப் படமாக பவனி வந்து கொண்டிருக்கிறது. சமூகத்தில் வேரூன்றிக் கிடக்கும் குறைபாடுகளை நையாண்டி செய்யும் சித்திரமாக 'ஆளுக்கொரு வீடு' அமைந்திருக்கிறது. சத்யன், முத்தையா, எல். விஜயலக்ஷ்மி, முதலியோர் நடித்துள்ள இந்தப் படத்தை எம். கிருஷ்ணன் டைரக்ட் செய்துள்ளார். சக்தி கிருஷ்ணசாமி படத்தின் கதை, வசனங்களை அமைத்துள்ளார். விஸ்வநாதன் - ராமமூர்த்தி ஜோடியின் இசையமைப்பு இப்படத்தின் சிறப்பானதொரு அம்சமாகும்.

ஓரியண்டலின் அடுத்தது

'பொன்னு விளையும் பூமி'யை வெளியிட்ட ஓரியண்டல் மூவீஸார் அடுத்து ஒரு சமூகப்படத்தைத் தயாரித்து வருகிறார்கள். இதற்கான ஆரம்ப விழா சென்ற மாதம் நியூடோன் ஸ்டுடியோவில் நடைபெற்றது. பத்மினி ஏழை தையல்காரியாக நடிக்கும் இப்படத்தை, அவரது தாயார் ஆரம்பித்து வைத்

தார். பத்மினியுடன் ராகினி, ஜெமினி கணேசன், எம்.ஆர். ராதா, டி. ஆர். ராமச்சந்திரன் முதலியோர் நடிக்கும் இதன் கதை, வசனங்களை கணேசன், சுப்பிரமணியம் இருவரும் எழுதியிருக்கிறார்கள்.

விடிவெள்ளி

'நடிகர் திலகம்' சிவாஜி கணேசன் நடிக்கும் பிரபுராம் பிக்சர்ஸாரின் படத்திற்கு 'விடிவெள்ளி' என்று பெயர் தரப்பட்டிருக்கிறது. சரோஜாதேவி, டி. ஆர். ராமச்சந்திரன், பாலாஜி, பத்மினி பிரியதர்சினி மற்றும் பலரும் நடித்து வருகிறார்கள். திருடன் திருடனாகவே பிறப்பதில்லை. சந்தர்ப்பம்தான் அவனை திருடனாக்கி விடுகிறது. திருடன் என்பவனும் ஈவு, இரக்கம், பச்சாதாபம், அன்பு, எல்லாம் கொண்டவன்தான் என்பதை இப்படக் கதை சித்தரிக்கிறது. ஸ்ரீதர் இதன் கதை, வசனத்தை அமைத்திருப்பதுடன், டைரக்ஷன் பொறுப்பையும்ஏற்றிருக்கிறார். விரைவில் திரைக்கு வரப்போகும் படங்களில் இதுவும் ஒன்று.

தேன் நிலவு

ஜெமினி கணேசன் - வைஜயந்திமாலா இருவரையும் பிரதம பாகத்தில் நடிக்க வைத்து 'தேன் நிலவு' என்ற படத்தை சித்திராலயா ஸ்தாபனத்தார் தயாரிக்கப்போகிறார்கள். இதன் கதை, வசனம், டைரக்ஷன் பொறுப்புகளை ஸ்ரீதர்ஏற்றிருக்கிறார். ஏ. எம். ராஜா இசை அமைக்கிறார். நம்பியார், தங்கவேலு, எம். சரோஜா முதலியோரும் நடிக்கும் இப் படப்பிடிப்பு விரைவில் ஆரம்பமாக விருக்கிறது. சட்டக் கல்லூரி மாணவி வசந்தியும் இப்படத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட விருக்கிறார். ஸ்ரீதரின் சொந்த ஸ்தாபனம் சித்ராலயா.

அன்புக் கரங்கள்

ஸ்ரீதர் கதை, வசனம் எழுதியுள்ள குவாலிடி பிலிம்சாரின் படத்திற்கு 'அன்புக் கரங்கள்' என்று பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. ஜெமினி கணேசன், தங்கவேலு, நம்பியார், துரைராஜ், முத்தய்யா, ஈஸ்வர்

சிவாஜி பிக்சர்ஸ் 'சோலைமலை ராணி'யில் அசோகன்.

விஜயலக்ஷ்மி, சிவகாமி முதலிய நக்ஷத்திர நடிகர்களுடன், படத்தின் டைரக்டரான எஸ். பாலசந்தரும் நடித்து வருகிறார். வேகமாக வளர்ந்து வரும் இந்தப் படத்திற்கு கே. வி. மகாதேவன் இசை அமைத்து வருகிறார்.

மடாதிபதி மகள்

ஹிந்திப் படவுலகில் சில ஆண்டுகட்கு முன்பு வெளிவந்த 'நாஸ்திக்' என்ற படம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. ஆஸ்திக - நாஸ்திக அடிப்படையில் ஒரு மடாதிபதியின் மகளைப் பின்னணியில் வைத்து எடுக்கப்பட்டிருந்த அந்தப் படத்தில் நளினி ஜெய்வந்த் - அஜீத் இருவரும் பிரதம பாகத்தில் நடித்து வந்தனர். பிலிம்ஸ்தான் ஹிந்தியில் இதைத் தயாரித்து வந்த போதே, தமிழிலும் கூடவே தனிப்படமாக எடுத்து வந்தார்கள். அந்தப் படத்தை "மடாதிபதி மகள்"

என்ற பெயரில் தமிழில் வெளியிடும் உரிமையை ஸ்ரீ வரதராஜா பிலிம்சார் பெற்றிருக்கிறார்கள். விரைவில் இப்படம் தமிழகமெங்கும் வர விருக்கிறது.

கப்பலோட்டிய தமிழன்

பத்மினி பிக்சர்ஸின் பிரம்மாண்ட தயாரிப்பான 'கப்பலோட்டிய தமிழன்' ஆரம்பவிழா ஆகஸ்ட் மாதம் 29-ம் தேதி நடைபெற்றது. சென்னை நிதி மந்திரி தலைமை வகித்து படத்தை ஆரம்பித்து வைத்தார். பரணி ஸ்டுடியோவில் இவ்விழா நடைபெற்றது. சிவாஜி கணேசன் இதில் கப்பலோட்டிய தமிழனான தேசபக்தர் சிதம்பரனார் வேஷத்தில் நடித்து வருகிறார். பி. ஆர். பந்துலு படத்தை டைரக்ட் செய்கிறார்.

எம். ஜி. ஆர். நடிக்கிறார்

'பண்ணையார் மகன்' தயாரிப்பாளரான ராகவன், ராகவன் பிக்சர்ஸ் என்ற பெயரில் மற்றொரு படத்தை ஆரம்பித்திருக்கிறார். எம். ஜி. ஆர். இதன் பிரதம பாகத்தில் நடிக்கிறார். ராகவனே கதை, வசனம் எழுதி டைரக்ட் செய்யும் இதில் அவரது மனைவியான நடிகை மாலினி, எம். ஆர். ராதா, வி. ஆர். ராஜகோபால் முதலியோரும் நடித்து வருகிறார்கள்.

காஞ்சித் தலைவன்

தமிழகத்தின் கலைத்துறை வாழ்க்கையில் மாபெரும் மறுமலர்ச்சியை உண்டாக்கிய வாதாபி வென்ற நரசிம்ம பல்லவனின் வரலாற்றை 'காஞ்சித் தலைவன்' என்ற பெயரில் மு. கருணாநிதி ஒரு வரலாற்றுக் காவியமாக எழுதியிருக்கிறார். எம். ஜி. ஆர்., எஸ். எஸ். ஆர். இருவரையும் பிரதம பாகத்தில் நடிக்க வைத்து, மேகலா பிக்சர்ஸார் இதைத் திரைப்படமாகத் தயாரிக்க முனைந்திருக்கிறார்கள். ஏ. காசிலிங்கம் டைரக்ஷனில் வளரப்போகும் இப்படம் விரைவில் ஆரம்பமாக விருக்கிறது.

'அலெக்சாந்தர்' சிவாஜி

'கவலையில்லாத மனிதன்' படத்தைத் தொடர்ந்து கண்ணதாசன் புரொடக்ஷன்ஸார் தயாரிக்கப் போகும் படத்தில் சிவாஜி கணேசன் பிரதம பாகத்தில் நடிக்கப் போகிறார். கிரேக்க மாவீரனான அலெக்சாந்தரின் வரலாற்றைத் தழுவியதாக இப்படம் இருக்கும். படத்தின் கதை, வசனம் பாடல்களை கண்ணதாசன் எழுதி வருகிறார்.

'பெற்ற மனம்' தீபாவளிக்கு

பேராசிரியர் மு. வரதராசனார் கதை எழுதியுள்ள 'பெற்ற மனம்' படம் முடிவடையும் தறுவாயிலிருக்கிறது. நீண்ட காலமாகத் தயாரிப்பிலிருந்து வரும் இப்படத்தின் வசனங்களை திருவாரூர் தங்கராசு எழுதியிருக்கிறார். 'நடிகர் திலகம்', எஸ். எஸ். ராஜேந்திரன், ரங்கராவ், சந்திரபாபு, விஜயலக்ஷ்மி, எம். என். ராஜம், புஷ்பவல்லி மற்றும் பலர் நடிக்கும் இந்தப் படத்தை பீம்சிங் டைரக்ட் செய்து வருகிறார். நேஷனல் பிக்சர்ஸ் தயாரிப்பான இது தீபாவளி தினம் திரைக்கு வருகிறது.

'நல்ல நாள்'

புதிதாக ஆரம்பமாகியுள்ள 'பிலிம் காம்ரேட்ஸ்' ஸ்தாபனத்தின் சார்பில் 'நல்ல நாள்' என்றொரு தமிழ்ப்படம் தயாராகப் போகிறது. படத்தின் டைரக்டரான காசிநாத், படத்தின் கதையை எழுதியிருக்கிறார். கோமகன் வசனங்களை அமைத்து வருகிறார். எம். ஆர். ராதா, எஸ். வி. சுப்பய்யா, எம். வி. ராஜம்மா, பி. கே. சரஸ்வதி முதலியோர் நடிக்கிறார்கள்.

பெயர் மாற்றம்

'இளைய கன்னி' என்ற பெயரில் மெட்ரோ பிலிம்ஸார் தயாரித்து வந்த படத்திற்கு 'தெய்வச் செயல்' என்று பெயர்மாற்றி வைத்திருக்கிறார்கள். தேவிகா, கண்ணாம்பா, மனோரமா, பிரேம்நசீர், ஓ. ஏ. கே. தேவர், பக்கிரிசாமி, முத்துராமன் முதலியோர் நடித்து வருகிறார்கள்.

திரிலோகசந்தர் எழுதுகிறார்.

'விஜயபுரி வீரன்' கதாசிரியரான திரிலோகசந்தர் எழுதியுள்ள கதையை ஜி. கே. புரொடக்ஷன்ஸார் தயாரிக்கப் போகிறார்கள். ஏவி. எம். ஸ்டுடியோவில் வளர விருக்கும் இப்படத்தின் டைரக்டராக பீம்சிங் அமர்த்தப்பட்டிருக்கிறார். 'நடிகர் திலகம்' இதன் பிரதம பாகத்தில் நடிக்க ஒப்பந்தமாகி யிருக்கிறார்.

செய்திப் படங்கள்

நடிகர் டி. எஸ். துரைராஜ் மகள் திருமணத்தில் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்.

டைரக்டர், கேமிராமேன் மஸ்தான் தன் இரண்டு பெண்களுக்கும் நடத்திய திருமண விழாவில் இரண்டு மாப்பிள்ளைகளுடன் எம் ஜி. ஆர்., எம். ஜி. சக்ரபாணி, முஸ்தபா, பாலாஜி.



போட்டோக்கள்:
டி. ஐ. சந்தாமியான்



‘எலிகண்ட்’ சுப்பிரமணி யம் நடத்திய அவர் மகள் திருமணத்தில் நடிகர்கள். அவரது புதிய இல்லத்தில் ராஜாமணி அம்மாள் விளக்கேற்றி வைக்கிறார்.

செக்ரடேரியட் முத்தமிழ் விழாவில் 'நடிகர் திலகம்' சிவாஜி கணேசன் உரை நிகழ்த்தினர்.

குமாரி சிதாவின் நடன அரங்கேற்றம் ஜெமினி கணேசன் தலைமையில் நடந்தது.

களத்தூர் கண்ணம்மா புகழ் கமலுக்கு பரமக்குடி பஞ்சாயத்து சார்பில் பாராட்டு விழா.



நடிகர் திலகம் மேல் நாடு
களுக்கு சென்ற சென்னை நிதி
அமைச்சர் சுப்பிரமணியம் அவர்
களுக்கு கொடுத்த வரவேற்பு.
வைஜயந்திமாலா நிருப்பாவை
நடனத்திற்கு டாக்டர் சுப்பரா
யன் தலைமை வகித்தார்.

சென்னையில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நடத்திய பாரதி விழாவிற்கு மத்திய அமைச்சர் டாக்டர் சுப்பராயன் தலைமை வகித்தார்.

மத்திய அமைச்சர் திருமதி தாரகேஸ்வரி சின்ஹாவுக்கு தென்னிந்திய பிலிம் வர்த்தக சபை வரவேற்பில் நடிகர்களும் சங்கத்தினர்களும்.



வாழையடி வாழையாக

ஏழு ஆண்டுகளுக்கு முன் கைத்தறித் தொழில் மிகவும் நெருக்கடியான நிலைமையில் இருந்தது. துணிகள் விற்பனையாகாமல் கிடந்தன. நெசவாளர் துயரமுற்றிருந்தனர்.

பரம்பரையாய் வளர்ந்து வந்த இக்குடிசைத் தொழிலை சீரமைத்து விருத்தி செய்து, நம் நெசவாளர் இந் நிலையை மாற்றியுள்ளனர். இதனால் கைத்தறி உற்பத்தி வளரத் தொடங்கியது. சென்ற ஆண்டு 192 கோடி கெஜம் தயாராயிற்று. இது நாட்டின் தேவையில் ஏறக்குறைய 28 சதவீதமாகும்.

ALL INDIA HANDLOOM BOARD

கைத்தறிகள்

இந்தியப் பொருளாதாரத்தின் இன்றியமையாத ஓர் அம்சம்

DA-60/346

சுபாஷ் மூவீஸ்

ஆளுக்கொரு வீடு

திரைக்கதை - வசனம்

அறிமுகம்

கணபதியும் கந்தசாமியும் உடன் பிறந்தவர்கள். கந்தசாமி, தன் அண்ணனை ஓட்டாண்டியாக்கிக் குடிசையில் வாழச் செய்து, தான் மட்டும் மாளிகையில் வாழ்கிறான். கணபதிக்கு லட்சுமி, பார்வதி என்ற இரு பெண்கள்; புத்திசாலிகள். கந்தசாமிக்கு கமலம் ஒரே பெண்; அசடு. கந்தசாமியின் மனைவி தாயாரு. காய்கறி விற்றுப் பிழைக்கிறார் கணபதி. மாணிக்கம் ஒரு டெப்டி கலெக்டர். கந்தசாமி சகோதரர்களின் தூரத்து உறவினர் அவர். அவருக்கு ராஜன் என்ற பட்டதாரி மகனும், கான்வென்டில் படிக்கும்





பாலன் என்ற மகனும் உண்டு. அவர் ரிடையராகி அந்தக் கிராமத்துக்கு வரவிருக்கிறார்.

காட்சி 1

குளத்தில் மாடுகளைத் தேய்த்துக் குளிப்பாட்டிக் கொண்டிருக்கும் லட்சுமியிடம் வருகிறாள் கமலம். அவன் குடத்துடன் வந்திருப்பதைப் பார்த்து அதிசயிக்கிறாள் லட்சுமி.

லட் : கமலம்...குடம் கொண்டாந்திருக்கியே, தண்ணிகூடத் தூக்கறியா நீ?

கம : அதான் யோசிக்கிறேன். வெறுங்குடத்தையே அழகா தூக்கிட்டுப் போயிடலாமான்னு. ஏங்க்கா! நீ மட்டும் நாள் பூரா பத்து வண்டி வேலை செய்யறியே, உன் உடம்பு மட்டும் எப்படி தாங்குது?

லட் : உனக்குத் தெரியாதா? உலகத்திலே ரெண்டு விதமான உடம்பு இருக்குது. ஒண்ணு ஏழை உடம்பு. இன்னொண்ணு பணக்கார உடம்பு.

கம: ஏய் லட்சுமி...அந்தக் கதையெல்லாம் விடு. எங்க வீட்டுக்கு கலெக்டர் வந்திருந்தாரே, உனக்குத் தெரியுமா?

லட்: கலெக்டரா?

கம: இப்படித்தாண்டி உன்னைப் போலே நானும் பயந்தேன். ஆனா அவரும் மனுஷன் மாதிரி இருக்காரு. இனிமே பயப்படாதே.

லட்: சரி, கலெக்டர் எங்கே வந்தாரு?

கம: எங்க வீட்டுக்குத் தாங்கறேன்...

லட்: எதுக்கு வந்தாரு?

கம: எங்கப்பாவைப் பார்க்கத்தான்.

லட்: ஏன்? ஏதாவது கேஸ் விஷயமா?

கம: அதுக்குள்ளே யாருடி அப்பா பேர்லே கேஸ் போடப் போறாங்க? இப்பச் செய்யுறதெல்லாம் சின்னசின்ன மோசடிதானே?

லட்: சேசே... பேசமே இரு... யாராவது கேட்கப் போறாங்க.

கம: போடி...ஊருக்குத் தெரியாத விஷயமா இது?...அந்தக் கலெக்டரு எங்க அப்பாவுக்குச் சொந்தக்காரராம் சும்மா பார்க்க வந்தாராம்.

காட்சி 2

கணபதி உட்கார்ந்திருக்கும் போது, சிறுவர்கள் பந்து விளையாடுகிறார்கள். அப்போது தீயணைக்கும் வண்டி வருகிறது.





வண்டியில் அகப்படவிருந்த ஒரு பையனைக் காப்பாற்றுகிறார் கணபதி.

கண: ஏம்பா தம்பி...இப்படியா ஓடிவர்றது?...கொஞ்சம் தவறியிருந்தா என்ன ஆகி இருக்கும்?

அங்கே ஒரு பாதிரியார் வருகிறார்.

பாதி: பாலு...காயம் ஏதாவது பட்டதா?

பாலு: இல்லே அய்யா.

பாதி: தெருவில் குறுக்கே ஓடும் போது பார்த்துப் போக வேண்டாம்...?

பாலு: தவறுதான் அய்யா, மன்னிக்கவும்.

பாதி: பெரியவரே...நீங்கள் யார்? இந்தப் பையன் உங்களால்தான் உயிர் பிழைத்ததாக பிள்ளைகள் வந்து சொன்னார்கள்.

பாலு: ஆமாம் அய்யா ... இந்த தாத்தா மட்டும் இல்லேன்னா...

பையன் விளம்புகிறான். கணபதி பையனை அணைத்துக்கொண்டு தேற்றுகிறார்.

கண: அழாதே ராஜா! என் உயிரைக் கொடுக்க எனக்கு ஒரு மகன் இல்லே. எனக்குப் பேரன் மாதிரி நீ. உன்னைக் காப்பாத்தறதுக்கு நான் கொடுத்து வச்சேனே, அதுதான் புண்ணியம்.

பாதி: ஆகா...எளியவராக இருக்கும் உங்களிடந்தான் எவ்வளவு உயர்ந்த பண்பு? இந்தப் பையனின் தந்தை ஒரு பெரிய மனிதர். விவரம் அறிந்தால் உங்களுக்கு வேண்டிய உதவி செய்வார்.

கண: அய்பா ... நீங்க எல்லாம் தெரிஞ்சவங்க. உதவி பெறவா இவ்வளவும் நடந்தது? குழந்தையைக் காப்பாத்தினத்துக்காக கூலி கொடுக்கலாமா? நானும் மனுஷன்தான். மன்னிக்கணும் வர்ரேன்ய்யா.

பாலு: தாத்தா...நாளைக்கு வர்ரியா தாத்தா?

கண: அப்பா அனுமதி கொடுத்தா பேரனை தினமும் வந்து பாக்காமே போக மாட்டேன்.

பாதி: அய்யா...உண்மையிலேயே நீர் பெரியவர்தான். தங்களுக்கு எப்போதும் கதவு திறந்தே வைக்கப்பட்டிருக்கும். வருகிறேன் பெரியவரே...

பாதிரியார் பிள்ளைகளுடன் உள்ளே செல்லுகிறார். அதை பார்த்தவாறே கணபதி பிள்ளை நிற்கிறார்.

காட்சி 3

கந்தசாமி மாணிக்கத்தின் வீட்டுக்குச் செல்கிறார். அங்கே வீட்டு நாய் பாயவே கீழே விழுகிறான். அப்போது அவனிடமிருந்த சில்லறை கீழே விழுகிறது. ராஜனும் பாலுவும் காரில் வந்திறங்குகிறார்கள். ராஜன் கீழே விழுந்த காசிலிருந்து நாலணாவை எடுத்துப் பிச்சைக்காரனுக்குப் போடுகிறான்.

பைத்: அய்யா. நீ கர்ணன்... இவன் துரியோதனன். நான் வர்றேன்.

கந்: போய்யா ... என்ன அநியாயம் இது? என்ன அநியாயம் இதுன்னு கேக்கறேன்?

ராஜ: என்னய்யா அநியாயம்... என்ன அநியாயம்?

ராஜன், பாலு நகருகின்றனர். கந்தசாமி முன்னால் வந்து தடுத்தவாறு பேசுகிறான்.

கந்: இதோ பாருங்க. இது டிப்டி கலெக்டர் வீடுதானே?

ராஜ: ஆமா.

கந்: வாங்க போகலாம். அங்கே போய் ஞாயம் பேசிக்கலாம்.

ராஜ: சரி வாங்க, போகலாம்.

அவர்கள் நகருகின்றனர். வீட்டிற்குள் செல்கின்றனர்.

கந்: என்ன சொன்னே...என்ன சொன்னே?...நாலணா காசுன்னா தெருவிலேயா கிடக்கு?

மாணிக்கத்தை நெருங்குகின்றனர்.

பாலு: பின்னே எங்கே கிடந்தது?

மாணி: யார் அது? ஓகோ, கந்தசாமி பிள்ளையா...வாங்க வாங்க?

கந்: வர்ரேங்க. முதல்லே ஒரு ஞாயம் கேளுங்க.

மாணி: என்ன நியாயம்?

ராஜ: ஒண்ணும் இல்லேப்பா...

கந்: அப்பாவா...நம்ம பிள்ளைங் களா?

மாணி: ஆமா...இவன்தான் நம்ம பெரிய பையன் ராஜன்.

கந்: ஆ!

மாணி: அவன் சின்னவன், பாலு. வாங்க உக்காருங்க...மீனாட்சி.

கந்: அதுதான் இவ்வளவு பெருங் குணம், தர்மசிந்தை யெல்லாம் அப் படியே இருக்கு.

பாலு: அடே! பலே தாத்தாப்பா இவரு.

கந்: கண்ணு. அதுங்காட்டியும் தாத்தாங்கிறியே. மாமான்னு சொல் லுடா ராஜா.

மாணி: சரி. ஊரிலே எல்லாரும் சௌக்கியந்தானுங்களா? மீனாட்சி! இவர்தான் கந்தசாமிப்பிள்ளைங்கிறது... என் தம்பி நிக்கிறீங்க? உக்காருங்க.

மீனா: வணக்கம்.

கந்: வணக்கங்க. நம்ம வீடுங்களா?

மாணி: சும்மா உட்காரு. கிராமத் திலே வீடு கட்ற விஷயமா உனக்கும் உங்க அம்மாவுக்கும் எப்படி எப்படி எல்லாம் பிளான் இருக்கணுமோ அதை யெல்லாம் சொல்லிடுங்க.

பாலு: அப்பா எனக்குத் தனியா படிக்கக் கொள்ள ஒரு ரூம் வேணும்பா.

ராஜ: மெத்தைமேலே எனக்கு ஒரு ரூம்...பாத் ரூம் அட்டாச் சிடா இருக்கணும்ப்பா.

கந்: அது என்ன அது?.. பத்து ரூமா...எனக்கு ஒண் ணும் புரியிலியே... தம்பி என்ன சொல் ருங்க?

மாணி: படுக்கை அறையோடே



குளிக்கிற ஒரு அறையும் வேணும்ன்னு சொல்ருன்.

கந் : பலே. அது நல்ல பிளான். அப்படியே ஆகட்டும்.

மாணி : மீனுட்சி ... ம் ... அப்புறம் ஒனக்கென்ன ஸ்பெஷல் அயிட்டம்?

மீனு : நீங்க எப்படி செய்தாலும் சரி. ஆனு சமையல் கட்டு மாத்திரம் பெரிசா விசாலமா இருந்தா எனக்குப் போதும்.

கந் : பேஷ். அவங்க சொன்னது தான் எல்லாத்த விடப் பொருத்தம்' அப்படியே செய்திடறேன்.

மாணி : சரி. மற்றபடி நான் ஒரு பிளான் போட்டிருக்கேன். அந்தப்படி செய்து முடிச்சிட்டாப் போதும்.

கந் : சரிங்க:

மாணி : மீனுட்சி! போயி இலையைப் போடு.

மீனு : எல்லாம் தயாரா இருக்கு. வாங்க.

கந் : அதுக்குள்ளே என்ன அவசரம்? பேசி முடிச்சிட்டா...

மாணி : சாப்பிட்டுட்டு சாவகாசமா பேசலாம். தம்பி! **(பானு வந்து மாமா குடையை வாங்கிக் கொள்ளுகிருன்.)**

ராஜ : தம்பி...பத்திரமா வைடா.

பானு : ஆமா ஆமா ... இதுக்கு வேறே ஞாயம் கேட்க கோர்ட்டுக்கே போயிடுவாரு.

கந்த : புத்திசாலிப் பிள்ளைங்க.

எல்லோரும் எழுந்து நகருகின்றனர்.

சாப்பாடு என்ருல் கந்தசாமிக்கு மிகவும் சந்தோஷம். ஆகவே அவர் அவர்கள் வீட்டில் சாப்பாடு கிடைக்கும் என்று தெரிந்து பட்டினியுடன் வந்திருக்கிருர்! அவர்களுடன் சம்பந்தம் செய்து கொண்டால், செல்வமும் செல்வாக்கும் பரவும் என்று பகல் கனவு காண்கிருர் கந்தசாமி. அவர் ஆசைக்குத்தான் அளவு கிடையாதே!

(115-ம் பக்கம் பார்க்க)

தீபாவளி மகத்தான விற்பனை

★ நம்பிக்கை
★★ நாணயம்
★★★ நியாய விலை
★★★★ கைராசி

எல்லாவகையிலும் பட்டு & நூல் சேலைகள், பாவாடைகள், சோளி பீஸ்கள், வேஷ்டிகள் முதலியன வாங்க சிறந்த இடம்.

P. B. லக்ஷ்மண ஸா & பிரதர்ஸ்,

பட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள், வியாபாரிகள்.

109, ஐயா முதலித் தெரு,	*307, லக்கம்ஸி நாப்பு ரோட்,*
சிந்தாதிரிப்பேட்டை,	*மாதுங்கா (C. Rly),*
சென்னை-2. போன்: 86966	*பம்பாய் - 19.*

தயாரிப்பு பிராஞ்சு :

15, மேட்டுத் தெரு, காஞ்சிபுரம்.

இப்பொழுது!

குடும்பத்திற்கான
பெரிய சைஸிலும்
பியர்ஸ் டால்கம்!



பியர்ஸ் டால்கம்—மேன்மைக்கு மறுபெயரென
அழகியர் உலகம் போற்றும் பவுடர்—இதோ,
பெரிய சைஸிலும் வருகிறது உங்கள் உறவு நாடி!
குடும்பத்திற்கான, சிக்கனந்தரும் சைஸ்!
பட்டுப்போன்ற மென்மையான இப் பவுடர் இனிய நறு
மணமூட்டப்பெற்று, நாள் முழுதும் உங்களைப் புத்தம் புது
மலர்ச்சியுடனும் ஒயிலுடனும் வைத்திருக்கும்! உங்கள்
அழகிற்கு ஆதரவான, அசல் கிளிசரினலான அழகுசாதன
சோப்பாகிய பியர்ஸ் சோப்பின் தயாரிப்பாளர்களால்
உங்களுக்காகவே தயாரிக்கப்படும் பவுடர்!

பியர்ஸ்—அழகுள்ள மாதர் வழிவழியாக ஆண்டுவரும்
அழகுசாதனச் செல்வம்!

PTP.2-50 TM [illegible]

"என்னை உலகிலேயே சிறந்த நடிகன் என்று கூறுவதை நான் விரும்பவில்லை. அமெரிக்காவிலுள்ள மார்லன் பிராண்டோ ஒருவரைத் தவிர, வேறு நாட்டு சிறந்த நடிகர்களைப்பற்றி யாராவது சொல்கிறார்களா? நமக்கு மார்லன் பிராண்டோ மட்டுமே தெரியும். இதர நாட்டு நடிகர்களிலும் மார்லன் பிராண்டோவைப் போல பலர் இருப்பார்கள். அவர்களையெல்லாம் நினைவில் கொள்ளாமல் என்னை மட்டும் 'உலகின் சிறந்த நடிகன்' என்று சொல்வதை என்னால் ஏற்க முடியவில்லை."

—சிவாஜி கணேசன்
சென்னை, வாணிமகால் விழாவில்.

நடிப்புலகில்

முதல்வர்

அவையடக்கம், தன்னடக்கம் இரண்டும்
நிரம்பிய 'நடிகர் திலகம்', "நடிப்புலகில்
இன்று முதல்வராக இருக்கிறார்"
என்பதை விளக்கும் கட்டுரை இது.



மூன்று ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் எங்கள் காரியாலயத்திற்கு ஒரு கடிதம் வந்தது 'பேசும்-பட'த்தின் ஆயிரமாயிரம் ரசிகர்களில் ஒருவரான அந்தக் கடிதத்தை எழுதியவர் "சிவாஜி கணேசன் இன்று நடிப்பில் தன்னிகரின்றி விளங்குகிறார். அவருக்கு 'நடிகர் திலகம்' என்ற பட்டத்தை அளிக்க 'பேசும்-படம்' ஏன் முன்வரக்கூடாது? அதை விமரிசையாகக் கொண்டாட ஒரு விழாவும் ஏற்படுத்த வேண்டும். அதற்கு அன்பளிப்பாக இரண்டு ரூபாயும் அனுப்பி யிருக்கிறேன்" என்று எழுதி யிருந்தார்.

ரசிகர் தெரிவித்த கருத்தை 'பேசும்-படம்' ஏற்று அச்சின் சக்தியைக் கொண்டே 'நடிகர் திலகம்' என்ற பட்டத்தையும் சிவாஜி கணேசனுக்கு அளித்தது.

அதன் பின்னர், நமது காரியாலயத்திற்கு இன்னும் சற்று காரசாரமாகவே கடிதங்கள் வரத் தொடங்கின.

'நடிகர் திலகம்' தன்னிகரின்றி தமிழ் நாட்டில் மட்டும்தான் இருக்கிறாரா? அவருக்கு இணையான வட இந்திய நடிகர் யார்? அவருக்கு இணையான நடிகர்கள் யாரேனும் மேல் நாட்டில் இருக்கிறார்களா? உலகிலேயே சிறந்த நடிகர் யார்? என்பன போன்ற நூற்றுக்கணக்கான கடிதங்கள் கேள்வி பாணங்களைத் தொடுத்துக்கொண்டு 'பேசும்-படம்' தபால் பெட்டியை நிரப்பின.

இதே சமயத்தில்தான் 'கட்டபொம்மன்' நாடக அரங்கேற்றமும் நடைபெற்றது. நாடகத்திற்கு ஒருநாள் தலைமை வகித்துப் பேசிய அறிஞர் அண்ணாதுரை, "உலகப் புகழ்பெற்ற மார்லன் பிராண்டோகூட கணேசனைப் போல நடிப்பதென்றால் கஷ்டம்தான். ஒரு வேளை முயற்சித்தால் மார்லன் பிராண்டோ கணேசனைப்போல நடிக்கக் கூடும்" என்று சொன்னார்.

அண்ணாதுரை மார்லன் பிராண்டோவுடன் கணேசனை இணைத்துப் பேசியதிலிருந்து, 'மார்லன் பிராண்டோ யார்? அவர் எந்த நாட்டு நடிகர்? அவரைவிட சிறந்த நடிகன் மேலை நாடுகளில் இல்லையா?' என்பன போன்ற கேள்விகளும் 'பேசும்-பட'த்தின் 'தபால் பெட்டி'யை நிரப்ப உதவின.

சினிமாவைப் பார்க்காமல் சினிமாவைப் பற்றியும், அதில் உழைப்பவர்களைப் பற்றியும் அறிவுரைகள் கூறும் மற்ற அரசியல் தலைவர்களுக்கும் அண்ணாதுரைக்கும் ஒரு பெரும் வித்தியாசம் இருக்கிறது. அண்ணாதுரை அடிக்கடி படம் பார்ப்பவர்; ஆங்கிலப் படங்களையும் பார்ப்பவர். எனவே பிராண்டோவின் படங்களைப் பார்த்து மார்லன்

பிராண்டோவின் நடிப்பை எடை போட முடிந்தவர். ஆகவே கணேசனுடன் பிராண்டோவை அவர் ஒப்பிட்டுப் பேசியது தமிழ்ப்பட ரசிகர்களிடையே ஒரு பெரிய விழிப்பையும் பரபரப்பையும் உண்டாக்கியது.

"அப்படியானால் உலகின் சிறந்த நடிகர் யார்?..." என்ற கேள்விக்கான விடையும் அருகில் வர ஆரம்பித்து விட்டது! ஆனால் அதற்கு முன்னால் 'மேலைநாட்டின் சிறந்த நடிகர் மார்லன் பிராண்டோ தானா?" என்ற கேள்வியும் கூடவே பிறந்து விட்டது! பிராண்டோவைப்பற்றித் தெரிந்து கொள்ளும் ஆவல் மக்களிடையே எழுந்தது! ஒரு சில பத்திரிகைகள் பிராண்டோவைப்பற்றி விளக்கம் தந்தன; அவரது வரலாற்றை சொல்லிலே சித்தரித்துத் தந்தன. சில பிராண்டோவையும் கணேசனையும் ஒப்பிட்டு கட்டுரைகளைத்தந்தன. ஆனால் 'உலகிலேயே சிறந்த நடிகர் யார்? சிவாஜி கணேசன்தானா?' என்பதற்கு இவை விடையும் தரவில்லை; விளக்கமும் சொல்லவில்லை!

ஆசிய ஆப்பிரிக்கப் படவிழாவில் கணேசன் சிறந்த நடிகர் எனப் பாராட்டப்பட்டதும், தொடர்ந்து அவரது பாகப்பிரிவினை, தெய்வப்பிறவி, படிக்காத மேதை படங்கள் வெளிவந்ததும் மக்களிடையே சிறந்த நடிகர் உலகிலேயே நம் கணேசனாகத்தான் இருக்க முடியும் என்ற எண்ணத்தை மேலும் வேரூன்றச் செய்து விட்டன. அதன் பிரதிபலிப்பாக வழக்கம்போல அக்கருத்துக்களைத் தாங்கிய நூற்றுக் கணக்கான கடிதங்களும் நமது காரியாலயத்தின் மீது படை யெடுத்தன.

'உலகின் சிறந்த நடிகர் யார்? சிவாஜியா? அப்படி அவர் இல்லாவிடில் வேறு யார்?" என்ற கேள்வியே அவற்றில் தொண்ணூறு சத விகிதம் இருந்தன.

இந்தக் கேள்விக்கு விடையை அவ்வளவு சுலபத்தில் கொடுக்க முடியும் என்று எங்களுக்குத் தோன்றவில்லை. தவிர, சிறு பதிலுக்குள் அடக்க முடிந்த பொருளாகவும் இது அமையவில்லை. எனவே "உலகின் சிறந்த நடிகர் யார்?" என்ற கேள்விக்குப் பதிலளிக்கும் பொறுப்பை ஏற்று, அதை ஒரு கட்டுரையாக வெளியிட நாங்கள் முடிவு செய்தோம்.

உலகில் ஒருவன் பெரியவனாகவோ, சிறந்தவனாகவோ ஆவது எப்படி?

இதற்கு ஒரு சிறு கதை சொல்வார்கள். முதலில் அவன் வீட்டுக்குப் பெரியவனாவான்; பின்னர் அந்தக் கிராமத்தில் சிறந்தவனாவான்; அடுத்து ஒரு நகருக்குப் பெரியவனாவான்; தொடர்ந்து அந்த



"உங்கள் இதயம் வெடித்து விடுமோ என்று எண்ணும்படி யான அளவில் சோகச் செய்தி ஒன்று உங்களுக்கு வருகிறது. அதைக் கேட்டதும் ஏற்படக்கூடிய உணர்ச்சிகளைச் சித்தரி யுங்கள்" என்று சொன்ன போது 'நடிகர் திலகம்' சித்தரித்த முகபாவங்கள் இப்பக்கங்களை அலங்கரிக்கின்றன.

மாவட்டம், தேசம் இவற்றில் பெரியவனாவான்; கடைசியில் உலகில் முதல்வனாவான் என்று சொல்வார்கள்.

படிப்படியாக முன்னேறித்தான் ஒருவன் வர வேண்டும் என்பதையே இது காட்டுகிறது. இந்த அடிப்படையில் தான் நாம் 'நடிகர் திலக'த்தையும் அணுக நேரிடுகிறது. இதுவே சிறந்த முறை என்பதுடன், சிக்கல்களை விடுவிக்கவும் இது துணைபுரியும் என்று நாம் நம்புகிறோம்.

இந்த அடிப்படையில் பார்க்கும்போது 'தமிழ் நாட்டின் சிறந்த நடிகர் கணேசன்தான்' என்பதில் யாருக்கும் சந்தேகமே இருக்காது. "தம்பி கணேசன் இன்று நடிப்புலகின் விடிவெள்ளியாக, நாங்கள் யாருமே எண்ண முடியாத ஸ்தானத்தில் இருக்கிறார். அவர் எங்களுக்கு ஒரு விடிவெள்ளியாக, நாங்கள் எல்லோரும் பின்பற்றும் வகையில் இருக்கிறார்" என்று எம். ஜி. ஆர். கூறுவதையே, இன்று தென்னகத்தின் எல்லா நடிகர்களும் ஒப்புக் கொள்ளுகிறார்கள். இது ஏற்கப்பட்ட ஒரு யோசனை. முடிவு செய்யப்பட்டு விட்ட ஒரு விஷயம். இதில் அபிப்பிராயப் பேதத்திற்கே இடமில்லை!

அப்படியானால் இந்தியாவின் சிறந்த நடிகர் இவர்தான் என்பதை எப்படி முடிவு செய்வது? இதற்கு நாம் சில சான்றுகளை மேற் கொள்ள வேண்டியிருக்கிறது. அதற்கு "முன்பாக நடிகன் என்பவன் யார்?" என்பது பற்றி சிறிது விளக்கம் தரவும் ஆசைப்படுகிறேன்.





"இதயத்தில் எழும் எண்ணங்களை சொற்களாக வடிப்பதை விட, முகத்தில் வரிகளாக எவன் காட்டுகிறானோ அவனே சிறந்த நடிகன்" என ஒரு மேலை நாட்டு டைரக்டர் கூறியிருக்கிறார்.

"நடிகன் என்பவன் பேசவே கூடாது! பாவத்தால் அவன் பேச வந்ததைச் சொல்ல வேண்டும்!" என்று அபிப்பிராயம் தந்திருக்கிறார் ஒரு பிரஞ்சு நாடகாசிரியர்.

குறிப்பிட்ட சில பாத்திரங்களில்தான் சோபிக்க முடியும். அவையல்லாத மற்ற பாத்திரங்களில் ஒரு நடிகன் தன் திறமையைக் காட்டிச் சோபிக்க முடியாமற் போனால் அவன் முழு நடிகனாகப் பிரகாசிக்க முடியாது!

இந்த அடிப்படைகளில் வைத்து, 'நடிகன்' என்பவனது இலக்கண, லட்சண அளவுகளைக் கொண்டு 'நடிகர் திலக'த்தை அணுகுவோம்.

குறிப்பிட்ட பாத்திரங்களில்தான் 'நடிகர் திலகம்' சோபிக்கிறார் என்பதில்லை. எந்தப் பாத்திரத்தைக் கொடுத்தாலும் அந்தப் பாத்திரமாகவே மாறி விடும் உண்மையான நடிகனின் பண்பு அவரிடம் ஏராளமாக மண்டிக்கிடக்கிறது. அவர் ஏற்று நடித்துள்ளது போல பலதரப்பட்ட பாத்திரங்களை வேறு யாரேனும் ஏற்று நடித்துள்ளார்களா. என்று பார்த்தால் நம் நாட்டில் யாருமே இல்லை; ஆசிய நாடுகளிலும் யாரும் இல்லை; மேற்கத்திய நாடுகளில் ஒரே ஒரு பிராண்டோதான் தென்படுகிறார்! இதைப் பற்றி பின்னர் விரிவாகக் கவனிப்போம்.

நமது நாட்டைப் பொருத்தவரை கதாநாயகன் பாகத்தை ஏற்று நடிக்கும் நடிகர்களில் கணேசனுடன் ஒப்பிடக்கூடிய அளவில் இருப்பவர்கள் வெகு சிலர்தான். பம்பாய் பகுதியில் ஒரு திலீப்குமாரும் ராஜ் கபூரும், கல்கத்தா தொகுதியில் ஒரு உத்தம்குமாரும்தான் காட்சி தருகிறார்கள்.

திலீப்குமார் சோக நடிப்பில் பிரபலமான நடிகர். தவிர, பண்பட்ட நடிப்பும் கொண்டவர். கணேசனைப் போல் பலதரப்பட்ட பாத்திரங்களில் அவர் தோன்றியதே இல்லை. குறிப்பாக 'நடிகர் திலகம்' ஏற்றுள்ள ஹாஸ்ய பாகங்களை திலீப் செய்ததேயில்லை. காரசாரமான வசனங்கள்பேசும் 'காஸ்டியூம்' வேஷத்தில் அவர் ஈடுபடுவதும் இல்லை. ஜெமினி தயாரித்த இன்ஸானியத், யாஹூதி, மொகலே ஆஜம் படங்கள் இதைத்தான் நிரூபிக்கின்றன.

ஏவி.எம்.மில் ஒரு சமயம் 'நடிகர் திலகம்' நடித்த படமொன்றைப் (அந்த நாள்) பார்த்த திலீப் "நான் கண்ட மிகச் சிறந்த நடிகர். என்னை விடத் திறமைசாலி" என்று ஏவி. எம். அதிபரான மேனனிடமே சொல்லியிருக்கிறார். இதை மேனன் அவர்கள், சிவாஜிக்கு தன் ஸ்டுடியோவில் அளித்த விருந்தொன்றில் வெளியிட்டார்.

ஹாஸ்ய நடிகர் தங்கவேலுவின் வீட்டில் என். எஸ். கே. யின் படம் திறந்து வைக்கப்பட்ட சமயம் அதில் பங்கு கொண்டு, ஜெமினி அதிபர் வாசன் பேசியபோது, "நான் பல ஹிந்தி நடிகர்களுடன் பழகியிருக்கிறேன். அவர்களிடமிருந்து வேலை வாங்கியிருக்கிறேன். ஆனால் நமது நடிகர்களுக்கு இணையாக நான் அவர்களைச் சொல்ல மாட்டேன்" என்று பொதுப்படையாகச் சொன்னார். வாசன் இவ்வாறு தன் கருத்தைத் தெரிவித்தபோது 'நடிகர் திலகம்' அவரது படத்தில் நடித்துக் கொண்டிருக்கவில்லை; ஆனால் திலீப்குமார் நடித்துவந்தார்!

சென்னைக்கு 'அமரதீபம்' ஹிந்திப் பதிப்பில் நடிக்க வந்த தேவ் ஆனந்தும், 'தெய்வப் பிறவி' ஹிந்திப் பதிப்பில் நடிக்க வந்த பால்ராஜ் சஹானியும் "அவரைப் போல் நடிக்க நாங்கள் முயற்சிக்கிறோம்" என்று சொல்லியிருக்கிறார்கள். இதையெல்லாம் கணேசனின் நடிப்புக்கு அவர்கள் அஞ்சலி செய்வதாகத்தான் கொள்ள வேண்டுமே தவிர, களத்தில் அவர்கள் தோற்றவர்கள் என்ற மனோபாவத்தில் வைத்துக் கொள்ளவே கூடாது.

நமது கவனத்தை அடுத்ததாகக் கவருபவர் ராஜ்கபூர். 'தாஸ்தன்' படத்தில் கோமாளியாகக் கண்ட ராஜ்கபூர்தான், 'ஜாக்தே ரஹோ' படத்தின் அப்பாவிக் கதாநாயகனாக மாறி, சர்வதேசப்பட விழாவில் பரிசும் பெற்றுள்ளார். சர்வதேசப் பட வுலக ரீதியில் இன்று வெளிநாட்டாரிடையே நன்கு தெரிந்திருக்கும் இந்திய நடிகர் ஒருவர் உண்டென்றால் அவர் நமது மதிப்புக்குரிய ராஜ்கபூர்தான்.

வட இந்திய நடிகர்களிலேயே, குறிப்பாக ஹிந்தி நடிகர்களிடையே பலதரப்பட்ட பாத்திரங்களை ஏற்று நடித்துள்ள கதாநாயகன் ஒருவர் உண்டு என்றால் ராஜ்கபூரை துணிந்து காட்டலாம். கோமாளி நடிப்புக்கு மட்டுமல்ல, சிறந்த குண சித்திரப் பாத்திரங்களையும் ஏற்று நடிக்க முடியும் என்று ஜாக்தே ரஹோ, பூர் ஷீபா ஹோகி, அனாரி படங்களின் மூலம் அவர் நிரூபித்துக் காட்டினார்.

ஆனால், ஒரு வட்டம் என்று இருந்தால் அதற்குள்ளேயே சுற்றி சுற்றி வருவது போல, அவர் ஏற்று நடித்த பெரும்பாலான வேஷங்கள் ஒன்றுக்கு ஒன்று தொடர்பு கொண்டவைகளாக இருக்கின்றனவே தவிர, அவை முற்றிலும் புதுமையாக இருந்ததில்லை. இதை அனைவரும் ஒப்புக்கொள்வார்கள்.

இந்த அடிப்படையில் மட்டுமல்லாது, பொதுப்படையாகப் பார்க்கப் போனாலும் திலீப்குமார், ராஜ் கபூர் இவர்களைவிட நமது 'நடிகர் திலகம்' மேலோங்கி நிற்கிறார்.

இன்றைய தினம் ஹிந்திப் படங்களில் பிரதம பாகங்களை ஏற்று

> கட்டுரை : ஸாரதி
>
> புகைப்படம் : பி. கே. நடராஜன். ஏவி. எம். மில் பதினன்கு ஆண்டு புகைப்பட நிபுணராகப் பணியாற்றிய இவர், தற்சமயம் தனியாகப் பணியாற்றுகிருர். பல படங்களுக்கு புகைப்பட நிபுணராக இருந்து வருகிருர் இவர்.

நடிக்காமல், அதே சமயம் ஹிந்திப் படவுலகின ஒவ்வொரு நடிகரும், நடிகையுயபாராட்டி பேசுமளவிற்கு சிவாஜி பிரபலமாகி யிருக்கிருர் என்ருல் அவரது நடிப்புத் திறன் தான் காரணம். அவரைப் பற்றி அறிந்து கொள்ள பல ஹிந்தி நடிகர்கள் துடிக்கிருர்கள்.

கல்கத்தா பகுதியில் நடிகர்களில் துருவ நக்ஷத்திரமாக காட்சி தருபவர் அவர்களது பிரபல கதாநாயகன உத்தம்குமார்தான். இவர் நடித்த படங்கள் சிலவற்றை நான் பார்த்திருக்கிறேன். நான் அறிந்தவரை. இவர் நடித்தபடங்கள் பலவும் பெரும் வெற்றியைத் தேடித் தந்திருக்கின்றன.

ஆனுலும் 'நடிகர் திலக'த்தை விட இவர் நடிப்பில் சிறந்து விளங்குகிருர் என்பதை நான் ஒப்புக் கொள்ள முடியாது. வங்கத்தின் தலைசிறந்த நடிகர் அவர் என்பதை ஒப்புக் கொள்ளும் எனது கல்கத்தா நண்பர்கள் கூட, 'நடிகர் திலகம்' தான் இந்தியாவின் முதல் நடிகர் என்பதை மனதார ஒப்புக் கொள்ளுகிருர்கள்.

இதைத்தான் லண்டனிலிருந்து வெளிவரும் பிரபல 'டைம்' பத்திரிகையும் எழுதியிருந்தது.

இதுவரை கவனித்து வந்ததிலிருந்து நமதுபாரதநாட்டின் முதல் தர நடிகர் சிவாஜி கணேசன்தான் என்பதில் சர்ச்சைக்கோ, சந்தேகத்திற்கோ இடமிருக்காது.

ஆசியாவின் சிறந்த நடிகராகி, உலகின் சிறந்த நடிகராக 'நடிகர் திலகம்' எப்படி விளங்குகிருர் என்பதை அடுத்த இதழில் விவரமாகக் கவனிப்போம்.

★

வாசகர்களுக்கு

படத்தின் நூருவது நாள் விழாக்களில் பங்கு கொள்ள, பொதுக்கூட்டங்களில் கலந்து கொள்ள, தலைமை வகிக்க, வெளிப்புறப் படப்பிடிப்புக்கான காட்சிகளில் கலந்துகொள்ள, இப்படியாக பல சந்தர்ப்பங்களில் நமது நடிகர், நடிகைகள் உங்கள் ஊருக்கு வந்திருப்பார்கள். அப்படி அவர்கள் உங்கள் ஊருக்கு வந்தபோது நடந்த சுவையான சம்பவங்கள் ஏதேனும் இருந்தால் எழுதி அனுப்புங்கள். 'எங்கள் ஊரில் நடந்தது' என்று தலைப்பிட்டு கடிதங்களை, 'பேசும் படம்', ஆற்காடுரோடு, சென்னை 24 என்ற விலாசத்துக்கு எழுதி அனுப்புங்கள். முடிந்தால் புகைப் படங்களையும் சேகரித்து அனுப்புங்கள்—ஆசிரியர்.

ஸ்டூடியோ விஜயம்

ராஜாமணி பிக்சர்ஸ் செட்டுக்கு வெளியே பீம்சிங் காட்சிபற்றி விவரிக்க, ஜெமினி கணேசன் கவனமாகக் கேட்கிறார். தயாரிப்பாளர்கள் நடிகர் எம். ஆர். சந்தானமும் மோஹன கிருஷ்ணனும் உடனிருக்கிறார்கள்.

அவனைப் பார்த்தால் படித்தவன்போல் தோன்றுகிறது. இளமையும் அழகும் கொண்ட அந்த இளைஞன் வரும் வேகத்தைப் பார்க்கும்போது - அவன் முகத்திலே யிருந்த கடுகடுப்பையும் கலைந்த சிராப்பையும் பார்க்கும்போது - தீபாவளிக்கு மாமியார் வீட்டில் வைரமோதிரம் தராததால் கோபமடைந்து கிளம்புவதைப் போலிருந்தது. அந்தப் பெரிய ஹாலில் இருந்த மாடிப்படிக்கட்டின் மேல்முனையைப் பார்த்த எனக்கு மேலும் திடுக்கிடச் செய்யும் காட்சி காத்திருந்தது.

ஆம், அவன் பின்னால் ஒரு யுவதி சோகமே உருவானவளாக, ஆடம்பரமேதுமின்றி, கண்களிலிருந்து நீர் வழிந்தோட, விம்மியபடி வந்தாள். அவள் கையைப்பற்றி அவன் தான் அவ்வளவு வேகமாக இழுத்து வந்தான்.

"கண்ணே, கனிரசமே, கற்கண்டே, தேனே, மானே" என்று அழைக்க வேண்டிய யுவதியை அப்படி முரட்டுத்தனமாக அவன் இழுத்து வந்தான் என்றால் காரணம் எதுவாக இருக்கக் கூடுமென்று நான் யோசித்தபோது, மேலும் திகைப்பூட்டும் வண்ணம் அவர்கள் பின்னே ஒரு வாலிபன் ஓடோடி வந்தான். கீழே சிலர் மூட்டை முடிச்சுக்களுடன் நின்றிருந்தனர். மாப்பிள்ளையை அவமானப்படுத்தி அனுப்ப முன் கூட்டியே, பின்னால் வந்த வாலிபன் திட்டமிட்டிருந்தானா? இல்லை; தங்கையை அந்த வீட்டிலிருந்து படித்த வாலிபன் இழுத்து வந்தானா?

இதற்கெல்லாம் விளக்கம் தெரிய வேண்டுமானால் ராஜாமணி பிக்சர்ஸாரின் முதல் படம் வரும் வரை நீங்கள் காத்திருக்க வேண்டும். படித்த வாலிபனாக ஜெமினி கணேசனும் அவனால் இழுத்து வரப்பட்ட யுவதியாக சாவித்திரியும், அவர்கள் பின்னால் வந்த வாலிபனாக சிவாஜி கணேசனும், கீழே நின்றவர்களாக தங்கவேலு, சரஸ்வதி முதலியோரும் நடித்த அந்தக் காட்சியை பிம்சிங் படமாக்கினார். மோஹன ஆர்ட்ஸ் உரிமையாளர் மோஹன் கிருஷ்ணனும் நடிகர் சந்தானமும் தயாரித்துவரும் ராஜாமணி பிக்சர்ஸின் இந்தப் படம் நெப்டியூன் ஸ்டுடியோவில் வேகமாக வளர்ந்து வருகிறது. கொட்டாரக்கரா எழுதிய கதைக்கு ஆரூர்தாஸ் வசனமெழுதியிருக்கிறார்.

ஓய்வு நேரத்திலே சிறிது கண்ணயர விடமாட்டேனென்கிறாரா, சந்தானம்?

'மணப்பந்த'லில் அசோகன், எஸ். எஸ். ஆர்.

ராஜா ஒரு இளைய ஜமீன்தார். செல்வமும இளமையும் அழகும் கொண்ட வாலிபன் வாழ்க்கையை வளமுறச்செய்ய தானே ஒரு பெண்ணைத் தேடிக்கொண்டான். அவள் பெயர் சாந்தி.

அவளை இயற்கை எழிலரசியாக்கி விட்டிருந்தது. பருவம் அவளுக்கு மணம் தந்தது. ராஜா அந்த ரோஜாவின் அழகில் மயங்கினன். அதன் மணம் நுகர அவளை மனையாளாக்கிக் கொண்டான். அவர்களது வாழ்க்கையும் இன்பமாக இருந்தது.

ஆண்டுகள் ஏழு மாண்டு போயின. ராஜாவின் தாய், தனக்கு ஒரு பேரக் குழந்தையில்லையே என்று வேதனைப் பட்டாள். சாந்தி பிள்ளைப் பேறில்லாமல் மனச்சாந்தியிழந்து தவித்தாள். அவள் உள்ளம் எள்ளளவும் நிம்மதியின்றி வேதனைப்பட்டு உடலை உருக்கியது. கண்டவர்கள் பார்வை பட்டால் திருஷ்டிவிழும் அவளுக்குப் பார்வை குறைந்தது. மணாளனையும் மாமியையும்



ஸ்ரீ வரதராஜா பிலிம்ஸ் ''மடாதிபதியின் மகள்'' படத்திற்காக பாடல் ஒலிப்பதிவு நடைபெறப் போகிறது. குல்லாயுடனிருப்பவர் படத்தை வெளியிடும் ஸ்ரீ வரதராஜா பிலிம்ஸ் பார்த்தசாரதி.

பார்க்க விரும்பாமல் தவித்த அவளைப் பார்வையற்றவளாக்கி விட்டது வேதனை. இப்போது அவளுக்குப் பணிவிடையினால் சாந்தி கிடைத்தது.

ஊர், உற்ருர், சுற்றம் சும்மாயிருக்குமா? ராஜா சாந்தியை உதறிவிட்டு வேருெருத்தியை மணக்க வேண்டும் என்ருர்கள் மற்ருேர். ராஜா திகைத்தான். முடிவு......?

விரைவில் வரவிருக்கும் மகாதேவி பிக்சர்ஸாரின் ''பெண் குலத்தின் பெருமை'' நமக்குத் தரும் அதற்கான பதிலை.

பி. வி. என். புரொடக்ஷன்ஸ் ''நாகநந்தினி'' செட்டுக்குள் வந்த வி. ஆர் ராஜகோபாலை...

சாந்தியாக சாவித்திரியும் ராஜாவாக நாகேஸ்வரராவும் நடிக்கும் இப்படத்தில் மற்றும் கண்ணாம்பா, தங்கவேலு, இ. வி. சரோஜா, வி. ஆர். ராஜகோபால், மோகனா, தங்கவேலு, எம். ஜி. சக்கரபாணி முதலியோரும் நடித்து வருகிருர்கள். எம். எஸ். மணி டைரக்ஷனில் வாஹினி விஜயாவில் வளரும் இதன் திரைக்கதை வசனங்களை முகவை ராஜமாணிக்கம் எழுதியிருக்கிருர்.

* * *

சந்திரன் உத்தமன். சந்தர்ப்பவசத்தால் அவன் திருடனுக மதிக்கப்படுகிருன். அவனுடைய சகோதரி சீதாவின் நேர்மைக்கும் களங்கம் கற்பிக்கப்படுகிறது. தங்கையின் வாழ்வுக்காக உயிரைக் கூடத் தியாகம் செய்யத்துணிந்த சந்திரனுல், அவளது கற்பு நெறி சந்தேகிக்கப்படுவதை மட்டும் பொறுக்க முடியவில்லை.

''நான் திருடன். ஆனுல் என் சகோதரி கற்பு நெறி தவறியவளல்ல'' என்று அவன், கணவன் ரவியிடம் வாதாடுகிருன். ரவி ஏன்

...இப்படித் தலைகீழாகத் தொங்கவிட்டுப் படமாக்கினுர் டைரக்டர் நாதன்.



அஜித் உணர்ச்சியுடன் தமிழ் வசனம் பேசுவதை தயாரிப்பாளர் பார்த்தசாரதி கேட்டு மகிழுகிருர்; ஸ்ரீவரதராஜா பிலிம்ஸ் ''மடாதிபதியின் மகள்' படத்திற்காக.

நெக்லேஸைத் திருடி அதை சித்ராவின் கழுத்திலணிவித்துவிடுகிருன். அதிலுள்ள லாக்கெட்டில் ஒரு யுவனின் புகைப்படமிருந்ததால் ரவி சித்ராவை சந்தேகித்தான்.

சந்தேகப்பட்டான் தெரியுமா? மணத்திற்கு மாப்பிள்ளை வீட்டார் கேட்ட வைரநெக்லேஸை சந்திரனுல் தாமுடியவில்லை. மணம் நடைபெருமல் போய் விடுமே என்ற பயத்தால் திருடத்துணிந்தான். செல்வந்தர் மகள் சித்ராவின் வைர

சந்துருவின் சமாதானத்தையும் வில்லை

ஆகவே சந்துரு. ரவியை சித்ராவிடமே அழைத்து வந்தான். சித்ரா சந்துருவை மனமாரக் காதலித்தாள்; ஆகவே மகிழ்ச்சியோடு

பிரபுராம் பிக்சர்ஸாரின் ''விடி வெள்ளி'' படத்திற்கான வெளிப்புறக் காட்சியில் ஸ்ரீதர் இரட்டை மாட்டு வண்டியில் சவாரி செய்கிருர்.

வரவேற்றாள். ஆனால் அவள் தந்தையின் முன்கோபமும் வெறுப்பும் விஷயத்தை மேலும் குழப்பி விட்டன.

பிரபுராம் பிக்சர்ஸார் தயாரிக்கும் 'விடிவெள்ளி' படத்திற்காக இக்காட்சி வாஹினி-விஜயா ஸ்டுடியாவில் சுடப்பட்டது. சந்துருவாக சிவாஜி கணேசனும், ரவியாக பாலாஜியும் சித்ராவாக சரோஜா தேவியும், செல்வந்தராக ரங்கராவும் நடித்தனர். ராஜம் சீதாவாக நடிக்கிறார். மற்றும் டி. ஆர். ராமச்சந்திரன், பத்மினி பிரியதர்சினி முதலியோரும் நடிக்கும் இப்படத்தின் கதை-வசனம்-டைரக்ஷன் பொறுப்புக்களை ஸ்ரீதர் ஏற்றிருக்கிறார். ஏ. எம். ராஜா இசையமைக்கும் இப்படம் அனேகமாக பொங்கலன்று திரையிடப்பட்டு விடும்.

* * *

வாஹினியில் ஒரு நண்பருடன் பேசிக்கொண்டிருந்தேன். தயாரிப்பாளர் வீரப்பா ஒரு செட்டுக்கு வெளியே அமர்ந்திருந்தார். அவரது பி. எஸ். வி. பிக்சர்ஸார் தயாரிக்கும் ''வீரக்கனல்'' படத்திற்காக ஏதாவது முக்கிய காட்சி சுடப்படுகிறதோ என்று நினைத்து உள்ளே சென்றேன். நான் நினைத்தது வீண் போகவில்லை. செட்டுக்குள்ளே சந்திர மண்டலத்தைக் கண்டேன். வெளியே ஆதவன்.—உள்ளே சந்திரன். இந்த அற்புதத்தைக் கலையுலகில்தானே காண முடியும்?

''சித்திரமே சித்திரமே சிரிக்கக் கூடாதா?'' என்ற பாடல் கணீரென்று ஒலித்தது. ஜெமினி கணேசன்—அஞ்சலிதேவி சம்பந்தப்பட்ட கனவுக்காட்சி அது. பி. எஸ். வி. பிக்சர்ஸார் ஏராளமான பொருட்செலவில் தயாரித்து வரும் 'வீரக்கனல்' படத்தை பிரபல ஒளிப்பதிவாளர் ஜி. கே. ராமு டைரக்ட் செய்து வருகிறார். முடிவடையும் கட்டத்திலிருக்கும் இப்படம் விரைவில் திரைக்கு வந்துவிடும்.

பரணி பிக்சர்ஸ் ''ஸ்வப்பன வாழ்வு'' படத்தில் டி. பி. ஹரிசிங்.

நடிகர் திலகம்
போட்டோ-"ஆனருண"

ஸ்வீட் சாவித்திரி

எழுதியவர்கள் | சுசீலா சரளா

"பேசும் படம்" இதழ்களில் 'என் தோழி' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டு வரும் கட்டுரைத் தொடரில் என் கட்டுரையும் இடம் பெறவேண்டும் என்பதற்காக, திரு. சம்பத் என்தோழி பற்றி விசாரித்த பொழுது, நான் சுசீலா-சரளா இருவரது பெயர்களையும் குறிப்பிட்டேன். 'இருவரா?' என்று கேள்விக் குறிபோட்டார் அவர். "ஒருவருக்கு இரண்டு கண்கள் மிகவும் முக்கியம் என்றால் எனக்கு அவர்கள் இருவரும் இரு கண்கள்." என்று நான் குறிப்பிட்டேன். இரண்டு கண்களும் ஒரே சமமாக எப்படி ஒரு பொருளைப் பார்க்குமோ அதேபோல் என் உயிர்த் தோழிகளிருவரும் ஒரே சமமான

...புகைப்படங்கள்...
பி.கே. நடராஜன்
எஸ்.வி. சம்பத்குமார்



← சுசீலா: டி. வி. சுந்தரம் அய்யங்காரின் குமாரர் திரு. துரைஸ்வாமியின் குமாரியான இவர், உயர்தர அரசாங்க அதிகாரியாக இருக்கும் தன் கணவருடன் பம்பாயில் வசித்து வருகிறார்.

அடிக்கடி நேரில் சந்திக்க முடியாத போது, நாளுக்கொரு கடிதமாக எழுதி சாவித்திரியைத் திணற அடிப்பவர் இவர்.

மனப்பண்புடன் எதையும் பார்க்கிறார்கள், புரிந்து கொள்ளுகிறார்கள்.

நான் அவர்களுடன் சில வருடங்களாகத் தான் பழகி வருகிறேன் என்றாலும், எங்களுக்குள்ளே இருக்கும் பிணைப்பின் வலிமையை வார்த்தைகளால் வர்ணித்துவிட முடியாது. அவர்களிருவரும் பெருஞ் செல்வந்தர் குடும்பத்திலே பிறந்து வளர்ந்தவர்களென்றாலும், கர்வத்தின் சாயலைக்கூட அவர்களிடம் காண முடியாது. அவர்களுடன் பழக எனக்குப் பயமாக இருந்தது. என்னுடன் பழக அவர்கள் பயந்தார்கள். ஆனால் அந்த மௌனத்திற்கு நான் முற்றுப்புள்ளி வைத்த அந்த விநாடி முதலே நாங்கள் ஒருவருக் கொருவர் நன்கு புரிந்து கொண்டு விட்டோம்.

என் உயிருக்குயிரான சுசீலாவும் சரளாவும் என்னை இந்த இரண்டு மூன்று வருடங்களுக்குள் பம்பரமாக ஆடவைத்து விட்டார்கள். டி. வி. எஸ். ஸ்தாபனத்தின் கட்டுப்பாடுகளனைத்தையும் காட்டி என்னை மிக மிக நல்ல முறையில் நடத்திச் செல்கிறார்கள் என்றால் அது மிகையாகாது.

காலை ஏழு மணிக்கு வருவதாக போன் செய்தி வரும். நான் முன்தினம் இரவு படப்பிடிப்பு முடிந்து கொஞ்சம் தூங்கி விட்டிருப்பேன். கார் ஹாரன் சப்தம் கேட்டு திடுக்கிட்டு எழுந்திருப்பேன். சுவற்றிலுள்ள கெடியாரம் ஏழு மணி காட்டும்! அவர்களுக்குப் பதில் சொல்வதற்குள் போதும் என்றாகிவிடும். நேரப்படி எதுவும் நடந்தாக வேண்டுமென்பதை, வீட்டில் செயலாற்றியபின்தான் டி. வி. எஸ். ஸ்தாபனத்தில் அவர்கள் தாத்தா புகுத்தினார் போலும்!

—சாவித்திரி.

← சரளா: சுசீலாவின் இளைய சகோதரி இவர் படிப்புடன் பல கலைகளிலும் பயிற்சி பெற்றிருப்பவர்.

இவர் சென்னையிலேயே இருப்பதால் அடிக்கொரு தடவை சாவித்திரியின் வீடு சென்று அளவளாவி விட்டு வந்து, அதைப்பற்றிக் கடித மெழுதி அக்காவுக்கு மகிழ்ச்சியளிப்பவர்.

சுசீலா கூறுகிறார் :

சாவித்திரி என்றவுடனேயே, குறும்புத்தனம் கூத்தாடும் கண்களும் குங்குமம் இலங்கும் நெற்றியும், மூத்துப்பல் வரிசை மின்னும் மோகனப் புன்னகையுடன் கூடிய மங்களகரமான மஞ்சள் பூச்சுடன் விளங்கும் சுந்தரமுகமும் என் கண் முன் நிற்கின்றன.

இதுவே என் முதல் கட்டுரை என்பதாலும், அதுவும் என் உயிர்த் தோழி சாவித்திரியை பற்றி என்பதாலும் பூரிப்புடன் எளிதில் ஒப்புக் கொண்டு விட்டேனே ஒழிய, அது எத்தனை கடினமான ஒரு காரியமாக உள்ளது என்பது இப்பொழுதல்லவா தெரிய வருகின்றது? என்ன எழுதுவது, எதை எழுதுவது? ஆங்கிலத்தில், ''நம் மனதிற்குப் பிடித்த அந்தரங்க பிரீதி உள்ளவர்களை நாம் பார்க்கையில் அவர்களை வண்ண நிற கண்ணாடி அணிந்து பார்க்கிறோம்'' என்று ஒரு பழமொழி உண்டு. அதுபோல் அவரைப் பார்ப்பதால் தானோ என்னவோ குறைபாடுகள் என்னவென்பதே என் சிற்றறிவுக்கு எட்டவில்லை. குறைபாடுகள் இருந்தால் அல்லவா குண நலன்களின் சிறப்பு இன்னும் எடுப்பாக, மேன்மையாக விளங்கும்? சில சமயங்களுக்காக அவரிடம் குடிபுகும் கோபமும் தாபமும் கூட, 'சௌந்தர்ய பிணக்கம்' என்ற மலையாள காவியங்களில் வரும் ஸ்வாரஸ்ய மிக்க கட்டங்கள் போன்றல்லவா தென்படுகின்றன எனக்கு? பல நற்குணங்களின் உறைவிடமாகவிளங்கும் அவரை 'என் தோழி' என்று சொல்லிக் கொள்வதில் எனக்கு ஏற்படும் பெருமை வார்த்தைகளில் வடித்துக் காட்டக்கூடியதல்ல.

முதன் முதலில் நாங்கள் சந்தித்தது என் மனதில் இன்றும் பசுமையாக இருக்கின்றது. 'வஞ்சிக் கோட்டை வாலிபன்' செட்டில் என் தோழி வைஜயந்தியின் அழைப்புக்கிணங்கி படப்பிடிப்பைப் பார்க்க வந்த சமயம் அது. சாவித்திரியும் அன்று 'அவளுடையவரை' பார்க்க வந்திருந்தார்! என் அபிமான நட்சத்திரமாக என்றும் விளங்கும் அவருடன் பேச மிக்க ஆசைதான் எனக்கு. ஆனால் நான தட்டுத் தடுமாறி ஒரு முடிவுக்கு வருமுன், துறுதுறுவென்று அலைந்த அவர் சிட்டுக் குருவிபோல் பறந்து விட்டார். அன்றே நான் ஸ்ரீ கணேசனிடம் மெல்ல என் ஆவலை வெளியிட்டேன். பின்னர்தான் 'கடன் வாங்கி கல்யாணம்' செட்டில் எங்கள் அறிமுகம் ஆயிற்று. அது நல்ல வேளை என்றுதான் சொல்லவேண்டும். இல்லாவிடில் நாளடைவில் நாங்கள் இவ்வளவு நெருங்கிய - பொல்லாதவர்களின் கண்படும் அளவுக்கு-தோழிகளாக ஆகியிருக்க முடியுமா?

அடக்கமும் அமரிக்கையும் அவர் கூடப் பிறந்தவை. எந்த வேளையில் யார் அழைத்தாலும் சால்ஜாப்புகள் ஒன்றும் கூறாது, அவரே சென்று தொலை பேசியில் பேசும் அழகே அழகு. இவை இதர பல நட்சத்திரங்கள் பின்பற்ற வேண்டிய அளவுக்கு பரிபூரணமாக அமைந்திருக்கின்றது அவரிடம். ஸ்படிகம் போன்ற உள்ளும் புறமும் ஒத்த மனம். இதயத்தின் ஆழத்திலிருந்து தான் வார்த்தைகள் உருப்பெறும். முகஸ்துதி, சர்க்கரைப் பூச்சு பெருகிடும் போலி வார்த்தைகளுக்கு அவர் அகராதியில் இடமில்லை.

இரவு, பகல் மூச்சுவிடக்கூட நேரமில்லாது இருந்தாலும், சேய்க்கு உற்ற தாயாக விஜியை (விஜய சாமுண்டீஸ்வரி) வளர்ப்பதில் அவர் காட்டும் அக்கறை அதிசயிக்கத் தக்கது. ரஸிகர்களின் அன்புத் தொல்லைகளுக்கு ஈடு கொடுப்பதில் சற்றேனும் சளைக்காது போட்டி போடுகின்றனர், இந்த இன்ப தம்பதிகள். அவர்களின் எண்ணற்ற கேள்விகளுக்கும் பதில் அளிக்கும் முறையும் அழைக்கப்படும் விசேடங்களுக்கு பல அலுவல்களுக்கிடையே நிராகரிக்காது சென்று சிறப்பிப்பதும் பாராட்டதக்கவை.

கணவனுக்கேற்ற மனைவியாக அவரை பல முறைகளில் கண்டு மகிழ்ந்திருக்கிறேன், ஸ்ரீ கணேசன் அவர்கள் டைபாயிட் ஜுரத்தினால் தவித்த சமயத்தில் முகங் கோணாது

அவர் செய்த பணிவிடை என்னைக் குறிப்பாகக் கவர்ந்தது. அன்று அவர் களையான முகத்தில் குடிகொண்டிருந்த ஆழ்ந்த சோகமும், பலவித சஞ்சலங்களும் அவருடைய மனவலியை ஓரளவு எனக்கு உணர்த்தின. நோயாளி வேதனையால் தவித்த அந்த ஒவ்வொரு கணமும் அதே வலியினை அவரும் மனதில் அணு அணுவாக அனுபவித்தார் என்பதை, அவருடன் நெருங்கிப் பழகும் என்னால் உறுதியாகக் கூற முடியும். வாழ்க்கைப்படகு ஒருவித சலனமுமில்லாமல் சீராகச் செல்வதற்குத் தேவைப்படும் ஒருவருடைய இன்றியமையாத குணங்களை மற்றொருவர் புரிந்து கொண்டு தங்களுக்கென்று சில மணி நேரங்கள் ஒதுக்கிக்கொண்டு, ஜோடிப்புறாக்கள் போல் காணப்படும் அவர்களின் ஒற்றுமை பலர் பொறாமைப்படும் விதத்தில் அமைந்துள்ளது.

அன்பு செய்வதில் அவருக்கு சளைத்தவரல்ல அவர் எஜமானரும். கள்ளமறியா வெள்ளை உள்ளம் படைத்த அவரைப்பற்றி கொள்ளை பெருமை அவருக்கு. 'உங்கள் கடிதங்களைப் படிப்பதிலும், பதில் எழுதுவதிலும் அவள் காட்டும் அக்கறை என்னைக்கூட பொறாமைப்பட வைக்கின்றது' என்று பலமுறை வேடிக்கையாகக் கூறி, எங்கள் நட்பிற்கு மறைமுகமாக தன் உளங்கனிந்த ஆசிகள் அளித்திருக்கிறார்.

இனி ஆருயிர் தோழி என்ற ஸ்தானத்தை விட்டு (கட்டுரைக்காக சலுகை) விலகி, என்னை அவரிடம் ஈர்த்த நடிப்புத் திறனைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் ரசிகை என்ற நிலையிலிருந்து கூற முயலுகிறேன். ஆங்கிலத்தில் கூறும் (Feeble attempt) பலஹீனமான முயற்சி தான் இது.

'மனம்போல மாங்கல்யம்' வாழ்க்கையிலும் அமைந்ததால், முன் அஸ்திவாரமாக படம் இயற்கை நடிப்பினால் சிறந்து விளங்கியது. படாபடாவத்தியென பொரிந்து தள்ளி, பொல்லாத மயக்கு விழிகளைக்கொண்டு பட்டாம் பூச்சி இறக்கைகளென அப்பாவி பள்ளி வாத்தியாரின் மனதைப் படபடக்கச் செய்த அதிசயத்தை

'மிஸ்ஸியம்மா'வில் கண்டோம். உன்னத காவிய சிருஷ்டி 'தேவதா''ஸில் ஓர் ஒப்புயர்வற்ற சோக பிம்பம் பார்வதி. அமோக புகழை அள்ளிக் கொடுத்த பாத்திரம். பார்வதியாகவே சாவித்திரி காட்சியளித்தார் என்றால் மிகையாகாது. பல்வேறுபட்ட உணர்ச்சிகளை வியக்கத்தகு முகபாவங்களின் துணையுடன் சிறந்த நடிப்பினால் உயர்வாகச் சித்தரித்து, ஏற்கும் பாத்திரங்களுக்கு உயிரளிக்கும் அவர் நடிப்பு திறனை வர்ணிப்பதை குறித்து நான் பலஹீன முயற்சி என்று கூறியதன் பொருள் உங்களுக்கு இப்பொழுது விளங்குகிறதல்லவா?

எல்லாருக்கும் நல்லவர்களாக அவர்கள் நடப்பதால் சில படங்கள் தோல்வியுற்றன. சினிமா உலக நண்பர்கள் எல்லாராலுமே நன்மை கிடைத்து விடுமா? தாட்சண்யத்தை இந்தத் தம்பதிகள் குறைத்துக் கொள்ள வேண்டும்.

இப்படிப்பல சம்பவங்கள்; தொகுத்தால் எஞ்சுகின்றன; விரித்தால் பெருகுகின்றன. முடிவாக, தாயாரிடம் எல்லையில்லா பக்தி. தன்னினும் தாழ்ந்தவர்களிடம் பழகும் சரளத்தன்மை. கணவனிடம் மட்டற்ற அன்பு. சிநேகிதிகளிடம் அளவற்ற நட்பு. தொழிலிலுள்ள இதர நட்சத்திரங்களிடம் குணம் ஒன்றையே பார்க்கும் பெருந்தன்மை - இவைகளால் சிறப்புற்று அன்புருவமாக திகழும் அவருக்கு என் தீபாவளி காணிக்கையாக இதைச் சமர்ப்பித்திருக்கின்றேன், வாழ்த்துகளையும் வாரி இறைத்து.

சரளா கூறுகிறார் :

இந்தக் கட்டுரையை எழுதுமாறு அழைப்பு வந்தவுடன் எனக்குச் சில நிமிடங்கள் பிரமிப்பாக இருந்தது. கூடவே பயமும் எழுந்தது. ஏனெனில் பிரபல நடிகையும் பல ரசிக, ரசிகைகளின் விருப்பத்திற்கும் மதிப்பிற்கும் பாத்திரமானவருமான சாவித்திரி கணேஷைப் பற்றி எழுத திறமை போதுமா என்ற ஐயம்தான். ஆயினும், பரவாயில்லை. அவரைப் பற்றி எனக்குத் தெரிந்ததை எழுதினால் போதும் என்று அறியவே,

சிறிது தைரியம் உண்டாயிற்று. அந்த உறுதியினின்று பிறந்துள்ளது இந்தக் கட்டுரை.

சாவித்திரியை நாங்கள் சுமார் மூன்று வருடங்களாக அறிவோம். அறிவோம் எனில் நெருங்கிய பழக்கம் என்ற முறையில் கூறுகிறேன். அதற்கு முன்பு திரை வானில் சுடர் விட்டுப் பிரகாசிக்கும் நட்சத்திரம் என்ற முறையில் மட்டுமே அறிந்திருந்தோம். அவரைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆவல் பலமாக இருந்தபோது, எங்கள் நண்பர் (சாவித்திரியை அறிந்தவர்) ஒருவரிடம் அவரை அறிமுகம் செய்து வைக்கும்படிக் கேட்டதற்கு அவர், ''நீங்களே நேரில் அவருடன் போய் பேசலாம்; அவர் யாரிடமும் நன்றாகப் பழகுவார்'' என்று கூறினார். என்னவென்றாலும் ஒரு சினிமா நட்சத்திரத்தின் விடுநோக்கிச் செல்வதென்றால் உள்ளே விடுவார்களோ, என்னவோ என்ற பயமும் தோன்றத் தானே செய்கின்றது? அதனால் தான் அப்போது நான் அவ்வாறு செய்யத் தயங்கினேன். ஆனால் இன்று புரிகின்றது, அந்த நண்பர் கூறியவை எத்தனை உண்மை பொதிந்த வார்த்தைகள் என்று!

சாவித்திரியை நானும் என் சகோதரியும் அறிமுகம் செய்து கொண்டதே அவரது கணவர் திரு. கணேஷ் அவர்கள் மூலமாகத்தான். எடுத்த எடுப்பிலேயே மிக்க சுதந்திரத்துடன் சரளமாக அவர் சம்பாஷித்தது எங்களுக்கு மிக வியப்பாகத் இருந்தது. அத்துடன் விவரிக்க இயலாத சந்தோஷமும் உண்டாயிற்று. புகழேணியின் உச்சியிலுள்ள நடிகை என்றால் அதன் கூடவே உள்ள குணங்களும் அவரிடமிருக்குமோ என்று நாங்கள் எண்ணியதற்கு முற்றிலும் மாறாக இருந்தது அவர் போக்கு. கர்வம், அலட்சியம், மிடுக்கு போன்றவைகளின் நிழலைக்கூட அவரிடம் காண முடியவில்லை. நடிகைகள் என்றால் இந்த குணங்கள் இருக்கவேண்டும் என்று நான் கூறவில்லை. ஆயினும் சில நட்சத்திரங்கள் இவ்வாறு இருப்பதைக் கண்டிருக்கிறேன். ஆகவே, எங்களிடம் சாவித்திரி காட்டிய பரிவு எனக்கு வியப்பை உண்டாக்கியது. நன்றாகப் பேசியது மட்டுமல்ல. உடனே எங்கள் இல்லத்திற்கு வரவும் ஒப்புக்கொண்டார். அன்று மாலையே வந்திருந்து நெடுநேரம் அளவளாவிக் கொண்டிருந்தார். அவரது இனிய சுபாவமும், சகஜபாவமும், வீட்டிலுள்ளவர்களை அவரையும் எங்கள் குடும்பத்தில் ஒருவராகக் கருத வைத்ததேயன்றி, அந்நியராக நினைக்க இடம் வைக்கவில்லை.

சாவித்திரியிடம் நான் கண்ட மற்றொரு அதிசயிக்கத்தக்க குணம் அவரது எளிமை. ஆடம்பரமற்ற அடக்கமான தோற்றம் அவ

ருடையது. பிற நடிகைகளைப் பார்க்கும்போது, அவரது இந்தப் பண்பு பன்மடங்கு சிறப்புடன் மிளிர்கின்றது. கண்களைக் கூசவைக்கும் ஆடைகளோ, மனதை ரம்யிக்கச் செய்யும் அலங்காரமோ அவரிடம் காண முடியாதவைகள். மிக எளிய உடைகளும், சாதாரணமான அலங்காரமும் அவரது அழகை எடுத்துக் காட்டுகின்றன. மஞ்சள் பூசிய தெளிந்த முகமும், செயற்கை சாதனங்களால் மாசுரூத உருவமும், யாவற்றையும்விட, கழுத்திலே அணிந்துள்ள மாங்கல்யமும் அவர் ஓர் சிறந்த குடும்ப விளக்கு என்பதை உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளக்குகின்றன.

கண்டவுடன் தோன்றி மறைந்து விடும் கவர்ச்சியாக இல்லாது எங்கள் நட்பு தொடர்ந்து ஆழமாக வேரூன்றி விட்டது. இம்மூன்று வருடங்களுக்குள் அவர் எங்களுக்கு மிக நெருங்கியவராகி விட்டார். காலம் குறுகியதாயினும் அவரை நன்கு உணர்ந்து கொண்டது போலவே தோன்றுகிறது.

திரையில் பேசுவது ஒன்றும் அதன் பின் புகல்வதொன்றுமாக இருப்பதை சாவித்திரியிடம் காண முடியாது. முன்னதில் அவர் எவ்வளவு சாத்வீகமும், பொறுமையுமே உருவாக நடிக்கின்ருரோ அவ்வாறே தன் இல்லத்திலும் தோற்றமளிக்கின்ருர். ஆகையால் அவர் இணையற்ற நடிகையாகத் திகழ்வதில் ஆச்சரியமென்ன? மனத்திலுள்ளது வாக்கில் வரும் என்பது போல, தானிருப்பது எவ்வாரு அவ்வாறே நடிக்கவும் செய்கின்ருர். ஆகையால் அவர் அந்தப் பாத்திரமாகவே மாறி விடுவதில் அதிசயமென்ன? அவரது ஒப்பற்ற நடிப்புக்கு இதுவே காரணமென்று நான் நினைக்கின்றேன். இவை தவிர, சில படங்களில் காணும் குறும்புத்தனத்தையும் இவரிடம் நேரே காணலாம். சில சமயம் அவர் பேசும்போது, அவரது குழந்தைத்தனமும், வெகுளியான போக்கும் பார்க்க வேடிக்கையாக இருக்கும். அவருக்குள்ள பதிபக்தியையும் நான் நேரில் கண்டிருக்கிறேன். எப்போதும் கணவர் சொற்படி கேட்டே நடப்பதும், அவருடன் சேர்ந்தே எவ்விடத்திற்கும் செல்வதும் பெருமைக்குரிய பண்புகள். இவ்வரிய குணங்களை சில பெரிய இடத்து பெண்மணிகளிடம் காண்பது கூட அரிதாக வன்றே இருக்கிறது!

எப்போது கூப்பிட்டாலும், பேரயப் பார்ப்பினும், சிறிதும் கடுகடுப்போ, பொறுமையின்மையோ இன்றி அன்புடன் பேசுவது அவருக்கே உரித்தான குணம். சில நடிகைகள் போனில் கூப்பிட்டால் கூட, உடனிருப்பவர்கள் பதில் அளிக்க மறுத்து விடுவார்கள். ஆயின் இந்த மரியாதைக் குறைவான செயலை சாவித்திரியிடம் காணவே முடியாது. தானே வந்து பேசுவது அவரது மெச்சத் தகுந்த பழக்கம். இது ஒன்றே அவரிடம் எனக்குள்ள மதிப்பை வளர்க்கக் காரணமாக இருந்தது. தவிர, எங்கள் குடுபத்தில் நடக்கும் எந்த விசேடங்களுக்கும் அவர் வராமலிருந்ததே கிடையாது. எத்தனை வேலையிருப்பினும், ஷூட்டிங் அவசரமாக இருந்தாலும் மேக்கப்புடனுவது சில நிமிடங்கள் வந்து விடுவார். அவரது இந்தப் பண்பு கண்டு எங்கள் சிநேகிதிகளும் வியந்ததுண்டு. ஏனெனில் எங்களைப்போல் அவர்களும் அவரை முன்பு வேறுவிதமாகக் கற்பனை செய்திருந்ததுதான் காரணம். எங்கள் வீட்டு விசேடங்களை எவ்வாறு விட்டுக்கொடுக்கமாட்டாரோ அவ்வாறே, அவரது வீட்டு வைபவங்களுக்கும் அவர் வந்து அழைக்காமலிருந்தது கிடையாது.

இவரிடம் நான் கண்ட இன்னெரு சிறப்பான குணம் இவரது கள்ளங்கபடற்றமனம். பிறநடிகைகளையோ அவர்களது வரலாற்றையோ இவர் நிந்தனை செய்து நான் பார்த்ததேயில்லை. எவ்விடத்தில் தகுதியும், சிறப்பும் உள்ளதோ அதை ஒப்புக் கொள்ளும் போக்கு யாவருக்கும் வருவதில்லை. ''பிற கலைஞனிடம் உள்ள அருமையை நன்குணர்ந்தவனே சிறந்த கலைஞனுகிருன்'' என்ெருரு ஆங்கிலக் கவி கூறி யிருப்பதற்கு ஓர் வழி காட்டியாக சாவித்திரி விளங்குகிருர். இதை நான்

அருமையான புத்தகங்கள்

117 படங்கள் கொண்ட அட்டவணை மூலம் நீங்கள் மெக்கானிக் ஆகலாம். நீங்கள் ரூ. 25/-க்கு ஒரு ரேடியோ தயார் செய்து மின்சாரத்தைப்பற்றி நன்கு அறியலாம். ரேடியோ ரிப்பேரிங், ஒயரிங், எலக்டிரிகல் மெகானிஸம் இன்னும் பல விஷயங்கள் அடங்கியது. விரிவான புதிய பிரசுரம் ரூ. 5/- டெய்லரிங், கட்டிங் [படங்களுடன்] ரூ. 4/- சோப்பும் வாசனை திரவியங்கள் செய்யும் விதம் ரூ. 4/50. போட்டோ கலை ரூ. 3/- படங்கள் வரைவது ரூ. 3/- பூ தையல் வேலை ரூ. 4/- ஹிந்திபோதினி ரூ. 4/-

அதிசயமான ஸெக்ஸ் புத்தகங்கள்

மணவாழ்க்கை 88 படங்களுடன் ரூ. 5/-

பெண்ணை வசியம் செய்வது ரூ. 4/- கொக்கோகம் ரூ. 3/- காமசூத்திரம் [படங்களுடன்] ரூ. 6/- குடும்பக் கட்டுப்பாடு ரூ. 6/- ரதி சாஸ்திரம் ரூ. 3/- ஸெக்ஸ் வாழ்க்கை ரூ. 3/- ஸெக்ஸ் அவயவங்களின் 325 படங்கள் (அமெரிக்கன் வெளியீடு) ரூ. 5/- தேன் நிலவு ரூ. 3/- ஆண் பெண் ஸெக்ஸ் புதிர்கள் [2 பாகங்கள்] ரூ. 5/- காதல் செய்யும் கலை ரூ. 3/- அழகிய மங்கைகள் 150 படங்கள் ரூ. 7/- மணவாழ்க்கையின் இன்பங்கள் ரூ. 4/50 பருவமங்கை ரூ. 3/- இரகசியக்காதல் கடிதங்களும் பதில்களும் ரூ. 3/50 படுக்கை யறைப் படங்கள் 3 பாகங்கள் ரூ. 6/.

வி. பி. சார்ஜ் புத்தகம் ஒன்றுக்கு ரூ. 1/-
மூன்று புத்தகங்களுக்கு ரூ. 1/50

GLOBE BOOK DEPOT,
(70-2) Post Beat 19,
Aligarh City.

அவரை பெருமைப் படுத்துவதற்காக அல்ல, ஆனல் கண்கூடாக அறிந்து கூறும் வார்த்தைகளாகும். இவைதான் அவருக்குப் பிற மனிதரிடமோ, சக நடிக, நடி கைகளிடமோ சிறந்த மதிப்பையும் பிரியத்தையும் உண்டாக்கி விட்டன என்று நினைக்கிறேன். மற்றும் தன்னைப் பற்றிய கர்வமோ, உயர்ந்த எண்ணமோ அவரிடம் கிடையாது. இவர் நடிப்பைபற்றி கூற அவசியமேயில்லை. ஏனென்றால் அதைப் பற்றி பிறிதொரு அபிப்பிராயமும் இருக்குமென நான் நினைக்கவில்லை. தமிழ் நாட்டின் தலை சிறந்த நடிகைகளுள் ஒருவர் அவர் என்பது யாவரும் அறிந்த உண்மை. ஆயின் மற்ற பல ரசிகைகள் அறியாத, ஆயின் நான் கண்ட ஒன்றைமட்டும் கூற முடியும். அதுதான் சாவித்திரி திரைக்குப்பின் ஓர் ஒப்பற்ற சிறந்த நற்பண்புடைய மாதரசி என்பது. இதுபற்றியும் அவரை நன்கறிந்தவர்களிடையே மற்ெருரு அபிப்பிராயம் இருக்க முடியாது என்பது நிச்சயம். அவரை நான் அறிந்த காலம் சிறிதாயினும், நன்கு உணர்ந்ததாகவே நினைக்கிறேன். நான் எழுதியது ஒன்றிலும் மிகையின் சாயலே இருக்க ஏதுவில்லை.

சாவித்திரி அகமும் புறமும் ஒத்த ஸ்படிகம் போன்ற பண்புடையவர். கலகலப்பு, இனிமை, சரளம் இவை அவரிடம் ஒளி வீசுகின்றன. நடிப்பு, பண்பு அழகு இவை யாவற்றிலும் நேர்த்தியாக உள்ள இவருக்கு இறைவன் நல்ல வாழ்க்கையையும் நிறைந்த செல்வத்தையும், யாவற்றையும்விட அழகிய புத்திரியையும் அளித்துள்ளது மிகப் பொருந்தமல்லவா? அவர் நீடூழி காலம் நன்கு வாழ இறைவனைப் பிரார்த்திக்கிறேன். அவரைப்பற்றி எழுத ஓர் வாய்ப்பு கிடைத்ததை அரிய வாய்ப்பாகவே கருதுகிறேன். காலத்தின் வாய்ப்பினுல் கிடைத்த உடன் பிறவா சகோதரியாகவே அவரைக் கருதுகிறேன். அவரைப்பற்றி எழுத இந்த பெருமிதப்படக்கூடிய சந்தர்ப்பம் அளித்தவர்களுக்கு என் முழு நன்றியும் உரித்தாகும்.

எஸ். எஸ். ஆர்
பிக்சர்ஸ்...
தங்க ரத்தினம்
...காட்சிகள்...



பழமைக்கும் புதுமைக்கும் சமுதாய பேதத்துக்கும் சமத்துவ நெறிக்குமிடையே ஆண்டாண்டு காலமாக நடைபெற்று வரும் போராட்டத்தின் காலக் கண்ணாடியே "தங்கரத்தினம்".

செல்வச் செருக்காலும் குலப் பெருமையாலும் வாழ்வின் உச்சாணிக் கிளையிலே ஏறிக்கொண்டிருக்கிறார் தந்தை!

மாளிகையிலே பிறந்த மகன் மண் எடுக்கிறான், கல் உடைக்கிறான், பசியைச் சுவைத்துப் பல இன்னல்களுக்கு ஆளாகிறான்.

தந்தைக்கும் மகனுக்குமிடையே நடக்கும் போராட்டத்தில் ஒரு அழகு மலர் கருகி விடுகிறாள்—வாடி உதிர இருந்த மற்றொரு மலர் காப்பாற்றப் படுகிறாள்!

தென்னகத்தைப் பொன்னகமாக்கும் புதுமைகள், புரட்சிக் கருத்துக்கள் பூத்துக் குலுங்கும் உணர்ச்சிப் படையலாகும் "தங்க ரத்தினம்".



கண்களுக்கும் கருத்துக்கும் விருந் தளிக்கும் இன்பக் காதல் காட்சிகள் பல இதிலுண்டு. இயற்கைச் சூழ் புறம் இவற்றுக்கு மெருகூட்டுகிறது.

பட்டுக் கத்தரித்தது போன்ற அழ கான வசனம், அதிலே ஆழமான கருத்துண்டு. அறிஞர் அண்ணுவின் தம்பிப் படையினரிலே ஒரு சிங்கம் கே. ஜி. இராதா மணுளன். அவர் தம் வசனம் கருத்துக்கு விருந்தாகும்.

முல்லைத் தோட்டத்திற்கு இன்ப கீத ஒசையை மெல்ல அழைத்து வருகிறது தென்றல். இசை நயமும் மலர் மணமும் கேட்போர்— நுகர் வோரை இன்ப புரிக்கே அழைத்துச் சென்றுவிடும். இந்தப் படத்தின் இசையமைப்பாளர் கே. வி. மகா தேவனின் இசையமைப்பும் பின்னணி வாத்தியங்களும் கீத விருந்தளிக்கும்.

கர்ணனின் கைவண்ணம் கண் களுக்குப் பெரு விருந்து.



முதல் தடவையாக—அதே சமயம் முதல்தரமாக இப்படத்தை டைரக்ட் செய்திருக்கிறுர் இலட்சிய நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரன்.

நடிகமணி டி. வி. நாராயணசாமி தயாரித்திருக்கும் எஸ். எஸ். ஆர். பிக்சர்ஸின் இந்தத் திரைக் காவியத்தில் இலட்சிய நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரன், கே. ஏ. தங்கவேலு, நாகய்யா, பிரேம் நசீர், வி. கே. ராமசாமி, டி. வி. நாராயணசாமி, பி. எஸ். தட்சிணுமூர்த்தி, கே. ஆர். ரத்தினம், விஜயகுமாரி, எம். என். ராஜம், ஹேமலதா, புஷ்பமாலா முதலியோர் நடித்திருக்கிறுர்கள்.

நல்லது சொல்லும் கதை, நாடறிந்த நடிகர்கள், செவிக்குணவுதரும் பாடல், கருத்து நிறைந்த வசனம், வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கும் ஹாஸ்யக் காட்சிகள், உள்ளமுருக்கும் சோகக் காட்சிகள், குளிர்ச்சியான படப்பிடிப்பு எல்லாம் கொண்ட 'தங்கரத்தினம்' தயாரிப்பாளர்களின் கன்னி முயற்சிதான்; ஆனாலும் கனிபோல் இனிக்கும்.

ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருக்கும் ஆயிரமாயிரம் ரசிகர்களை மகிழ்விக்க இம்மாத இறுதியில் வெள்ளித் திரையில் பவனி வரப்போகிறது "தங்க ரத்தினம்".





வாடாத இளமை யழகு

வாராதோ விரலசைந்தால் !

வெயிலும், புழுதிக் காற்றும் உங்கள் இளமை யழகைப் பறித்துச் செல்வானேன்? ஹிமாலயா புக்கே ஸ்நோவின் மூலம் உங்கள் சருமம் இயற்கை மெருகுடன் சோபிக்கட்டும். ஹிமாலயா புக்கே ஸ்நோ பூசிக்கொள்ளுங்கள்; சோர்வுற்று வரண்ட சருமங்கூட துளிர்த்தெழும் புதுமலர்ச்சியோடு தளதளப்புடன் மிளிரக் காண்பீர்கள் !

முகப்பருக்களும், சுருக்கங்களும் வராமல் பாதுகாப்பது ஹிமாலயா புக்கே ஸ்நோ. கண்ணுங்கருத்துமாக உங்கள் வதன எழிலைப் பராமரியுங்கள். இளமை மாறுத அழகைக் கொஞ்சி யழைப்பது...

ஹிமாலயா புக்கே ஸ்நோ



HBS. 19-50 TM

லண்டனிலுள்ள இராஸ்மிக் சார்பாக இந்துஸ்தான் லீவர் லிமிடெடினல் இந்தியாவில் தயாரிக்கப்பட்டது

நாளொரு
மேனியாக...
ரெக்ஸோனாவில் அடங்கி
யுள்ளது கேடில்; சரும
எழிலுக்கான பற்பல
எண்ணெய்கள் இணைந்த
விசேஷத் தைலமாகிய கேடில்,
சருமத்திற்கு ஊட்டமளித்து,
மழமழப்பாகவும், மென்மை
யுடனும் மிளிரச் செய்கிறது!
ரெக்ஸோனாவின் எடுப்பான
நறுமணம் இணைபிரியாமல்
உங்கள்மீது கமழ்ந்து
இளங்காலைப் புதுமலர்ச்சியுடன்
நாள்முழுதும் உங்களை விளங்கச்
செய்கிறது. உங்கள் அன்றாட
அழகுசாதனமாக ரெக்ஸோனா
உபயோகியுங்கள்!
Rexona
BLENDED WITH CADYL
...ரெக்ஸோனா உங்கள் மேனியெழிலை ஓங்கச்செய்கிறது
ஆஸ்திரேலியாவிலுள்ள ரெக்ஸோனா ப்ரொ. லிமிடெட் சார்பாக
இந்துஸ்தான் லீவர் லிமிடெட்டினால் இந்தியாவில் தயாரிக்கப்பட்டது.
RP.165-50 TM

கும் இந்தக் காப்பிக் காட்சி வெட்டப்பட வேண்டும்.

சாரங்கபாணி,
செங்கை.

வெட்டுங்கள்! வெட்டுங்கள்!!

ராஜா தேசிங்கு

ஆயிஷாவும் மஹமத்கானும் தனித்து மகிழ்ந்திருப்பதைக் கண்டு மஹமத்கானின் சகோதரி செங்கமலம் கேலி செய்ய, அவர்களிருவரும் ஆடிப்பாடுகிறார்கள். படத்தின் நீளத்தை அதிகப்படுத்திப் பொறுமையைச் சோதிக்கும் இக்காட்சியை வெட்டிவிட வேண்டும்.

வே. தசரதன்,
சென்னை.

ராணிபாய்க்கு குறி சொல்ல வருகிறாள் குறத்தி. அவள் கையை ஒரு வினாடி பார்த்துவிட்டு, ஆடியும் பாடியும் நம் பொறுமையைச் சோதிக்கிறாள் அக்குறத்தி. மதுரை வீரனில் வந்த அதே குறி சொல்லும் காட்சி இப்படத்திலும் இடம் பெற்றாக வேண்டுமா? இந்தப் பாடலும் ஆடலும் வெட்டப்பட்டால் படம் இன்னும் விறுவிறுப்புடன் இருக்குமே!

பி. ஏ. துரைசாமி,
தஞ்சை.

பாண்டி டில்லியிலிருந்து செஞ்சிக்கு வருகிறான். அவனை செங்கமலமும் அவள் தோழிகளும் வழி மறித்துக் கலாட்டா செய்கிறார்கள். மதுரை வீரனில் வந்த "வாங்க மச்சான்" காட்சி இப்படத்திலும் தேவையா? இக்காட்சி மிகவும் நீண்டிருக்கிறது. படத்தின் சுவையையும் விறுவிறுப்பையும் குறைக்

கவலை இல்லாத மனிதன்

திருமணத்தன்றே முதலிரவு விழா நடைபெறுகிறது. அப்போதே, தான் காதலித்த காவேரிதான் தன் மனைவி என்றறிந்து வீட்டைவிட்டு வெளியேறுகிறான் மாணிக்கம். அவள் வெளியேறியவுடன் ஒரு குழந்தையைப் பெறுகிறாள். அதாவது. திருமணத்தின்போதே அவள் நிறைகர்ப்பிணி. தாலி கட்டுவதற்குச் சில நிமிடங்களுக்கு முன் அவ



அவர் கடிதத்தைப் படித்து அறியும் விஷயத்தை, அவரது முக பாவத்தைக் கொண்டே நாம் அறிய முடிகிறது. ஐரிஸ் மூவீஸ் தயாரிக்கும் முதல் படத்தில் ஜெமினி கணேசன்.

அவள் கையில் உயிரற்ற தாமரை இருக்கிறது; ஆனால் அவரது கையில் புன்னகை பூத்த உயிருள்ள தாமரையே சிக்கி யிருக்கிறதே!
நடேஷ் ஆர்ட் 'மன்னாதி மன்னன்'னில் - எம். ஜி. ஆர்., பத்மினி.

ளைப் பார்த்துப் போன அவளது மாமியாருக்கு இது தெரியாதது விந்தையிலும் விந்தை. இது அபத்தமானது. திருமணமான பின் சில மாதங்நள் கழித்து காவேரி விரட்டப்பட்டதாகக் காட்டப்பட்டிருக்க வேண்டும்.

சுந்தரி மணாளன்,
சென்னை.

மீண்ட சொர்கம்

சொந்த மனைவியால் சேகரின் வீடு ஏலத்திற்குக் கொண்டுவரப் படுகிறது. வசூலை முன்னிட்டு, பலவிதக் கலாசார நடனங்களை ஆடுகிறாள் நிர்மலா. சேகர், நிர்மலை அன்னிய நாட்டுக்கலாசார நடனங்கள் ஆடுவது கண்டு, தமிழ்நாட்டுக்குப் பெருமை தரும் பரதத்தின் மதிப்பை அவள் பாழாக்குவதாக வெகுண்டு, அவளைக் கண்டபடி திட்டுகிறான்: பிறகு, "உன்மீது குற்றமில்லை நிர்மலா. இதோ இளம் இதயங்களைக் கெடுக்கும் ஆபாச நடனங்களை ஆதரித்துக்கொண்டு கைத்தட்டி ரசிக்கிறார்களே, இவர்களைத்தான் கண்டிக்கிறேன்" என்கிறான். தான் படைத்த பாத்திரத்தின் மூலம் ஸ்ரீதர் மக்களைக் கண்டிப்பது போல் நடிக்கிறார். இதற்குமுன் ஒரு காட்சி. சேகர் - பிரதிபா திருமணம் முடிந்த பின் பிரதிபாவின் தோழிகள் அங்க அசைவுகளை அப்படியே காட்டும் இறுக்கிப்பிடித்த அரை நிர்வாண உடையில் நடனமாடுகிறார்கள். இதைத் தெளிவாக இளம் இதயங்களைக் கவரும் வகையில் பலவித கோணங்களில் படமாக்கியிருக்கிறார்கள். பரத நாட்டியத்துக்கு வக்காலத்து வாங்கும் சேகர் இதை ரசிக்கிறான். பரதக் கலைக்கே பாதகம் செய்யும் ஒரு அன்னிய முறை ஆபாச நடனத்தை, கதை - வசனகர்த்தா, டைரக்டரான ஸ்ரீதர்,

பண வசூலை முன்னிட்டு அமைத்தாரா? பரதக் கலையின் சிறப்பை விளக்கும் வகையில் தயாரிக்கப்பட்ட படத்தில் இந்த நடனக்காட்சி ஏன்? இதை வெட்டிவிட வேண்டும். இல்லாவிடில் ஊருக்கு உபதேசம் செய்யும் சேகரின் வசனங்களை வெட்டி விடவேண்டும்.

டி. சி. லிங்கம்,
பொறையார்.

களத்தூர் கண்ணம்மா

வெளிநாட்டிலிருந்து திரும்பும் சேகர், கண்ணம்மாவுக்கென வாங்கி வந்த சேலையை தன் வேலையாளுக்குக் காட்டுகிறான். வெளிநாட்டில் ஏது சேலை? அப்படியே கிடைத்தாலும் இங்கே இல்லாததா அங்கே இருந்து விடப்போகிறது? இந்தக் காட்சி தேவையற்றது!

வி. ராமதுரை,
விருதுநகர்.

ராஜா தேசிங்கு

தேசிங்கு ராஜாவும் ராணியும் நகர் சோதனைக்கு வரும் வழியில் வைத்தியரின் வீட்டுக்கு வருகிறார்கள். வைத்தியரின் மனைவி அரசனைப்பற்றிக் குறைவாகப் பேசி வரும்போது, மகமத்கான் அங்கே வந்து, மாறு வேடத்திலுள்ளது தேசிங்கு ராஜனே எனச் சொல்கிறான்; வைத்தியரும், அவரது மனைவியும் மன்னிப்புக் கோருகின்றனர். படத்தின் நீளத்தை வளர்க்க உதவிய இக்காட்சி அதன் விருவிருப்பை அப்படியே கொன்று விடுகிறது. தவிர, கட்டபொம்மனில் வரும் நிகழ்ச்சியை இது அப்படியே நினைவு படுத்துகிறது. புதுமையற்ற, விருவிருப்பைக் குறைக்கும் இக்காட்சி எதற்கு?

ஞானசம்பந்தம்,
திருமாரூர்.

கடவுளின் குழந்தை

''கைத்தொழில் ஒன்றைக் கற்றுக் கொள்'' என்று கல்யாண் குமார் இப்படத்தில் பாடி ஆடும் காட்சி, படத்திற்கு ஒட்டாததாக இருக்கிறது. பாட்டின் பொருளும் மெட்டும் இனிமையாக இருந்தாலும் இடப்பொருத்தம் இல்லாத காரணத்தால் இதை வெட்டி விடலாம்.

சரவணன்,
கோவை.

★

பிறந்த நாள் விருந்து

வித்யா பிலிம்ஸ் படப்பிடிப்பு முடிந்து கொண்டிருந்தது. படப்பிடிப்பில் கலந்துகொண்ட எல். விஜயலக்ஷ்மி, அங்கே வந்த நண்பர் ஒருவரைப் பார்த்து பகல் உணவு அருந்த தன்னுடன் வரும்படி அழைத்தார். அருகிலிருந்த நடன டைரக்டர் கோபாலகிருஷ்ணனும் ''இன்றைக்கு இவரது பிறந்த தினம். அவசியம் வாருங்கள்'' என்றார். உணவு அருந்தியதும் நண்பர். ''பிறந்தநாள் என்று சொன்னீர்கள். பாயசம் கூட இல்லையே!'' என்று விஜயலக்ஷ்மியிடம் கேட்டார். ''இன்னும் பத்து தினங்களில் எனது பிறந்த நாள் வருகிறது. அப்போது ஜமாய்த்து விடுகிறேன்'' என்றார் விஜயலக்ஷ்மி.

''அப்படியானால் இப்போது நான் சாப்பிட்டது யாருடைய பிறந்த நாள் சாப்பாடு?'' என்றார் நண்பர், ஆச்சர்யத்தோடு.

''இன்று என் படத்தில் நான் பிறந்த நாள்! அதுதான் இந்தச் சாப்பாடு!'' என்று சிரித்துக்கொண்டே சொன்னார் விஜயலக்ஷ்மி.



மகிபால், ஹீராலால் ஷகிலா நடிக்கும் 'டாக்டர்-Z' என்ற படத்தை ஆர். எம். ஜி. பிக்சர்ஸார் தமிழ்ப்படுத்தி வருகிறார்கள். விரைவில் இது வெளிவர விருக்கிறது.

நான் ரசித்த காட்சி

மீண்ட சொர்கம்

தன் இதயத்தில் இடம் பெற்ற சேகர், அங்கிருந்து குதித்து வேருெருத்தியின் இதயத்தில் இடம் பெறத் தவிப்பதைக் கண்டு தவியாகத் தவிக்கும் நிர்மலா, தானும் ஆற்றிலே குதித்து உயிர்விடத் துணிகிருள். தனக்கு அவன் கிடைக்காததுடன் அவளிடமும் அவன் அமைதியுடன் வாழமுடியாமல் தவிப்பதைக் கண்டு, அவனுக்கு அமைதி தரமுடியாத தன்னை அழித்துக் கொள்ள அவள் முடிவு செய்கிருள். அவள் செய்ய வந்த காரியத்தை செய்து விட்டாள். சாவதற்கு வந்தவளுக்கு வாழ்வளிக்கச் சிபார்சு செய்துவிட்டும் போகிருள். கூந்தல் அவிழ்ந்து, இருண்டுவிட்ட உள்ளத்தைப் பிரதிபலிப்பதுபோல் கறுப்புச் சேலை கட்டி, சாவிலே அமைதி காண வந்த நிர்மலாவுக்கு வாழ்வு கிடைக்கும் என்பது தெரிவிக்கப்படும் போது அவள் ஒரு கணம் தடுமாறுகிருள். அது கனவுதானு என்று ஒருகணம் தடுமாறித் திரும்புகிருள். மீண்டும் சேகரின் வேண்டுதலால் அவனை நோக்கித் திரும்புகிருள். பெண்கள் ஏமார்ந்து விட்டால் மீண்டும் அதேபோன்ற நிலையை ஏற்படுத்திக் கொள்ள மாட்டார்கள். அவர்களிருவரும் சேர்ந்து விட்டால் காட்சியின் சுவை குறைந்து விட்டிருக்கும். பெண்மைக்குச் சிறப்பளிக்கிறது இக்காட்சி.

ஜே. யு. நாதன்,
சென்னை.

பிரதிபா கோபத்துடன் கிளப்புகிருள். அவளும் அவள் கணவன் சேகரும் எடுத்துக் கொண்ட புகைப் படங்கள் தனித்தனியே விழுகின்றன. அவள் லக்ஷியம் செய்யாமல் அன்பையே மிதித்து விட்டுப்போய் விடுகிருள். அவர்கள் வாழ்க்கையில் ஏற்பட விருக்கும் பிளவை முன் கூட்டி அறிவிக்கும் அருமையான இக்காட்சியை நான் வெகுவாக ரசித்தேன்.

ஸ்ரீநிவாஸன்,
சென்னை.

சச்சுவை மணப்பதானுல் தன் சொத்தில் காலணுக்கூடக் கொடுக்க முடியாது என்று தன் மகன் கோபுவிடம் கூறுகிருர் சச்சிதானந்தம். உடனே, 'உன் சொத்து வேண்டாம் சச்சுதான் வேண்டும்' என்று அவன் கூறிவிட்டுக் கிளப்புவான் என்று எதிர்பார்க்கிருேம். ஆனுல் சச்சுவின்

ஆணுடையில் மறைந்திருந்தாலும் இவர் ஒரு பெண்தான்! தமிழ்ப்படுத்தப்பட்டு வரும் 'மன்னன் மகள்' படத்தில் 'ஜிம்போ' புகழ் சித்ரா.



வீட்டுக்குப்போய் 'எனக்கு நீ வேண்டாம். எங்கப்பா சொத்துதான் வேண்டும்' என்று கூறிக் கிளம்புகிறான். சிறிது தூரம் சென்றவன் திரும்பி வந்து, 'எனக்குக் குழந்தை பிறந்தால் உன் பெயரை வைக்கிறேன்' என்கிறான். வாய்விட்டுச் சிரிக்கச் செய்யும் இந்தக் காட்சி, நம்பவைத்துக் கழுத்தறுக்கும் துரோகிகளுக்கும் கோழைகளுக்கும் சாட்டையடி கொடுக்கிறது.

சி. சு. ராமலிங்கம்,
தஞ்சை.

ராஜா தேசிங்கு

ராஜா தேசிங்கு மனைவியிடம் சகஜமாகச் சரஸமாடும்போது அவள் கையைப் பிடித்திழுக்கிறான். அவள், 'கையைத் தொடாதீர்கள்' என்கிறாள். 'தொட்டுவிட்ட மனைவியை கணவனும் பொறுப்பேற்ற நாட்டை மன்னனும் விட்டுவிடக்கூடாது' என்ற பொருள் படும்படிப் பதில் கூறுகிறான் தேசிங்கு. மனைவியிடத்தில் தூய காதலும் நாட்டுப்பற்றும் கொண்டவர்களின் மனோ நிலையைப் பிரதிபலிக்கும் இந்தக் காட்சியை நான் மிகவும் ரசித்தேன்.

நரசிம்மன்,
மதுரை.

மஹமத்கானும் ஆயிஷாவும் மகிழ்ந்திருப்பதை ராஜா தேசிங்கும் அவன் பட்டத்தரசியும் பார்த்து விடுகிறார்கள். அரசனைக்கண்ட அவ்விருவரும் வெட்க மடைந்து விலகி ஓட முயற்சிக்கும்போது, தேசிங்கு அவனிடம் பெண்போல நடித்துக் கேலி செய்கிறான். மன்னன் என்ற தோரணையின்றி நன்பன் என்ற முறையில் உண்மைக் காதலுக்கு ஆதரவு தரும் இக்காட்சி, நட்பின் சிறப்பை விளக்குகிறது. எம். ஜி. ராமச்சந்திரன் இக்காட்சியில் மிக அழகாக நடித்திருக்கிறார்.

வி. என். சுந்தரேசன்,
மதுரை.

தனது இரு கைகளைக் கட்டிக்கொண்டு புன்னகையை உதிர்த்தபடி குறும்புப் பார்வை பார்க்கும் ஒரு வாலிபரும்...

தாய் சாந்த், மரணப்படுக்கையி லிருக்கும்போது தேசிங்கை கொல்லக்கூடாது என்று மகனிடம் சபதம் வாங்கிக்கொண்டு நிம்மதி யுடன் இறக்கிருள். ''அம்மா... அம்மா!'' என்று கதறியபடி அவள் கால்களிலே விழுந்து கதறுகிருன் தாவுத்கான். தாயிடம் மகனுக்குள்ள பக்தியை விளக்கும் இக்காட்சி மன மூருக்குவதாக இருந்தது.

வரதராசன்,
திருச்சி.

தன் தாயிடம் வாதிடும் செஞ்சி மன்னன்தான் தன் தகப்பன் என் பதறிந்த தாவுத்கான் தன்னை மகன் என்று கூற வெட்கப்படும் தந்தை முன் பாய்ந்து, பெற்ற வன் என்றும் பாராது சுடுமொழி பேசுகிருன். 'நான் உன் மகன் என் பதை ஊரறியச் செய்கிறேன்' என்று சூளுரைக்கிருன். தாயைத் தெய்வமாக மதிக்கும் மகன், அவ ளுக்கு அநீதி இழைக்கப்படும் போது நியாயத்திற்காகப் போராட முனைகிருன் என்பதை விளக்கும் ரசமான காட்சி இது. எம். ஜி. ஆர். நன்கு நடித்திருக்கிருர்.

பி. வி. நாகராஜன்.
சென்னை

தன் சபதத்தை நிறைவேற்ற, ஆற்காடு நவாபின் உதவி கோரி நிற்கிருன் தாவுத்கான். கப்பம் கட்ட மறுத்த தேசிங்குராஜன் மீது போர் தொடுக்க முடிவு செய்து அந் தப் போருக்கு தாவுத்கானே தலைமை தாங்கிச் செல்லப் பணி கிருர் ஆற்காடு நவாபு. உடனே மகிழ்ச்சிப் பெருக்குடன் 'போர்... போர்...போர்' என்று முழங்கு கிருன் தாவுத்கான். சபதத்தை நிறைவேற்றுபவனின் மனப் பாங்கை விவரிக்கும் ரசமான காட்சி இது.

பி. ராமதுரை,
மேலமையூர்.

...இப்படி கையைப் பிசைந்தபடி நிற் கும் ஒரு பெண்ணும் சேர்ந்தால் கெட்டி மேளம் ஒலிக்கவே செய்யும்! மதன் தியேட்டர்ஸ் 'தாய் வீடு' படத்தில் ஜெமினி கணேசன், சரோஜாதேவி

பத்மினியின் முகபாவத்தையும், ஆடை அணிகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது 'மன்னாதி மன்ன'னில் இக்காட்சியுடன் ஒரு நடனமும் பாட்டும் நிச்சயம் வரும் என்று எதிர்பார்க்கலாம்.

கிறார்கள் என்று மற்றவர்களைக்குறை கூறுகிறான் தேசிங்கு. நாட்டைப் பற்றி அவன் கவலைப் படவில்லை என்று குற்றம் சாட்டுகிறாள் அவன் தாய். உடனே அவன் மனம் விரும்பாத போதிலும் அவர்கள் விருப்பத்தை ஏற்கிறான். நாட்டு நன்மைக்காக மேற்கொள்ள வேண்டிய தியாகத்தை விளக்கும் அருமையான காட்சி இது.

சாரதானந்த குமார்,
சென்னை.

தன் சகோதரியிடம் தவருன முறையில் நடக்க முயன்றதற்காக செஞ்சித் தளபதி யூசப்பை செம்புள்ளி கரும்புள்ளி குத்தி தேசிங்கிடம் இழுத்து வந்து நிறுத்துகிறான் மகபத்கான். விவரமறிந்த தேசிங்கு யூசப்பை கொல்லப் போகிறான். அமைச்சர் அவனைத் தடுக்கிறார். உடனே தளபதி பதவியிலிருந்து யூசப்பை விலக்கி விடுகிறான். தவறு செய்பவர் யாராக இருந்தாலும் தண்டிப்பதே முறை என்ற நல்ல ராஜநீதியை விளக்கும் அரிய காட்சி இது.

சீதா செல்லப்பா,
கோவை.

செஞ்சி மன்னன், சாந்திடம் அன்பு காட்டி அவள் ஒரு ஆண் மகவை ஈன்ற பின். நாட்டு நலன் கருதி, அவளை மனைவியாகவும் குழந்தையை மகனாகவும் ஏற்க முடியாமலிருப்பதாகக்கூறி, தன்னை மறந்து வெளியேறி விடும்படிக் கெஞ்சி, பொன்முடிப்பும் தருகிறான்.

தூதுவராக வந்தவர்கள் விவரங் கூறு முன்னர் உயிர்ப் பிச்சை கொடுப்பதாகவாக்குறுதி தர வேண்டும் என்று வேண்டுகிறார்கள். சம்மதம் தெரிவித்த தேசிங்கிடம், ஆற்காடு நவாபுக்குக் கப்பம் கட்ட வேண்டுமென்று அவர்கள் சொன்னதும் எழுந்து வாளை உருவி கப்பம் கட்ட மறுத்து போருக்குத் தயாராகிறான். தன்மானமுள்ள வீரனின் மனோபாவத்தையும் கோழைகளின் மனோபாவத்தையும் விளக்கும் அருமையான காட்சி இது.

எம். சுவாமிநாதன்,
கும்பகோணம்.

கிரகங்களின் நிலை காரணமாக, தேசிங்கு தன் மனைவியை மூன்ருண்டுகளுக்குப் பார்க்கக் கூடாதென்கிறார் ராஜகுரு. ஆனால், வானத்தில் சஞ்சரிக்கும் கிரகங்களைப் பூமிக் கழைத்து விளையாடு

ஆனால் அவள் அதைத் தட்டி விடுவதுடன் தன் நகைகளையும் கழற்றி எறிகிறாள். உத்தமமான பெண்கள் தியாகம் செய்யத் துணியும்போது அதற்குப் பிரதியாக எந்தப் பரிசையும் ஏற்கமாட்டார்கள் என்பதை விளக்கும் அருமையான காட்சி இது.

க. தேவராஜ்,
காரைக்குடி.

களத்தூர் கண்ணம்மா

செல்வம், பெற்றவர்களிருக்கும் போதே அனாதையாக வாழ நேரிடுகிறது. அவன் பள்ளியில் படிக்கிறான். கண்ணம்மா அந்தப் பள்ளியில் ஆசிரியையாகச் சேருகிறாள். நேரங்கழித்துப் பள்ளிக்கு வந்ததற்காக அவனைக் கோபிக்கிறாள். பிற்பகலில் மற்ற சிறுவர்கள் சாப்பிடும்போது அவன்மட்டும் சும்மாயிருப்பதைப் பார்க்கும் கண்ணம்மா, 'ஏன் சாப்பிடவில்லை?' என்று கேட்கிறாள். அவனுக்கு விடுதியில் ஒரு நாளைக்கு இரண்டு வேளைகளில் மட்டும்தான் சாப்பாடு கிடைக்கும். அதை அவன் மூலமறியும் கண்ணம்மா, 'பசித்தால் என்ன செய்வாய்?' என்று கேட்கிறாள். 'வயிறு ரொம்ப தண்ணீர் குடிப்பேன்' என்கிறான் அச்சிறுவன். 'நான் டிபன் தருகிறேன்' என்கிறாள் அவள். 'இன்னைக்குக் கொடுப்பீங்க. நாளைக்கி யார் தருவா?' என்கிறான் செல்வம். அனாதைகளின் நிலையையும், வயதுடன் அனுபவத்தையும் அறிவையும் வளர்க்கும் குழந்தைகளின் மனோபாவத்தையும் விளக்கும் உள்ளமுருக்கும் காட்சி இது.

பி. எஸ். கிருஷ்ணசாமி,
வி. கோவிந்தசாமி,
எஸ். ரங்கநாதன்,
சென்னை.

செல்வம் மணிக்கு உதவி செய்கிறான். இந்தக்காட்சி சில நிமிடங்களே வந்து போனாலும் உள்ளத்தைத் தொடுவதாக இருக்கிறது. இளம் உள்ளங்களிலேதான் எந்தப் பழக்கமும் நன்கு பதியும். இங்கே செல்வம் மற்றவர்களுக்கு உதவவேண்டும் என்ற உயர்ந்த தத்துவம் கொண்டவனாக வளருகிறான்.

ஆர். கோபாலஸ்வாமி,
மதுரை.

ராம்தீர்த் பிரம்மி ஆயில்

ஸ்பெஷல் நெ. 1 ரிஜிஸ்டர்டு

கூந்தல் உதிர்வதையும், பொடுகையும் தடுத்து கேசத்திற்கு கருநிறத்தையும் பளபளப்பையும் அளிக்கும் ஓர் ஒப்பற்ற கூந்தல் தைலம். பல உயர்ந்த மூலிகைகளைக்கொண்டு தயாரிக்கப்பட்டது. மூளைக்கு குளிர்ச்சி அளித்து, ஞாபக சக்தியை அதிகரித்து, கண் எரிச்சலையும் அடிக்கடி ஏற்படும் தலைவலியையும் போக்கி நிம்மதியான நித்திரையை அளிக்கிறது.

யோகாசனப் படம்

எங்கள் யோகாசனப் படத்தில் காட்டியுள்ளபடி ஆசனங்களை முறைப்படி செய்து வந்தால் நீங்கள் உடல் வலிவு பெற்று ஆரோக்யமாக வாழ்வீர்கள்.

விலை ரூ. 3/- (தபால் செலவு உள்பட)

SHRI RAMTIRTH YOGASHRAM
DADAR — BOMBAY - 14.

மதராஸ் டிப்போ 25, நைனியப்ப நாயக்கன் தெரு, மதராஸ்-3.

ரூ. 1000 ரொக்க இனும்!

நீங்கள் நாடியதெல்லாம் கைகூடும்



எல்லா விதமான பிரயத்தனம் புரிந்து நீங்கள் மனம் சோர்ந்திருந்தாலும் சரி, இந்த மாயஜால மோதிரத்தை வாங்கி அணிந்து கொள்ளுங்கள். இதை அணிந்தவுடனே நீங்கள் விரும்பிய நபர் ஆணுயிருந்தாலும் பெண்ணுயிருந்தாலும், அக்ஷணமே வசியமாய் விடுவார். இஷ்டப்பட்டவரை நீங்கள் மணப்பீர்கள். இதனுல் மலட்டு ஸ்திரீகளுக்கும் புத்திர சந்தானம் உண்டாகும். இறந்தவர்களின் ஆத்மாவோடு பேசலாம். பூமியில் இருக்கும் புதையல் உங்கள் கனவில் தோன்றும். லாட்டரி, வியாபாரம், பந்தயம், சூதாட்டம், வழக்கு, பரீட்சை இவற்றில் வெற்றி பெறுவீர்கள். துஷ்ட கிரகம் சாந்தம் அடையும். ஜீவிய காலம் சுகமாகக் கழியும்.

மாந்திரீக மோதிரம் விலை ரூ. 1. 94. ஸ்பெஷல் மோதிரம் ரூ. 3. 00. ஸ்பெஷல் சக்தி மிகுந்தது ரூ. 3. 94. மின்சார சக்தியைப்போல் உடனே இது பலன் தரும். இந்த மாய மோதிரம் கிரஹணம் போன்ற சமயங்களில் தயார் செய்யப்படுகிறது. சூரியன் தவறுதலாய் மேற்கில் உதித்தாலும் இம் மோதிரத்தின் சக்தி தவறமாட்டாது. அப்படி பலன் இல்லையென்ருல் இரட்டிப்புசார்ஜ் வாபஸுக்கு காரண்டி. பலனில்லை என்று நிரூபிப்பவருக்கு ரூ. 1000 இனும்!

Principal : BENGAL MESMERISM HOUSE
(P-P.M.) NAKODAR (PB)

1960-61-ல் என்ன நேர இருக்கிறது?

புத்தாண்டாகிய 1960-61-க்குள் ஏற்படக்கூடிய நன்மை தீமைகளை முன்கூட்டி அறிய விரும்பினுல் ஒரு தபால் கார்டில் ஒரு புஷ்பத்தின் பெயரும், முழு விலாசமும் அனுப்பி வையுங்கள். 12 மாதத்திற்குள் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், வியாபாரத்தில் வெற்றி, எந்த விதத்தில் பணம் கிடைக்கும், உத்தியோகம் எப்பொழுது கிடைக்கும், வழக்கில் வெற்றி, உத்தியோக மாற்றம், தேகாரோக்கியம், மனைவி மக்கள் சுகம், தேக அசௌக்கியம், தூரதேசப் பிரயாணங்கள், பரீக்ஷையில் வெற்றி, கல்யாணம், அதைப் பற்றிய பேச்சுக்கள், நிலபுலன்களில் மூலம் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், புதிய நட்பு, அதனுல் உண்டாகும் பலன், சூதாட்டத்தின் மூலமாகவும், புலப்படாத இதர வழிகளினுல் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்களையும் ஜோதிட முறைப்படி கணித்து அறிவிக்கப்படும். இதற்கு ரூ. 1.25. (வி. பி. மூலம் அனுப்பப்படும்) தபால் செலவு தனி. இத்துடன் துரதிருஷ்டத்தை அதிருஷ்ட வழியில் செலுத்தும் உபாயங்களும் அனுப்பப்படும். இதனுல் ஏற்படக்கூடிய இன்னல்களில் இருந்து இது தன்னைக் காப்பாற்றிக் கொள்ள உதவும். ஒரு முறை பரீக்ஷித்துப் பார்த்தால் எம்முடைய ஜோதிட அனுபவம் விளங்கும். பொய் என்று நிரூபித்தால் பணம் வாபஸ் செய்யப்படும்.

SHRI SWAMI SATNARAYAN RAJ JYOTISHI, (P. M.)
NAKODAR (Punjab)

புரொடக்ஷன் புருஷோத்தமன்

''அதோ, இரண்டாக மடித்து முழங்கால் அளவுக்கு கட்டப்பட்டிருக்கும் வேஷ்டி, ஒரு கை மடிக்கப்பட்டு, மற்றொரு கை பித்தான் போடப்படாமல் அப்படியும் இப்படியும் ஆடிக்கொண்டிருக்கும் முழுக்கைச் சட்டை, சீவாத தலை, கையிடுக்கில் - பித்தான் இருந்தும் போட முடியாத வகையில் அடைத்துத் திணிக்கப்பட்டிருக்கும் தோல்பை -இத்யாதி இத்யாதி அலங்காரங்களுடன் வருகிறாரே, அவர்தான் புரொடக்ஷன் புருஷோத்தமன்'' என்று என்னை பலபேர் அறிமுகம் செய்வதுண்டு.

நானும் இந்தப் பனிரெண்டு வருஷகாலமாக படத்தொழிலில் இருந்து வருகிறேன். எனக்குக் கிடைத்த ளாபம் என்னவோ 'புரொடக்ஷன்' என்ற இந்த, ஒரே பட்டம்தான்! கல்லூரிக்குக் கூடப் போகாத எனக்கு இதைவிட வேறு என்ன பட்டம் கிடைக்கும்?

என்னுடைய இத்தனை வருஷ அனுபவங்களில் எதைச் சொல்வது, எதை விடுவது என்றுதான் தெரியவில்லை!

சில விஷயங்கள் படத்தில் வரும் கனவுக் காட்சிகளைப்போல நம்புவதற்கே கஷ்டமாக இருக்கும்; சில விஷயங்கள், 'சொன்னவனையே பைத்தியக்காரன்' என்று எண்ணும்படிச் செய்யும்.

'கால்ஷீட் எப்படியாவது வாங்கி வா?' என்று திடீரென்று முதலாளி என்னிடம் சொன்னார்.

''என்ன கால்ஷீட்டு? யாரிடமிருந்து?'' என்று அவரிடம் என் தலையைக் கோதி விட்டபடிக் கேட்டேன்.

''கால்ஷீட்னா தெரியாது? இது தெரியாதவன் எல்லாம், ஏய்யா புரொடக்ஷன் மானேஜரா வறீங்க?'' என்று சீறி விழுந்தார் அவர்.

'நீங்கள் மட்டும் என்ன தெரிந்து கொண்டு படத் தயாரிப்பில் இறங்கினீர்கள்?'' என்று பதிலுக்குக் கேட்டுவிடத் துடித்தேன்.

அதற்குள் 'போன் ஸார்' என்று சம்பளம் கேட்டு நச்சரித்துக் கொண்டிருந்த பையன் கூப்பிட்டான்.

''கதாநாயகன் வருகிறாராம். கதாநாயகியைக் கூப்பிட்டுக் கொண்டு வரலாமா?'' என்று கேட்டேன் நான்.

'போகச்சே இந்தப் பழக் கூடையையும் தேங்காய் மூட்டையையும் அவங்க விட்டுலே எறக்கிச் தொலையா! அவங்க விட்டிலே விசேஷம்னு நம்மபாடு எழவாப் போவுது!'' என்று முணுமுணுத்தார் முதலாளி! பாவம், அவருக்குத் துணையாக பெருமூச்சு தவிர, வேறு எது வரும்? ''விட்டுக்கு காய்கறி வேணும்னு சொன்னாங்க, வாங்கித் தருவதற்கு நேரமாயிடுச்சி!'' என்று நான் ஒருநாள் சொன்னதற்கு எறிந்து விழுந்த அவர், தேங்காயும் பழமும் வாங்கி யனுப்புகிறார் கதாநாயகி விட்டுக்கு!

'கம்பெனி கார் அனுப்பித்தால் தானே படப்பிடிப்புக்கு வர முடியும்?' என்று சொல்லும் டைரக்டர், 'கோல்ட் பிளாக் சிகரெட் இல்லாத கம்பெனி என்ன கம்பெனியா?' என்று ஸ்வரம் இழுக்கும் 'பீடி' நடிகர், 'ஓவல் வாங்கி வைத்திருக்க வேண்டாம்?' என்று அதிகார முழக்கமிடும் நடிகை 'கேவலம் வெற்றிலைப் பாக்குக்கூட இல்லையே!' என்று குரலெழுப்பும் 'வெத்துவேட்டு' உதவிகள், 'பெட்ரோல் போடாமல் காரை

எப்படிசார் ஓட்டமுடியும்?' என்று தத்துவார்த்தம் பேசும் டிரைவர், 'பணம் பணம்னு ஏன் என்னை பிய்ச் சுறீங்க?' என்று ஓலமிடும் கடனாளி யான என் முதலாளி, 'இந்தச் செக்கும் திரும்பி வராதே!'' என்று சந்தேக விளக்கம் செய்து கொள் ளத் துடிக்கும் 'அனுபவப்பட்ட' ஒரு உயிர் - இத்தனைக்கும் ஈடு கொடுத்துக் கொண்டிருக்கவே எனக்கு நேரம் இல்லாதபோது தலையை வாரிக் கொள்ளவோ, சொக்காய் பித்தான் மாட்டவோ எப்படி நேரம் கிடைக்கும்?

இதற்கிடையில் தொண்டையைக் கனைத்தால் ஏன் என்று கேட்டு கதா நாயகியை விசாரிக்க வேண்டும், கையை நீட்டி விரலசைத்தால் கையிலிருக்கும் சிகரெட் டின்னை கதாநாயகனிடம் நீட்ட வேண்டும், வெற்றிலைத் தட்டை ஆரத்தி சுத்து வதுபோல ஆகாயத்துக்கு உயர்த்தி, நடுவிலிருப்பவர் பறிக்காமல் தாவிப் பிடித்துக் கொடுக்க வேண்டும், எல் லாவற்றுக்கும் மேலாக ஆசனங் களை நமது கையாலேயே தூக்கிப் போட்டு கைக்கட்டி வாய் புதைத்து நிற்க வேண்டும் - இதற்கெல்லாம் தனித்திறமையும் சமயோசித புத்தி யும் இருக்க வேண்டும்!

'இந்தாய்யா! அவங்க ஸெட் டுக்கு வராங்களா இல்லையா, தீர் மானமா கேட்டுடு!'' என்று முத லாளி ஒரு சமயம் என்னிடம் ஒரு நடிகையிடம் போய்கேட்கச் சொன் னார். முதல் நாளே அந்த நடிகை யின் வீட்டுக்குப் போய் இவர் 'சமா தான நாடகம்' நடித்து விட்டு வந் தது எனக்கு அங்கு சென்றதும் தான் தெரிந்தது.

முதலாளியிடம் இது பற்றி நான் கேட்க முடியுமா? ஆனால் இன்றும் அவர் ''நீ போனால் நடக் காத காரியத்தை நான் சாதித்து விட்டு வந்தேன் பார்த்தாயா?'' என்று பெருமை அடித்துக் கொண்டு வருகிறார்! இதை ஒரு சம யம் என்னை வைத்துக்கொண்டே அந்த நடிகை கேட்டு விட்டார்! அப்போது அவரது முகத்தைப் பார்க்க வேண்டுமே! பாவம்! எங் கள் முதலாளி!!

இவ்வளவு கஷ்டப்பட்டும் நான் அங்கே இருப்பதன் காரணம் தொழிலின் நெளிவு சுளிவுகள் ஓரளவு எனக்குத் தெரிந்திருப்ப தால்தான்!

''நீ போனால் என்ன நடக்கும்? நான் போய் சாதித்து விடுகிறேன் பார்!'' என்று சொல்லி என் முத லாளி கிளம்பினால், கொடுக்க வேண் டிய பாக்கியை அவர் பணமாக எப்படியோ திரட்டிக் கொண்டு போகிறார் என்பதுதான் அர்த்தம். இது எனக்குத் தெரியும்! அதனால் தான் என் சம்பளம் வரை சரியாக எனக்கு குறித்த தேதியில் கிடைத்து விடுகிறது!

✶

காரணம் என்ன?

பிரபல இரட்டையர்களான டைரக்டர்கள் கிருஷ்ணன்-பஞ்சு இருவரில் பஞ்சு சட்டைக்குப் பித்தானே போடமாட்டார். பனியன் உள்ளே தெரிய, இப்படியும் அப்படியும் அவரது 'ஸ்லாக்' ஆடும். இம்மாதிரி பித்தான் போடாமல் இருப்ப தன் காரணம் என்ன என்பதுபற்றி பஞ்சு சொன்னார். யாரும் பின்பற்றக்கூடாத ஒரு 'பாஷனை' பஞ்சு வைத்துக் கொள்ள வேண்டும் என்று விரும்பினார். எனவே பித்தான் போடும் வழக்கத்தை விட்டுவிட்டார். பஞ்சுவுக்கும் இதில் வெற்றிதான். பித்தான் போடாமல் 'ஸ்லாக்' அணிய யாருக்கு அவரைப் போல் துணிச்சல் வரும்?

ஒரு நிமிஷம்! ஒரு யோசனை!!

பி. நாகிரெட்டி

(தலைவர் : இந்திய பிலிம் சம்மேளனம்)

சினிமாத் தொழிலுக்கு மிகமிக அத்தியாவசியமான கச்சா பிலிம் இறக்குமதியை மேலும் இருபத்தைந்து சதவீதம் இந்திய சர்க்கார் வெட்டி யிருக்கிறார்கள். அந்நியச் செலாவணியைச் சேமிப்பதற்காகவே கச்சாபிலிம் இறக்குமதியில் இந்த வெட்டு செய்யப்பட்டிருக்கிறது. அந்நியச் செலாவணியைச் சேமிக்க ஏதாவது செய்ய வேண்டும் என்று சர்க்காருக்குத் தோன்றினால் அவர்களுக்கு முதன் முதலில் நினைவுக்கு வருவது கச்சா பிலிம் தான்! இந்த வெட்டினால் அவர்களுக்குக் கிடைக்கும் தொகை இரண்டு சதவீதம் தான்! இதை சினிமாத் தொழிலே அந்நியச் செலாவணியாகத் திரும்பவும் பெற்றுத் தந்து, சுயதேவையைப் பூர்த்தி செய்து கொள்ளுகிறது. வெளிநாடுகளுக்கு நமது படங்கள் ஏற்றுமதி செய்யப்படுவதிலிருந்து இது கிடைத்து விடுகிறது. தவிர, இந்தியப் படத்தொழில் கச்சா பிலிமுக்கு முழுக்க முழுக்க வெளிநாடுகளையே எதிர்பார்க்க வேண்டி யிருக்கிறது. நம் நாட்டில் அடியோடு உற்பத்தி செய்யப்படாத ஒன்றை வெளிநாடுகளிலிருந்து தானே இறக்குமதி செய்ய வேண்டும்? இது சர்க்காருக்கும் தெரிந்திருக்கிறது.

படங்களின் நீளத்தைக் குறைத்து காட்சி நேரங்களைக் குறுக்க வேண்டும் என்று கூறும் சர்க்கார், தொழிலில் ஏற்படக் கூடிய நெருக்கடிகள் பற்றி சிந்தித்துப் பார்க்க வில்லை. 'காட்சி நேரங்கள் கட்டுப்படுத்தப்படும்' என்று சர்க்கார் பயமுறுத்துவது படத்தின் நீளத்தை மறைமுகமாக குறைக்கவேயாகும். காரணமின்றி காட்டப்படும் சில அதிகாரிகளின் புகார்களுக்காகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் பற்றி சர்க்கார் சிந்திக்க வேண்டும்.

சுமார் நானூறு படங்கள், நம் நாட்டின் பல பாகங்களில் தற்போது காட்டப்பட்டு வருகின்றன. இவற்றில் முடக்கப்பட்டுள்ள தொகையை அவை இனித் திரும்பப் பெற வேண்டும். தவிர, சுமார் இருநூற்றம்பைது படங்கள் தயாரிப்பில் இருக்கின்றன. சில முடிவடையும் தறுவாயிலும், சில பாதிக்கு மேலும், சில ஆரம்பக் கட்டங்களிலும் இப்படியாக பல்வேறு கட்டங்களில் இவை இருக்கின்றன. இவையல்லாமல் சுமார் இருநூறு படங்கள் ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு, துவங்கத் தயாராக இருக்கின்றன. இவையெல்லாம் சர்க்காரின் புதிய உத்தரவை எப்படிச் சமாளிக்க முடியும்? இவற்றை எப்படிச் சுருக்கிக் காட்ட முடியும்? என்பதுதான் பெரும் பிரச்னையாக இருக்கிறது.

நமது படங்களைப் பார்க்க வருபவர்களில் பெரும்பாலானவர்கள் கிராம வாசிகளே. இவர்களது தொகை எண்பது சதவீதம் இருக்கும். பட்டண வாசிகளின் தொகை இருபது சதவீதம் தான். இந்த எண்ணிக்கையின் அடிப்படையில் தான் நமது படங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. எனவே படத்தின் நீளத்தைக் கூட்டுவது பற்றியோ, குறைப்பது பற்றியோ படத்தொழில் உணர்ந்துதான் இருக்கிறது.

இந்தியப் படங்களின் முக்கிய அம்சமாகவும், நம்நாட்டு மக்களைக் கவரும் பொருளாகவும் இருப்பது அதன் சங்கீதம்தான். குறிப்பாக நமக்கு அருகிலுள்ள அயல் நாடுகளில் நமது படங்களுக்குக் கிடைத்து வரும் ஆதரவு நமது இசைக்காகவே

கிடைத்து வருகிறது என்பதை யாரும் மறுக்கவே முடியாது. நமது நாட்டு மக்களின் ரசனையை உணர்ந்து தயாரிக்கப்படும் நமது படங்களில், மேலை நாடுகளிலிருந்து வரும் படங்களில் உள்ளதுபோல பாட்டுக்களே இல்லாமல் செய்து விடுவது என்பது முடியாத காரிய மாகும். அதை நினைக்கவும் முடியாது!

படங்களின் நீளத்தைக் குறைக்க எண்ணினால் அதற்கான வழியையும் படிப்படியாகவே கைக்கொள்ள வேண்டும். உடனடியாகச் செய்யும் படி நிர்ப்பந்தம் செய்யக்கூடாது. இதனால் இப்படத்தொழிலே நசித்து விடும். அதன் விளைவுகளும் விபரீத மாகவே முடியும். பின்னர் கச்சா பிலிம் தொழிற்சாலைக்காகவும் பிலிம் நிதிக் கார்ப்பரேஷனுக்காவும் சர்க்கார் கோடிக் கணக்கில் பணம் முதலீடு செய்ய வேண்டிய அவசி யமே இல்லாமற் போய்விடும்!

படத்தயாரிப்பில் இந்தியா இரண் டாவது ஸ்தானத்தில் இருந்தது. கடந்த சில ஆண்டுகளாக இந்தியா அந்த ஸ்தானத்தை இழந்து, மூன்றாவது இடத்திற்கு வந்து விட்டது!

லக்ஷக்கணக்கான மக்களுக்கு நம் நாட்டில் குறைந்த செலவில் பொழுதை போக்க உதவும் உன்னத சாதனமாக சினிமா இருந்து வரு கிறது. தவிர, இதன் மூலம் தேச அபிவிருத்திக்கும் ஏராளமான பொருள் சர்க்காருக்குக் கிடைக்கி றது. பிரதி வருடமும் இருபது கோடி ரூபாய்களை வரியாகச் செலுத் தும் இத்தொழில், சுமார் பத்து லக்ஷம் பேர்களுக்கு வேலை வாய்ப் புக்களையும் தந்திருக்கிறது.

எனவே இத்தகைய ஒரு தொழி லைப்பற்றி எந்த ஒரு முடிவையும் சர்க்கார் செய்யும்போது அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளைப் பற்றியும் எண்ணத்தில் கொள்ள வேண்டும். இப்போதைக்கு அவசிய மானது என்ன என்பது பற்றியும் இத்தொழில் உணர்ந்திருக்கிறது. எனவே பரஸ்பரம் தொழிலிலுள்ள வர்களைக் கலந்தாலோசித்து உடன் பாடு செய்து கொள்வது நல்லது. தொழிலின் முன்னேற்றத்திற்கு அதுவே சிறந்த வழி என்பதுடன் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கும் சுலப மான வழியாக இது அமையும்.

★

வண்டியில் எதிர்ப்பு

டைரக்டர் கே. சுப்பிரமணியம் தயாரித்த பாலயோகினி படத்தில் பல புரட்சிகளைச் செய்திருந்தார். குறிப்பாக ஒரு விதவையையும் படத்தில் நடிக்க வைத்திருந்தார். இதை அக்காலத்து வைதிகர்கள், பிரமுகர்கள் மற்றும் பலரும் தீவிரமாக எதிர்த்தார்கள். ஒரு சமயம் டைரக்டர் சுப்ரமணியம் வெளியூர் செல்ல ரயில் வண்டியில் இடத்தை ரிசர்வ் செய்திருந்தார். இதை அறிந்த ஒரு பிரபல வக்கீல் அந்த வண்டியில் பிரயாணம் செய்ய மறுத்து விட்டார்! இவர் இந்தியாவின் சுப்ரீம் கோர்ட் நீதிபதியாகவும் பின்னல் வந் தார். சுப்ரமணியத்தின் நெருங்கிய நண்பராக இப்போது இருக்கிறார் அவர்.

ஸ்ரீ விஜயகோபால்
...பிக்சர்ஸ்...

பாவை விளக்கு

காட்சிகள்...



பிரபல நாவலாசிரியர் 'அகிலன்'
எழுதியுள்ள இக்கதையை விஜய
கோபால் பிக்சர்ஸார் திரைப்பட
மாகத் தயாரித்துள்ளார்கள்.



கே. சோமு டைரக்ஷனில் வளர்ந்து வரும் இப்படத்தின் வசனங்களை ஏ. பி. நாகராஜ னும், இசை அமைப்பு கே. வி. மகாதேவனும் செய்கிருர்கள்.

'நடிகர் திலகம்' சிவாஜி கணேசன் கதாநாயகன் தணிகாசலத்தின் பாத்திரத்தை ஏற்று நடித்துள்ளார். அவருடன் சௌகார் ஜானகி, கமலா லக்ஷ்மண், பண்டரி பாய், எம். என். ராஜம், சந்தியா, வி. கே. ராமசாமி முதலிய நக்ஷத்திர நடிகர்கள் நடித்து வருகிறார்கள். தமிழ்ப்பட ரசிகர்களை மகிழ்விக்க இந்தப் படம் தீபாவளி தினம் திரைக்கு வருகிறது.

ஸாரதி ஸ்டூடியோஸ்
புதிய
பாதை
காட்சிகள்
RASAN

ஹைதராபாத்
ஸாரதி ஸ்டுடி
யோவில் தயா
ரானது இது.

தாபி சாணக்கியா
இதன் டைரக்டர்
வசனம் : மாறன்.

லைப்பாய் இருக்குமிடம்

அதுவே ஆரோக்கியம் இருக்குமிடம்!

ஆஹாஹா! லைப்பாய் ஸ்நானத்தின் இன்பமே இன்பம்! உங்களைக் கிளுகிளுக்க வைக்கும் ஆரோக்கியப் புதுமலர்ச்சி...'எல்லாம் இன்ப மயம்'! செழிப்பு மிக்க லைப்பாய் நுரை, அழுக்குடன் கிருமிகளைக் கழுவிக் களைந்து உங்கள் உடல்நலனைப் பாதுகாக்கிறது; வேலை செய்யும்போதும் சரி, விளையாடும்போதும் சரி, அழுக்கிலிருந்து தப்பி வாழ யாரால் முடியும். ஆகவே, இன்றுமுதல், லைப்பாய் உபயோகிக்கத் தொடங்குங்கள்; ஆம், குடும்பத்திலுள்ள ஒவ்வொருவருமே!

L. 16-X29 TM

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு

கேள்வி பதில்

எஸ். வெங்கடாசலம், கண்டியூர்

ஸ்டண்ட் சோமு, கண்ணதாசன், பாலய்யா இவர்களில் யாருக்குக் குழந்தைகள் அதிகம்?

'வீரத்தாய்' பதக்கத்தை ஸ்ரீமதி கண்ணதாசனுக்கே கொடுக்கலாம்!

கடவுள் யார்?

''கோடி இருப்பவன்தான் ஈஸ்வரன்'' என்று எம். ஆர். ராதா விளக்கம் தந்திருக்கிறாரே!

அரசியல் கேள்விகளுக்குப் பதில் சொல்கிறீர்களா?

படவுலகிலேயே பல அரசியல்கள் உள்ளனவே! அதைப்பற்றிச் சொன்னாலே போதாதா?

தேவிகாவின் நடிப்பு 'எடுபட'வில்லையே, ஏன்?

ஜெய்குமார் பிக்சர்ஸ் ''மகாவீர பீமன்'' படத்தில் சுந்தர்

அவரிடம் உள்ள நடிப்பை அவரிடமிருந்து 'எடு' 'பட' வைப்பதாக யார் சொன்னார்கள்?

ராஜேந்திரனும் விஜயகுமாரியும் என்ன செய்கிறார்கள்?

தங்களது 'தங்கரத்தினம்' பற்றி சிந்தித்து வருகிறார்கள்!

எஸ். பழனி, கண்டியூர்

'கடவுளின் குழந்தை'யில் எம். ஆர். ராதாவின் நடிப்பு எப்படி?

படத்திற்கு 'வைட்டமின் இஞ்சக்ஷன்' போல் இருக்கிறது!

பிரேம்நசீரின் சிறந்த படம் எது?

சமீபத்தில் நாங்கள் எடுத்துள்ள புகைப் படம் தான்!

பி. ஆர். பந்துலு நல்ல டைரக்டரா?

ஆம்; எல்லோருடனும் சிரித்துப் பழகும் 'நல்ல' டைரக்டர்தான்!

'கடவுளின் குழந்தை'யில் நாய் குழந்தையைத் தூக்கிக் கொண்டு போவதேன்?

'மஞ்சள் மகிமை' படத்தை மறந்து விடாமலிருக்க!

வி. சாந்தகுமாரி, விஜயநகரம்

சரோஜாதேவிக்கு ஆங்கிலத்தில் கடிதம் எழுதலாம் என்று நினைக்கிறேன். உங்கள் அபிப்பிராயம் என்ன?

கூடவே ஒரு அகராதியையும் அனுப்பி வையுங்கள்!

நடிகைகள் வரவரப் பார்க்கச் சகிக்காத முறையில் ஆடைகள் அணிகிறார்களே, இதற்குப் பெயர்தான் நாட்டின் முன்னேற்றமா?

தப்புக் கணக்குப் போட்டு விட்டீர்கள். நாட்டை விட்டு விட்டு 'நாகரீகம்' என மாற்றி விடுங்கள்!

நாதன், திருச்சி

ஜெமினி கணேசன் ஏன் சொந்தத்தில் படம் எடுக்கவில்லை?

அவர் (சு)தந்திரமாக திரையுலகில் இருக்க விரும்புவதால்!

ஆ. ஜெயரத்தினம், சென்னை

'நடிகர் திலக'த்தை ஊமைப் பாத்திரத்தில் நடிக்க வைத்தால்?

'தங்கமலை ரகசிய'த்தில் அதன் மாதிரியைக் கொஞ்சம் காட்டி யிருக்கிறாரே!

அருமைநாயகம், அஹமத்நகர்

என் நண்பர் நடிகை அங்கமுத்துவுடன் ராக்-என்-ரோல் நடனமாட ஆசைப்படுகிறார். அங்கமுத்து இதற்குச் சம்மதித்தால்?

அவரது இடுப்பைச் சுற்றி வளைத்து ஆட உங்கள் நண்பரின் கைக்கு நீளம் போதாதே!

காதலில் தோல்வி அடையக் காரணம்?

ஏதாவது ஒரு முனையில் தைரியம் செத்து விடுவதால்தான்!

சி. சுப்பிரமணியம், கண்டியூர்

கரைகாண முடியாதது எது?

மனிதனின் பேராசை.

இப்போது தமிழ் நாட்டுப் படவுலகம் எப்படி இருக்கிறது?

பெருமூச்சு விடும் நிலையில் இருக்கிறது.

கனவு ஏன் வருகிறது?

வாழ்க்கையில் பலிக்காததைக் கண்டு மகிழ!

நாம் ஏன் பிறந்தோம்?

சர்க்காருக்கு வரி கட்ட!

சி. சுப்பிரமணியம், சுழிபுரம், இலங்கை

எஸ். எஸ். ராஜேந்திரன் 'குறவஞ்சி'யில் குறவன் பாகம் தாங்கி நடிக்க முடியாது என்று விலகி விட்டார் என சில பத்திரிகைகளில் படித்தேன். அது உண்மையா?

அது காரணமல்ல.

'இரும்புத்திரை' வெற்றிப் படமா, தோல்விப் படமா?

வாசனுக்கு அது ஒரு வெற்றிப் படம்!

ஸ்டான்லி பாலஸ், நாகர்கோயில்

வைஜயந்தியின் தாயார் வசுந்தரா தேவியின் வேலை என்ன?

மகள் ஊரிலிருக்கும்போது அவருடன் வந்து தங்கியிருப்பது; மகள் ஊரில்லாத சமயம் தனியே உள்ள தன் வீட்டில்தானே சமைத்துச் சாப்பிடுவது- இவைதான்!

சரவணபவா-யூனிடியின் 'புரொடக்ஷன் 4'' படததில் பாலய்யா.

ஜே. பி. ஆறுமுகம், பவானி ஜம்பை

சிவாஜி கணேசன் இப்போது எத்தனை படங்களில் நடித்து வருகிருர்?

சில தினங்களுக்கு முன்புதான் அவர் நாற்பத்தேழாவது படத்தில் நடிக்க கையொப்பமிட்டார்! அதாவது நாற்பத்தேழு படங்களில் நடித்து வருகிருர்!

தன்னுசியப்பன், வேளப்பாளையம்

'பார்த்திபன் கன'வில் வரும் சித்திரக் காட்சி எங்கே இருக்கிறது?

சோழர் காலத்துச் சித்திரங்களை அடிப்படையாக வைத்து ஆர்ட் டைரக்டர் மணியம் உருவாக்கியது அந்தச் சித்திரச்சாலை. படத்திற்காக உருவாக்கப்பட்ட இது, கலைக்கப்பட்டு விட்டது!

எட்வர்ட் துரையப்பா, குசலை, இலங்கை

நடிகர் திலகம் ஆங்கிலப் படங்களில் நடித்தால்?

ஜோகர்களுக்கு அங்கே இடமே இருக்காது!

கர்நாடக சங்கீத மறிந்த சிறந்த பின்னணிப் பாடகி யார்?

வசந்தகுமாரியைச் சொல்லலாம், தற்போது.

'நர்திவர்மன் காதலி' படம் எந்தக் கட்டத்தில் இருக்கிறது?

'தாய் மகளுக்குக் கட்டிய தாலி' பாட்டுப் புத்தகத்தின் பின்னட்டையை நிரப்ப உதவிய விளம்பர அளவோடு!

இயற்கையும் செயற்கையும் இரண்டறக்கலந்து விட்டால் எப்படி இருக்கும்?

அங்கே தெய்வ கமால கலை ஒளி வீசும்.

ஏ. என். எஸ். பிரகாசம், சென்னை

நான் 'வாழக்கையில் தவறியவள்' என்ற கதையை எழுதி யிருக்கிறேன். 'பேசும்-பட'த்தில் பிரசுரிப்பீர்களா?

சிறு கதை வேளியிடுவதில்லை என்ற ''கொள்கையிலிருந்து தவறியவர்கள்'' என்ற பட்டத்தை 'பேசும் படம்' வாங்கத் தயாராக இல்லை.

ரங்கசாமி, விஜயமங்கலம்

டைரக்ஷன் என்ருல் அர்த்தம் என்ன?

முன்பெல்லாம் படத்தைக் ''கட்டி காப்பவர்'' என்று சொல்வார்கள். இப்போது 'கட்டிப் போடப்பட்டவர்' என்று சொல்கிருர்கள்!

சென்னைக்கு வந்தால் தங்களைக் காண முடியுமா?

நான் ஒரு காட்சிப் பொருளல்ல!

ஏதாவது ஒரு கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் நீங்கள் திணறியதுண்டா?

என் மனைவியின் கேள்விகள் பலவற்றுக்கு அம்மாதிரி நேர்ந்திருக்கிறது!

எம். ஜி. ஆர். ஏன் பக்திப் படங்களில் நடிப்பதில்லை?

''பக்தி என்பதற்கு முதலில் விளக்கம் தாருங்கள். பின்னர் நானும் இதற்குப் பதில் சொல்கிறேன்'' என்பார் எம். ஜி. ஆர்.

பி. அனந்தராகவன், பாலவேடு

சினிமாவை எதற்கு உவமையாக கூறலாம்?

ஒரு தொத்து நோயுக்கு!

குறுகிய காலத்தில் பணம் சம்பாதிக்கும் வழி எது?

எனக்கும் அதை அறிந்து கொள்ள ஆவலாக இருக்கிறது!

சினிமாவில் சேருவதற்கு யாரைப் பிடிக்க வேண்டும்?

உமது வார்த்தைகளில் ஏமாறுபவரை!

நடிகர் திலகம், சின்னப்பா, பாகவதர் இவர்களின் நடிப்பை வரிசைப் படுத்தவும்?

உமது வரிசையே சரியாக இருக்கிறது!

ச. ந. தர்மலிங்கம், சத்தியமங்கலம்

முப்பெரும் கலைஞர்களைச் சேர்த்து நடிக்க வைக்க ஒரு படமுதலாளி முயற்சித்து வருகிறார் என்று சொன்னீர்களே, அது சமூகப் படமா, சரித்திரப் படமா?

பிரபல நாவலாசிரியரின் சரித்திரக் கதை ஒன்றைத்தான் அவர் சொன்னார்.

ஹிந்தி நடிகர் பிருதிவிராஜை எந்த தென்னிந்திய நடிகரோடு ஒப்பிடலாம்?

நாகய்யரவுடன்! ஆனால் பிருதிவிராஜ்-க்கு இருப்பதுபோல் நாகய்யாவுக்கு நக்ஷத்திர நடிகர்களாக எந்தப் பிள்ளைகளும் இல்லை!

துணிவை எப்போது அடைகிறோம்?

பொறுமையைத் தன்மானம் வென்று விடும்போது.

பரீதா ஹனீபா, கொழும்பு, இலங்கை

பத்மினியைப்பற்றி சில வரிகள்?

திருமணத்திற்குத் தயார் படுத்திக் கொண்டு வரும் அவர், நடித்து வரும் படங்களை மளமள வென்று முடித்து வருகிறார்.

கே. எஸ். சிதாராமன், பரமத்தி

திரைப்படங்களில் ஆபாசத்திற்கு காரண கர்த்தா யார்?

அதை அனுமதிப்பவர்கள்தான்!

கல்யாண(ப்) பரிசு, மீண்ட சொர்(க்)கம் போன்று படத்திற்குப் பெயர் வைத்தால் தமிழ் வளர்ச்சியும் இலக்கணமும் என்னாவது?

ஒன்றும் ஆகிவிடாது! இரண்டாயிரம் வருஷங்களாக வளர்ந்து வரும் தமிழை கேவலம் இந்த மாதிரித் தலைப்புகள் ஒன்றும் செய்துவிட முடியாது!

''சினிமா பார்ப்பதால் உடலுக்கும் கெடுதி; உள்ளத்திற்கும் கெடுதி'' என்று ஒரு அமைச்சர் சொல்கிறார். மற்றொரு அமைச்சர், ''சினிமா நிறைய பாருங்கள். அரசுக்கு அத்தனையும் வருமானம்'' என்று சொல்கிறார். எப்படி இருக்கிறது?

''கலைஞர்களுக்குள் ஒற்றுமை தேவை'' என்று முதலமைச்சர் சொல்கிறார்!

சேவல் மார்க்கு உயர்தர ஊதுவத்திகள், வாசனைகள், கஸ்தூரி பத்தி, கதம்ப அத்தர், சுத்த சந்தன முகப்பவுடர், மட்டிப்பால் பத்தி, புனுகு, அரகஜா, வாசனை சந்தனப்பவுடர், ப்ளவர் டஸ்டு பாக்கெட் (ஆடைப்பெட்டியில் வைக்க).

கூந்தல் செழிக்க — நீலா — இளநரை தடுக்க

"நஞ்சன்கூடு பல்பொடி" பாக்டெரி தயாரிப்பு

பல விருத்திக்கு: ஆல்மன்டைன், ஓஜோலா.

சோல் ஏஜண்டு: யுனைடெட் கன்ஸர்ன்,

54, பந்தர் தெரு, சென்னை-1.

மாடர்ன் தியேட்டர்ஸாரின் ''கைதி கண்ணாயிரம்'' படத்தில் ராஜசுலோசனா.

சி. ராகவேந்திரன், சென்னை

மீண்ட சொர்கம், படிக்காத மேதை இரண்டில் சிறந்தது எது?

இரண்டாவது படம்தான்.

'மீண்ட சொர்க'த்தில் மகாலிங்கத்தின் நடிப்பு எப்படி?

ஜெமினி கணேசனுக்கு காரியதரிசியான அவர், படத்திலும் அதே பாத்திரத்தில் வந்ததால் நடிக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. ஆனால் கால்சட்டையை, பைஜாமாவைப்போல் அவருக்கு ஏன் தந்திருக்க வேண்டும்?

எம்.எஸ். வள்ளிமயில் சுப்பிரமணியம், கூனியூர்

எம்.ஆர். ராதாவின் மகன் எந்தப் படத்தில் நடிக்கிறார்?

ப. நீலகண்டன் உருவாக்கப் போகும் படத்தில்.

மீண்ட சொர்கம் - க் - காணோமே?

கல்யாண பரிசு - ப் - பைத்தேடிப் போய் விட்டது!

கதாநாயகியே இல்லாமல் - அதாவது நடிகையே நடிக்காத ஒரு படம் வந்தால் ஓடுமா?

நல்ல கதையாக இருந்தால் கதா நாயகி என்ன, கதா நாயகன் இல்லாவிட்டால்கூட ஓடும்.

எஸ். ஸம்சூன் முகமட் லதீப், மாத்தளை, இலங்கை

மலரின் சுவை மங்கினால் என்னவாகும்?

கவர்ச்சியின் சக்தி குறைந்து விடும்.

புதுமுகம் வேண்டும் வேண்டும் என்று கூவுவது ஏன்?

பெரிய நடிகர்கள் தரும் புது அனுபவங்கள்தான்.

மனிதனுக்கு எழில் தருவது அவனது முகமா அல்லது உடலா?

அவனது ஒழுக்கமும் பண்பும் தான்!

டி.எஸ். சுகவனம், சேலம்

உலகிலேயே அதிக வருமானமுள்ள நடிக, நடிகை யார்?

அமெரிக்காவில் உள்ள எலிசபெத் டெய்லர், வில்லியம் ஹோல்டன் இருவரையும் சொல்லலாம். எலிசபெத் டெய்லர் சமீபத்தில் பத்து லட்சம் டாலர்களுக்கு ஒரு படத்தில் நடிக்க ஒப்புக் கொண்டிருக்கிறூர். அதாவது ஐம்பது லக்ஷம் ரூபாய்கள்! இது தவிர, இவரது கணவரது சொத்தும் ஏராளமாக இருக்கிறது. வில்லியம் ஹோல்டனுக்கு அவர் நடித்த 'குவாய் நதி பாலம்' படத்தின் ஒரு பகுதி வருமானமே கோடிக் கணக்கில் வரப்போகிறது. தற்போது இவர்கள் இருவருமே உலகின் பணக்கார நடிகர்கள்.

சிவாஜி ஹிந்திப் படத்தில் நடித்தால்?

'தெய்வப் பிறவி' ஹிந்திப் படத்தில் நடிக்க வைக்க டைரக்டர்கள் கிருஷ்ணன் - பஞ்சு முயன்றும் முடியாமற் போய்விட்டது. தமிழ்ப் படங்களில் நடிக்கவே அவருக்கு நேரம் போதவில்லையே!

உங்களுடைய நண்பன் யார்?

எனது 'பேனு'.

துரை. முருகேசன், காரமடை

அறிவுடன் ஆற்றல் இணைந்தால்?

அங்கே ஒரு 'மேதை' தோன்றுவார்!

பெருமைக்கு உறைகல் எது?

செய்யும் செயல்.

காதல் கனி என்ருல், கடமை எதைப் போன்றது?

கனியின் சுவை போன்றது.

'எல்லாரும் இந்நாட்டு மன்னர்' 'பார்த்திபன் கனவு' இரண்டு படங்களில் கலை அமைப்பில் சிறந்த படம் எது?

சந்தேகமில்லாமல் 'பார்த்திபன் கனவு'தான். அனுபவஸ்தர் சேகரின் கைவண்ணம் 'எல்லாரும் இந்நாட்டு மன்ன'ரில் எடுபடவில்லை!

சத்தி லிங்கய்யா, கோவை

ஒரு படம் வெற்றி பெற நடிகர்கள் தான் முக்கியமா?

அப்படியிருந்தால் ராஜபக்தியும், பாக்தாத் திருடனும், குறவஞ்சியும் ஓடியிருக்க வேண்டுமே! நல்ல கதை தான் ஒரு படத்தின் வெற்றிக்கு ஜீவநாடி. மற்றவை எல்லாம் இரண்டாம் பட்சம்தான். இதை என்றுதான் நமது தயாரிப்பாளர்கள் உணருவார்களோ!

'செந்தாமரை' என்னவாயிற்று?

பயமுறுத்திக் கொண்டிருக்கிறது!

க. இரத்தினசிங்கம்,
கிளிநொச்சி, இலங்கை

ஒரு சண்டைக் காட்சியைப் பார்க்கும்போது என்ன நினைப்பீர்கள்?

எவ்வளவு பொருள்கள் சேதமடைகின்றன விணுக, என்றுதான் கவனிப்பேன்.

மா.வி.செ. ராசன், பல்லடம்

'சிம்மக் குரலோன்' என்ற பட்டம் தற்போது சிவாஜி கணேசனுக்குப் பொருந்தாது அல்லவா?

ஓரளவு உண்மைதான்! அவர் தான் வசனம் பேசுவதைக் குறைத்து நடிக்க ஆரம்பித்து விட்டாரே!

ராமமூர்த்தி, சிவகெங்கை

விவாகரத்து நடிகைகளுக்கு எதைப் போன்றது?

விளம்பரத்துடன் கூடிய தற்கொலை!

மகாத்மா காந்தி வெள்ளிக்கிழமை சுடப்பட்டார்; லிங்கன் வெள்ளிக்கிழமை மடிந்தார்; ஏசுகிறிஸ்து வெள்ளியன்று சிலுவையில் அறையப்பட்டார். இவை எதைக் காட்டுகின்றன?

வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டு மடிந்து விடும் சில படங்களை நினைப்பூட்ட வில்லையா?

ஹிந்தி நடிகர் பிரேம்நாத் பற்றி வட இந்திய பத்திரிகைகளில் கூட அதிகம் வருவதில்லையே, ஏன்?

படவுலகைப் பொருத்தவரை அவர் 'மஞ்சள் இரண்டணு'வாகி விட்டார்.

நௌஷத் உண்மையிலேயே பெரிய சங்கீத டைரக்டரா?

உண்மைதான். இல்லாவிட்டால் சமீபத்தில் அவர் இசை அமைத்து வந்திருக்கும் 'மொகலே ஆஜம்' படத்திற்கு ஒரு பாட்டை நூற்றுஐந்து முறைகள் எழுதச் செய்திருக்க முடியுமா?

வீட்டு வைத்தியம்

கணவன் சொல்கிறான் :

ஆபீசுக்குக் கிளம்பி ஐந்தே நிமிடங்களில் நான் திரும்பி வந்ததும் என் மனைவியின் முகத்தில் கேள்விக்குறி எழும்பியது. எதை மறந்துவிட்டேன், பர்ஸையா? பவுண்டன் பேனாவையா? . . . அல்லது திடீரென உடம்புக்கு ஏதேனும் . . . ?

"ஒன்றுமில்லை, என் சட்டைக்குத்தான் உடம்பு! '' என்று கூறி முதுகுப்புறத்தைக் காண்பித்தேன். எடை காட்டும் கருவியிலுள்ளது போல பத்து நயா பைசா நுழையும் அளவுக்கு ஒரு கிழிசல்! உடுத்தியபோது என் கண்ணில் படாத இந்தக் கிழிசல், பஸ் ஸ்டாண்டில் என் நண்பனின் கண்ணில் பட்டது. பெட்டியிலுள்ள மற்ற சட்டைகளுக்கோ காலர்களில் கோளாறு!

"ஒரே நிமிஷம். சரிசெய்துவிடுகிறேன். போய்விடலாம் ஆபீசுக்கு" என்று ஊசி நூலை எடுத்தாள் மனைவி.

"வேண்டாம். சீக்கு என்று லீவுக் கடுதாசு அனுப்பிவிட்டேன் ஆபீசு சிநேகிதன் மூலமா. இன்னைக்கி ஹாய்யாக இருக்கலாம்" என்றேன்.

ஆனால், 'ஹாய்'யாக என்றால் . . . ? நல்ல துணிகளெல்லாம் இன்னும் அழுக்கு மூட்டையில் ஐக்கியமாகியிருக்கையில், ஒரு பார்க்கோ, மெரீனாவோ, சினிமாவோ போகமுடியுமா? பகல் தூக்கம் ஒன்றுதான் முடியும்!

கண்ணை மூட முயன்ற சமயத்தில் வாசற்புறம் பேச்சுக் குரல் ஒலித்தது: "உன் கணவருக்கு என்ன உடம்பு?"—இக் குரல் என் மனைவியின் சிநேகிதியான டாக்டர் கண்ணம்மாவினுடையது.

"தலைவலியும் கதகதப்பும்'' என்றாள் என் மனைவி. எனக்குப் பகீரென்றது. டாக்டரம்மா என் உடம்பைப் பரிசோதிக்க வந்துவிடவே, "என் உடம்புக்கு ஒன்றுமில்லை. என் சட்டைக்குத்தான் உடம்பு . . ." என்று குழறினேன். கண்ணம்மா புன்னகை புரிந்தாள். நிலைமையை சமாளித்துக்கொண்டு அவளை முன்கட்டுக்கு அழைத்துச் சென்றாள் என் மனைவி.

எனக்கும் தூக்கம் கண்ணைச் சுழற்றியது. அப்புறம் என் மனைவி காப்பி சகிதம் என்னை எழுப்பியபோது மணி நான்கு இருக்கும். ஊஞ்சல் பலகை மீது பளிச்சென்று வீற்றிருந்த ஒரு துணி வரிசை என் கண்களைக் கூச வைத்தது. "சலவையாகி வந்துவிட்டதா" என்று கேட்டேன்.

S/P 4A 50 TM

"எபபடி ? பளிச்சென்றிருக்கிறதா ?", என்று முறுவலித்தாள். "நீயே சலவை செய்தது போல நடிக்கிறயே ?" என்றேன்.
''நெஜமா. நான்தான் செய்தேன் !"
"கதைக்காதே. இவ்வளவு பளிச்சென்று ? இவ்வளவு துணிகளையுமா ? அபபடியொன்றும் அசந்து தூங்கிவிடவில்லை நான். அடித்துத் துவைத்த சத்தம் என்னை எழுப்பியிருக்காதா ? "என்றேன். ஆனல் அவள் விளக்கிக் கூறிய பிறகுதான் எனக்கு விவரம் புரிந்தது.

மனைவி சொல்கிருள் :

மனிதருக்கு மட்டும்தான் டாக்டராக இருப்பவர் என்றெண்ணிய போது துணிகளுக்கும் டாக்டராக மாறிவிட்டாளே இந்தக் கண்ணம்மா! துணி கிழிவதைக் காயம் படுவதற்கும், பித்தான்கள்



உடைவதை எலும்பு முறிவுக்கும் ஒப்பிட்டு அவள் பேசியபோது தமாஷாயிருந்தது. அவள் கூறினுள் :
" உங்கள் கணவர் கூறியதுபோல, துணிகளின் ஆரோக்கியமும் நாம் கவனிக்க வேண்டிய விஷயமே. அழுக்கடைந்த துணிகளை நாள் கணக்காக வைத்துக்கொண்டு அப்புறம் சலவைக்குக் கண்மறைவாக அனுப்பிவிடுவது நல்லதல்ல. சுத்தமான நல்ல சோப்பை உபயோகித்து உடனுக்குடனே நம் கையினுலேயே துவைத்துவிடுவது போலாகாது."
"சொல்வது சரிதான், ஆனல் இப்போது நீங்கள் கட்டிக்கொண்டிருக்கும் வெளுப்பான புடவையைப்போல ஆகுமா வீட்டுச் சலவை ?" என்றேன்.
"நல்ல கேள்வி கேட்டீர்கள். இது என் கையாலேயே வெளுத்த புடவை. எல்லாத் துணிகளையும் அன்றன்று நானே துவைத்து விடுகிறேன்'' என்ருள். பிறகு கையோடு என்னை அவள் வீட்டுக்கே அழைத்துச் சென்று, தான் அலசி உயர்த்தியிருந்த, தும்பைப் பூத் தோரணம் போன்ற துணி வரிசையைக் காண்பித்தாள். எனக்கு மலைப்புத் தட்டியது.
" ஆனல் ஸன்லைட் விலையைப் பற்றி யோசித்தால் . . . '' என்று இழுத்தேன்.
கண்ணம்மா குறுக்கிட்டாள் : . . . துணிகள் அடிக்கடி கிழிந்து, அடிக்கடி புதுத்துணி வாங்குவதைப்பற்றி யோசியுங்கள். ஸன்லைட் சலவையில் அந்தக் கவலையே இல்லை. கொள்ளாக் கொள்ளையான நுரை தரும், சக்திவாய்ந்த சோப்பாதலால், அடித்துத் துவைக்காமலேயே பளிச்சென்று வெளுத்து விடும். ஆகவே துணிகளுக்கு ஆயுசுகெட்டி. அதோடு, கொஞ்சம் ஸன்லைட் உபயோகித்தாலும் ஏராளமான துணிகளை வெளுத்துத் தரும். சோப் செலவும் மிச்சமாகும். ஆகவே, இரண்டு விதத்திலும் சிக்கனம், இல்லையா ? ''
அவள் சொன்னபடியே ஒரு ஸன்லைட் வில்லை வாங்கிவந்து இந்தத் துணிகளுக்குப் போட்டேன். '' கண்ணம்மாவின் வாய்க்கு சர்க்கரைதான் போட வேண்டும் !'' என்றேன் என் கணவரிடம். பளிச்சிட்ட அந்தத் துணிகளின் மீது பார்வை பதித்திருந்த அவர் திடீரென முகமலர்ந்து " செல்லம், இன்று நாம், சினிமா சாயங்கால ஆட்டத்திற்குப் போகிருேம், தயாராகு'' ! என்ருர்.



இந்துஸ்தான் லீவர் லிமிடெட் தயாரிப்பு
S/P. 48-50 TM

தபால் பெட்டி

*எச்சரிக்கை

மேலை நாடுகளில் 'டெலிவிஷன்' அறிமுகப்படுத்தப்பட்டபின், படங்களின் தரம் உயர்ந்திருக்கிறது. படங்களுக்கு வரவேற்பு குறைந்து விடப்போகிறதே என்ற பயம் அவர்களுக்கு. ஆனால் நம் தென்னிந்தியப் படாதிபதிகள் எதைப்பற்றியும் கவலைப்படாமல் டப்பாப் படங்களைத் தயாரிப்பதில் வெற்றி பெற்று வருகிறார்கள்! டெலிவிஷன் போன்ற புதுமைகள் இல்லாத போதே - போட்டியின்றியே அவர்களது படங்கள் தோற்று விடுகின்றன! இந்த நிலை வளருமானால் படவுலகம் அழியும் நாள் விரைந்து வருகிறது என்று நான் அர்த்தம். இந்த ஆண்டு ஆரம்பித்து மாதங்கள் பத்து கடந்து விட்டன. படிக்காத மேதை ஒன்று தான் வெற்றிப்படமாக ஓடிக் கொண்டிருக்கிறது. தெய்வப்பிறவி பாராட்டுப் பெற்றது. மற்றவைகளில் சில சுமாரான வெற்றி பெற்றன. ஆனாலும் படாதிபதிகள் பயமின்றிப் படங்களுக்குப் பூஜை போட்டு வருகிறார்கள். சினிமாவின் ஸ்தானத்தை வேறு ஏதேனும் அடையுமுன் அதன் தரத்தை உயர்த்தி, பெருமையை மீட்க, தயாரிப்பில் உண்மையான நாட்டங் கொண்ட சினிமா உலக பிரமுகர்கள் ஏதேனும் வழி செய்தாக வேண்டும்.

சு. அ. த. அண்ணாமலை,
பாண்டிச்சேரி.

**ஆதரவு தேவை

தற்போது ஏராளமான இளம் நடிக, நடிகையர் படவுலகில் நுழைந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களில் சிலர் தம் திறமையை வெளிப்படுத்த முயலும்போது, ''இன்னாரைக் காப்பியடிக்கிறார்கள்'' என்று சிலர் கண்டித்து விடுகிறார்கள். அவர்களிடமுள்ள ஆர்வத்தை இந்தக் கண்டனம் அடக்கி விடுகிறது. ஒருவரைப்போல் காப்பியடிப்பது தவறு என்பது நியாயம் தான். ஆனால் சிலவற்றை நாம் அனுமதித்து, இளம் கலைஞர்களுக்கு ஊக்கமூட்ட வேண்டும். நக்ஷத்திர ஸ்தானம் பெற்றவர்களிலும், சில விஷயங்களில் காப்பியடிக்காதவர் தொகை குறைவு. அப்படியிருக்கையில் வளரும் பயிர்போன்ற இளம் கலைஞர்களை - அவர்களிடம் குறைகளிருந்தாலும், அதிகம் பாராட்டாமல் ஆதரவளித்து ஊக்கமூட்டினால் நாளடைவில் எல்லாம் சரியாகி விடும்.

பேபி,
சென்னை.

கலைவேறு; கட்சிவேறு

சில கலைஞர்கள் முன்னணிக்கு வரும்வரை கலையில் நாட்டம் செலுத்துகிறார்கள். அவர்களுக்கு ஏதாவதொரு படத்தில் புகழ் கிடைத்து விடுகிறது. அதன்பின் அவர்கள் தங்களைப்பற்றி அதிகம் மதிப்பிட்டுக்கொண்டு அரசியல் துறையிலீடு படுகிறார்கள். கலையும் அரசியலும் பலவந்தமாகப் பிணைக்கப் படுகின்றன. பாத்திரத்துடன் ஒன்றி நடிப்பதைவிட, கட்சிக் கொள்கைகளை விளக்கும் செய்திப் படமாக்கி விடுகிறார்கள். இதனால் கலைக்கு நஷ்டமே ஒழிய லாபமில்லை. ஆகவே படங்களில் நடிப்புத் திறனைக் காட்ட வேண்டுமே தவிர, கட்சியைப் பரப்பக்கூடாது. சில நடிகர்கள் நடிப்பில் அக்கறை காட்டுவதால் நாளுக்குநாள் அவர்கள் புகழ் வளர்ந்துகொண்டே போவதையும் இங்கு குறிப்பிடாமலிருக்க முடியவில்லை. ஆகவே கலை வேறு; கட்சி வேறு என்பதை யாவரும் உணர வேண்டும்.

வே. இராமசாமி,
ஆத்தூர்.

வேண்டாம் வாய்வீச்சு!

புகழ்பெற்ற நக்ஷத்திரங்கள் சிலர் இருக்கிறார்கள். பத்திரிகையாளர்கள் ஒவ்வொருவரிடம் ஒவ்வொரு

---

* முதற் பரிசு ரூ 15.
** இரண்டாம் பரிசு ரூ. 10

இவ்வழகி உபயோகிப்பது **ஜேய்** சோப்...

நீங்களும் ஏன் உபயோகிக்கக்கூடாது?

ஜேய் சோப் அளிக்கும் மோகன எழில்
உங்களுடையதே.. மிருதுவாக மேனிக்கு
மெருகிடுகிறது...பரவசப்படுத்தும் நறுமணம்
கமழுவது, என்றிருந்தாலும் அது மேனியழகிற்கு
சிறந்ததோர் சோப். எப்பொழுதும்..ஜேய்
சோப் உபயோகியுங்கள்.

டாடா தயாரிப்பு

TJY-4





பாரகன் பிக்சர்ஸ் "நீதிக்கு ஒரு பெண்" படத்தில் ஜமுனா.

விதமான அபிப்பிராயம் தெரிவிக்கிறார்கள். சிலர் வீண்பெருமை பேசிக்கொள்ளுகிறார்கள். "ஹிந்திப் படங்களில் நடிக்கப் போவதில்லை. ஏராளமான தமிழ்ப் படங்களில் வேலை இருக்கிறது" என்று, சமீபமாகப் புகழேணியில் ஏறிய ஒரு நடிகை ஒரு பேட்டியில் கூறியிருக்கிறார். ஆனால் அதே பத்திரிகையில் அவர் ஹிந்திப் படங்களில் நடிக்கப்போகும் செய்தி வருகிறது. எந்தப் பாஷைப் படத்தில் நடிப்பதையும் யாரும் தடைசெய்யவில்லை. செய்யவும் முடியாது. நடிக்க விருப்பமிருந்தாலும், சந்தர்ப்பம் கிடைக்காததால், ஹிந்திப் படங்களில் நடிக்கமாட்டேன் என்று கூறுகிறார்கள் போலும். புதுப்புது முகங்களைத் திரையில் காட்ட விரும்பும் ஹிந்திப் படாதிபதிகள், தென்னிந்தியப் படங்களில் புகழ் பெற்ற நக்ஷத்திரங்களைப் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள். இதனால் அவர்களது படங்களும் வெற்றி பெறுகின்றன. இங்கு புகழ் பெற்ற நக்ஷத்திரங்கள் அங்கே புது முகங்களாகி ஹிந்தி படாதிபதிகள் சொல்படி ஆடுகிறார்கள். இவர்களுக்கு ஏன் வாய்வீச்சு?

இரா. கல்யாணசுந்தரம்,
சென்னை.

சுவரொட்டி விளம்பரங்கள்!

நீண்ட நாட்களாகவே விளம்பரங்கள் சுவரொட்டிகள் மூலம் நடைபெற்று வருகின்றன. இப்போது அரசாங்கம் அதைத் தடை செய்து விட்டது. இதனால் பல செய்திகள் மக்களுக்குத் தெரிய முடிவதில்லை. முன்பு இப்படியிருந்தபோதிலும் 'நோட்டீஸ் ஒட்டக்கூடாது' என்று எழுதப்பட்டிருக்கும் சுவற்றின்மீது அந்த எழுத்துக்கள் தெரியாதபடி சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுவிடும்!

இப்போது சினிமாவுடன் சுவரொட்டி விளம்பர முறையும் வெகுவாக வளர்ந்திருக்கிறது. இந்த நிலையில் சுவரொட்டிகள் கூடாது என்றால், விளம்பரத்திற்காக மாற்று முறைகளில் ஏராளமான தொகை செலவிடப்பட வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. சுவரொட்டிக்காக பலவித வர்ணப் படங்கள் தயாரிக்கப்படுகின்றன. இவை சுவற்றில் ஒட்டப்பட முடியாவிட்டால் ஓரளவு அழகு குறையவே செய்கிறது. ஆனால் ஜனாதிபதி விஜய சுவரொட்டிகள் மட்டும், தடை செய்யப்பட்ட பின் சுவற்றில் ஒட்டப்பட்டன! இப்போதும் சிலர் விவரம் தெரியாமலோ, துணிந்தோ சுவரொட்டிகளை ஒட்டி விடுகிறார்கள்! தடையினால் ஒரு லாபம். வேண்டாதவர்களின் படங்கள் சுவரொட்டிகளில் இருந்தால் சாணம் எறிய முடியாது! அரசாங்கம் இதற்கு ஏதாவது மாற்று ஆலோசனை கூற முன்வர வேண்டும்.

சு. சுப்பராமன்,
சென்னை.

யார் காரணம்?

அண்மையில் அயல் நாடுகளில் திரைப்பட விழாக்கள் நடைபெற்றன. இவற்றில் பாரதம் பரிசோ, பாராட்டோ பெற முடியவில்லை. ஒரு செய்திப் படத்தை, விழாவுக்கு வந்திருந்தோர் கேலியும் செய்ய நேரிட்டது. பாரதத்தில் பரிசுபெறத் தகுதியுள்ள படங்கள் எதுவுமே தயாராகவில்லையா? இந்தப் பட விழாக்களுக்கு ஏன் நல்ல படங்கள் அனுப்பப்படவில்லை? தேர்ந்தெடுக்கும் பொறுப்புள்ளவர்களே இதற்குப் பொறுப்பாளிகள். பாரதத்தில் தயாராகும் படங்களை பிரதேச பாகுபாடின்றி, சிறப்பு அம்சங்களைமட்-

தமிழ் நாடு டாக்கீஸாரின் "மல்லியம் மங்களம்" படத்தில் வரும் உச்சக்கட்டக் காட்சிகளில் இது ஒன்று.

டும் அடிப்படையாகக் கொண்டு தேர்ந்தெடுத்து ஏன் அனுப்ப வில்லை? இனியாவது படங்களின் தரத்தை மட்டும் சீர்தூக்கிப் பார்த்து, அயல்நாடுகளுக்கு நல்ல படங்களை அனுப்பி வைப்பார்களா?

மு. கிருட்டினமூர்த்தி,
வாணியம்பாடி.

ஏன் கூடாது?

நக்ஷத்திரங்கள் குறிப்பிட்ட கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதற்காக, கலையை கட்சியுடன் கலக்கிறார் என்று குற்றம் சாட்டுகிறார்கள். கலைஞன் மக்களின் பொதுச் சொத்துதான். ஆனால் அவனும் மக்களில் ஒருவன். சொந்த விருப்பு, வெறுப்பு, அரசியல் எல்லாம் அவனுக்கும்தான் உண்டு. கலைஞனுக்கு அரசியல் கூடாது என்கிறார்கள். ஆனால் எந்த அரசியல் மாநாட்டில் கலை விழாக்கள் நடைபெறுவதில்லை? இப்போதெல்லாம் சாதாரண அரசியல் கூட்டங்களில் கூட கலை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. அதிலும் கட்சி அங்கத்தினர்கள், வேடம் போட்டு கட்சிப் பிரசார நாடகங்களில் நடிக்கிறார்கள். தி. மு. க.வை கூத்தாடிகள் என்று கேலி செய்தபிறகு, காங்கிரஸ் கூட்டங்களில் காங்கிரஸ் கூத்தாடிகள் பலர். தி. மு. க. மற்றும் இதர கட்சிகளைக் கேலி செய்யும் நாடகங்களை நடத்துகிறார்கள். தேர்தலின் போது, ஊருக்கொரு நியாயம்-தங்களுக்கொரு நியாயம் என கட்சிப் பிரசாரப் படங்களை சினிமா, கலைஞர்களைக் கொண்டே தயாரித்திருக்கிறார்கள். ஆகவே கலைஞன் கட்சியைக் கலையில் குழப்பக்கூடாது என்றால் அது யாவருக்கும் பொதுவானதாக இருக்கவேண்டும். ஆகவே எம். ஜி. ஆர். போன்ற நடிகர்கள்மேல், கட்சியைச் சேர்ந்தவர் என்று குற்றம் சாட்டுவது தவறு. அவரைப்போல் புகழ் பெற்றவர்களிடம் படாதிபதிகள் பல்லைக்காட்டி ஒப்பந்தம் செய்த பின், 'அதைச் சொன்னார், இப்படிச் செய்தார்' என்று குற்றம் சாட்டுகிறார்கள். எம். ஜி. ஆர்., தி. மு. க. அங்கத்தினர் என்று தெரிந்தும், ஒப்பந்தம் செய்தபின் ஏன் குறை கூறுகிறார்கள்? அந்தக் காலத்தில் காங்கிரஸ் கட்சியை ஆதரித்து நாடகம் நடத்திக் கொடுக்காத கம்பெனிகளே இல்லையே! 'இன்னாரைப் பிடிக்கவில்லை; தாக்குகிறோம்' என்று கூறட்டும். (தனிப்பட்டவரை வெறுக்கும் பிறவிகள் தேசத்துரோகிகள். ஆனாலும் மன்னிக்கிறோம்.) ஆனால் கட்சியைச் சேர்ந்தவர் என்பதற்காக கட்சிக்கும் அவருக்கும் அநியாயம் செய்வதை நிறுத்தட்டும்.

ஸம்பத்,
சென்னை.

ஏன் புதுமை இல்லை?

புகழ்பெற்ற நக்ஷத்திரங்கள் நடித்து வெளிவரும் படங்களைப் பார்த்தபின் 'புதுமை இல்லை- வந்து போன சம்பவங்கள்' என்று விமர்சிக்கிறார்கள். இதற்குக் காரணம் தயாரிப்பாளர்கள். நக்ஷத்திரங்களை ஒப்பந்தம் செய்துவிட்டு பணம் சம்பாதிப்பதில் மட்டும் அக்கறை காட்டுகிறார்கள். நக்ஷத்திரங்கள் தினமும் ஒரே படத்தில் தொடர்ந்து நடிக்க முடியுமா? ஒப்பந்தமாக மறுத்தாலும், காலில் விழுந்தாவது ஒப்பந்தம் செய்து விடுகிறார்கள். பிறகு அடிக்கடி படப்பிடிப்புக்கு அழைக்கிறார்கள். வராவிடில் குறை கூறுகிறார்கள். இதற்கிடையே சிறு படங்களில் இந்தப் பெரிய படத்தின் சம்பவங்கள் வந்து விடுகின்றன. இதில் புதுமை எப்படி இருக்க முடியும்? ஆகவே நக்ஷத்திரங்களை சரித்திர, புராணப் படங்களுக்குமட்டும் ஒப்பந்தம் செய்து கொண்டு, சமூகப் படங்களுக்கு இளம் கலைஞர்களை ஒப்பந்தம் செய்து, குறைந்த செலவில் தயாரிக்க வேண்டும். எப்படியும் படத்தயாரிப்புக் காலம் ஒரு வருடத்திற்குள் இருந்தால்தான் நல்லது. கதையில் புதுமை இல்லை என்கிறார்கள். எல்லோரும் ஒரே ஆங்கில அல்லது ஹிந்தி அல்லது வங்காள படத்தையோ, கதையையோ பார்த்துவிட்டுத் தமிழில் ரகசியமாகத் தயாரித்தால் யாரிடம் புதுமை காண முடியும்?

பன்னீர்செல்வம்,
வளவனூர்.



எல். விஜயலக்ஷ்மி
போட்டோ : திருச்சி கே. அருணாசலம்



ராஜாமணி பிக்சர்ஸாரின் முதல் தமிழ்ப் படம் நெப்டியூன் ஸ்டுடியோவில் மிக வேகமாகத் தயாராகி வருகிறது. கொட்டாரக்கரா கதை எழுதியிருக்கிறார்.



சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், தங்கவேலு, சாவித்திரி, எம். என். நம்பியார், எம். என். ராஜம் முதலியோர் நடிக்கிறார்கள்.

பேசும்படம் போட்டோ ஆல்பம்



'தம்பதிகள்' என்ற சொல்லுக்கு இலக்கணமாக இவ்விருவரையும் சொல்லலாமே! - சாரதி ஸ்டுடியோஸ் தயாரிப்பான புதிய பாதை' படத்தில் சாவித்திரி - பாலாஜி.

''அதோ பாருங்கள்! அதை விட என் நடனம் சிறப்பாக இல்லையா?'' என்று கேட்கிறாரோ இவர்? சாரதி ஸ்டுடியோஸ் தயாரிப்பான 'புதிய பாதை'யில் சாவித்திரி.

"ஆனால் எனது உடையில்தானே கவர்ச்சி அதிகம்" என்று பதில் சொல்லுவது போல் இவர் நிற்கிறார்! மாடர்ன் தியேட்டர்ஸ் 'கைதி கண்ணாயிர'த்தில் இ. வி. சரோஜா.

ஒரு கையை நெற்றியில் வைத்து, கடைக்கண்ணுல் பார்த்துச் சிரிப்பதிலிருந்து இவர் தன் காரியத்தில் வெற்றி பெற்று விட்டார் என்று தெரிகிறது! ஆர். எம். ஜி. பிக்சர்ஸ் வெளியிடான டாக்டர்-Z' படத்தில் ஷகிலா.'

இவர் அணிந்துள்ள உடையும், அணியும் ஒரு 'மடாதிபதியின் மக'ளாகத்தான் இருக்கும் என்பதைச் சொல்கின்றன. ஸ்ரீ வரதராஜா பிலிம்ஸ் வெளியிடும் 'மடாதிபதி மகள்' படத்தில் நளினி ஜெயவந்த்.



"குடும்பப் பெண்கள் என்ருல் இப்படித்தான் இருக்க வேண்டும்" என்பதுபோல புதுமுகம் ராஜஸ்ரீ காட்சி தருவது [எம்,ஏ.வி.யின் 'பணம் பந்தியிலே' படத்தில்.

'ஒரு ராஜகுமாரி என்ருல் இப்படித்தான் இருக்க வேண்டும்' என்பதுபோல பி. சரோஜாதேவி காட்சி தருவது தேவர் பிலிம்ஸ் தயாரிப்பான 'யானைப் பாகன்' படத்தில்.

'குழலினிது யாழினிது என்பர்-மக்கள் தம் மழலைச்சொல் கேளாதவர்' என்று குறள் சொல்கிறது. எம். ஜி. ஆர். இப்படி ஆனந்த வெள்ளத்தில் திளைக்க அதைக் கேட்டதனால் இருக்குமோ? ஜூபிடரின் 'அரசிளங்குமரி'யில்.

கலையில் நிலா - களத்தில் புலி
குணத்தில் தங்கம் - கொதித்தால் சிங்கம்
N.A.P
நடேஷ் ஆர்ட்
பிக்சர்ஸ்
மன்னாதி மன்னன்
புரொட்யூஸர் - டைரக்டர்
M. நடேசன்
கதை-வசனம்-பாடல்கள்
கவிஞர் கண்ணதாசன்
சங்கீதம்
விஸ்வநாதன்-ராமமூர்த்தி
செப்டம்பர் 30உ முதல்

எம். ஏ. வி. பிக்சர் ஸார்ரத்னு ஸ்டுடியோவில் தயாரித்து வரும் ''பணம் பந்தியிலே'' படத்தில் புகழ்பெற்ற நக்ஷத்திரங்கள் பலர் நடித்து வருகிறார்கள். கிருஷ்ணராவ் இதன் டைரக்டர்.

ஆளுக்கொரு வீடு

தொடர்ச்சி

காட்சி 4

கணபதி தன் வீடுகளில் ஒன்றின் மீது பணம் வாங்கியிருந்தார். அந்தப் பணத்தைக் கொடுத்து அடமான பத்திரத்தை வாங்கி விடுகிறன் கந்தசாமி. தன் அண்ணனல் நியாயஸ்தலம் சென்று நியாயத்திற்காகப் போராட முடியாது என்ற தைரியம் அவனுக்கு. அத்துடன் நிற்கவில்லை அவன். கணபதிக்குச் சொந்தமான நிலத்தை, மாணிக்கத்துக்கு விற்று அதிலே வீடு கட்டவும் துணிகிறன். லட்சுமி இதைக் கவனித்து விடுகிருள். வீட்டிலே கணபதி காய் கறிகளைச் சரிசெய்து கொண்டிருக்கிருர்.

பார் : ஏம்பா, சொத்தை காய்கறியெல்லாம் ஒதுக்குறீங்க. இதையும் சேத்து வித்தாத்தானே நமக்கு கிறைய பணம் கிடைக்கும்?

கண : பணத்துக்காக மனமறிந்து தப்பு செய்யலாமாம்மா?

பார் : நீங்க தர்மராஜாப்பா. ஆனு இந்தக் காலத்துக்கு லாயக்கே இல்லே.

லட்சுமி நுழைகிருள்.

லட் : தர்மராஜான்னு நல்லா சொன்னேம்மா. அதனலேதான் வீடு, வாசல் எல்லாத்தையும் தம்பிகிட்டே இழந்துட்டு இப்படி உட்கார்ந்து இருக்காங்க. கடைசியா இப்ப நம்ம காலி மனைக்கும் ஆபத்து வருது.

கண : என்னம்மா சொல்றே நீ?

லட் : பாஞ்சாலி கோயிலுக்கு பக்கத்துலே நம்ம காலி மனை இல்லே, அதை சித்தப்பா யாருக்கோ விலை பேசருர்.

கண : அவன் எப்படி விலை பேசுவான்? இருக்காதும்மா.

லட் : யாரோ பெரிய வீட்டு பிள்ளை கார்லே வந்திருக்கு. அவங்ககிட்டே விலை பேசினதை என் காதாலேயே கேட்டேம்பா.

பார் : அப்பா, உடனே போய் சித்தப்பாவை கோபமா கேளுங்க. உங்களுக்குக் கோபம் வராட்டி நான் போய் பேசட்டுமா?

கண் : தப்புடா கண்ணு. சித்தப்பா பெரியவங்க பார். அப்படி யெல்லாம் பேசக்கூடாதும்மா. நானே போயி கேக்குக்றேன். எல்லாம் சீக்கிரம் அடுக்கி வையம்மா.

போகிருர். கந்தசாமி வரவேற்கிருன்.

கண : ஏம்பா கந்தசாமி.

கந் : வாங்க. வாங்க அண்ணே. நிக்கிறீங்களே. உள்ளே வாங்க.

கண : இருக்கட்டும், பரவாயில்லே. ஆமா, என் காலி மனையை யாருக்காவது பேசுகிறியா?

கந் : விலை பேசுறேன? யார் சொன்னது? அய்யய்யோ, அப்படியெல்லாம் இலலீங்க. எனக்கு ரொம்ப வேண்டியவங்க. பெரிய மனுஷாள். அவங்க அந்த இடம் வேணும்ன்னு கேட்டாங்க...

வீட்டில் சினிமா புரொஜெக்டர்



சினிமா கொட்டகையில் பார்ப்பது போல் சினிமா படங்களை வீட்டிலிருந்தபடி பார்த்து ரசிப்பதற்கு மிக உபயோகமானது. டார்ச்லைட் அல்லது மின்சாரத்தாலும் இயங்கும். இதற்கு உபயோகிக்கப்படும் பிலிம் 35 M.M. விலை ரூ. 15-8-0 தபால் சிலவு தனி: ரூ. 4-8-0 சிறந்த ரகம் ரூ. 20-0-0 தபால் சிலவு ரூ. 5-8-0 10 அடி பிலிம் இலவசம். திரை ரூ. 3-0-0 அதிக பிலிம் கஜம் ஒன்றுக்கு ரூ. 0-8-0.

ஆங்கிலத்தில் விண்ணப்பிக்கவும். கால்பங்கு முன்பணம் அனுப்பவேண்டும்

ILFA PRODUCTS

(P. P.)

RAFAT GANJ ALIGARH (U.P.)

சவால் ! சவால் !! சவால் !!!



மாய மோதிரம்
(அதிசய கண்டு பிடிப்பு)

நீங்கள் கவலையுற்றிருந்தாலும் மனம் சோர்ந்திருந்தாலும் கவலையடையவேண்டாம். எங்கள் மாய மோதிரத்தை அணியுங்கள். இது சூரிய கிரஹணத்தின்போது ரிஷி மகானுபவர்களால் தயாரிக்கப்பட்டது. 'இதை அணிபவர்கள் எப்பேர்ப்பட்ட தடையும் நீங்கி வெற்றியடைவீர்கள். உங்களிடம் கொண்டுள்ள வெறுப்பை நீக்கி அவனோ, அவளோ உங்களுக்கு அடிபணிந்து நடப்பார்கள். காதல் விவகாரங்கள், வியாஜ்யங்கள், பரீட்சை, வியாபாரம் முதலியவைகளில் வெற்றியடையலாம். லக்ஷ்மி கடாக்ஷம் கிடைக்கும். இந்த மோதிரம் உபயோகமாக இருக்கும்.

ஒருமுறை பரீட்சித்து வெற்றியைக் காணுங்கள். விலை ரூ.1.75. அதிக சக்தி வாய்ந்தது ரூ. 3-75. தபால் செலவு தனி. இது பொய் என்று நிரூபிப்பவர்களுக்கு இரட்டிப்புப் பணம் வாபஸ் செய்யப்படும்.

Principal :- ROYAL MESMERISM HOUSE,
(PPM) Post Box No. 32, AMBALA CANTT. (Pb.)

1960–61-ல் என்ன நேர இருக்கிறது?

புத்தாண்டாகிய 1960.61-க்குள் ஏற்படக்கூடிய நன்மை தீமைகளை முன்கூட்டி அறிய விரும்பினால் ஒரு தபால் கார்டில் ஒரு புஷ்பத்தின் பெயரும், முழு விலாசமும் அனுப்பி வையுங்கள். 12 மாதத்திற்குள் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், வியாபாரத்தில் வெற்றி, எந்தவிதத்தில் பணம் கிடைக்கும், உத்தியோகம் எப்பொழுது கிடைக்கும், வழக்கில் வெற்றி, உத்தியோக மாற்றம், தேகாரோக்கியம், பனைவி மக்கள் சுகம், தேக அசௌக்கியம், தூரதேசப் பிரயாணங்கள், பரீக்ஷையில் வெற்றி, கலியாணம், அதைப் பற்றிய பேச்சுக்கள், நிலபுலன்களின் மூலம் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், புதிய நட்பு, அதனால் உண்டாகும் பலன், சூதாட்டத்தின் மூலமாகவும், புலப்படாத இதர வழிகளினால் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்களையும் ஜோதிட முறைப்படி கணித்து அறிவிக்கப்படும். இதற்கு ரூ. 1.25. (வி. பி. மூலம் அனுப்பப்படும்) தபால் செலவு தனி.

இத்துடன் துரதிருஷ்டத்தை அதிருஷ்ட வழியில் செலுத்தும் உபாயங்களும் அனுப்பப்படும். இதனால் ஏற்படக்கூடிய இன்னல்களில் இருந்து இது தன்னைக் காப்பாற்றிக் கொள்ள உதவும். ஒரு முறை பரீக்ஷித்துப் பார்த்தால் எம்முடைய ஜோதிட அனுபவம் விளங்கும். பொய் என்று நிரூபித்தால் பணம் வாபஸ் செய்யப்படும்.

PT. DEV DUTT SHASTRI, RAJ JYOTISHI,
(PPM - 3) JULLUNDUR CITY. (Punjab.)

கண : கேட்டா...சும்மா கொடுத் திட முடியுமா?

கந் : பொட்டத்திடலு. அதுக்குப் போயி அஞ்சு பத்து கொடுங்கன்னு கேக்கிறதுன்னு அசிங்கயாயில்லே?

கண : அஞ்சு பத்தா? நல்லா யிருக்குடா நீ பேசுறது!

கந் : பின்னே அய்யாயிரம் பத்தா யிரத்துக்குப் போகும்ன்னு பாத்தீங் களா? இத பாருங்க. அவங்களாலே எனக்கு ரொம்ப காரியம் ஆகணும். நான் வாக்குக்கொடுத்திட்டேன். உங்க ளுக்கு வேணும்ன்னு என் கையிலே யிருந்து ஏதாவது கொடுத்திட்றேன்.

கண : நீ பேசுறது உனக்கே ஞாயமா தோணுதாப்பா?

கந் : உம். நான் வாழறதுதான் உனக்கு என்னைக்குமே பிடிக்காதே. நான் கொடுத்த வாக்கை மாத்தவே முடியாது. கொடுக்கத்தான் போறேன். நீ வேணும்ன்னு என்மேலே கேஸு போட்டுக்க.

கண : உன்னாலே நான் இதுவரை அடியோட ஒழிஞ்சிட்டேன். கடைசியா இந்த சின்ன விஷயத்துக்காக நமக் குள்ளே டகை எதுக்குடாதம்பி? இறக்கப் போறதைத்தவிர, இனிமே நாம் பிறக்கப் போறதில்லே. நீயாவது நல்லாயிருந்தா சரியப்பா. முருகா...

வெளியேறுகிருர்.

காட்சி 5

அம்மன் திருவிழாவுக்கு லட்சுமிக் குப் புடவையும் தொங்கட்டானும், பார்வதிக்கு ரிப்பனும், பலூனும் வாங்கிக்கொண்டு கிளம்பும் கணபதி, பாலுவுக்குப் பலூன்தர முயலும் போது கார் விபத்தில் இறந்து விடு கிருர். ராஜனின் கார்தான் அது. கணபதியின் விருப்பப்படி, அந்தப் பொருள்களுடன் பாதிரியும் ராஜ னும் லட்சுமியிடம் வருகிருர்கள்.

ராஜ : கணபதி பிள்ளை விடு...

பார் : இதுதான்...?

லட் : நீங்கயாரு...என்னவேணுங்க? அப்பா டவுனுக்குப் போனுங்க. இன்னும் வரல்லீங்களே.

ராஜ : நீங்கதான்...

லட் : அவரு மக லட்சுமி. இது என் தங்கை பார்வதி.

பாதிரி சைகை செய்ய, ராஜன் கையிலிருக்கும் புடவையை லட்சுமி யிடம் கொடுக்கிருன்.

ராஜ : இந்தாம்மா உனக்கு ரிட்பன்.

லட் : அப்பா எங்கேங்க?

பாதி : குழந்தைகளே! கர்த்தர் உங் களை ஆசீர்வதிப்பாராக குழந்தைகளே! இன்பதுன்பங்களைக் கண்டு மனிதர்கள் அதிர்ச்சி அடையக்கூடாது. ஏனென் ருல் ஆண்டவன் விருப்பமில்லாமல் எது வும் உலகத்தில் நடப்பதில்லை. எனவே மனதை திடப்படுத்திக் கோள்ளுங்கள்.

லட் : அப்பா எங்கேங்க?

பாதிரியார் நகருகிருர். லட்சுமி கிறீச்சிட்டு அழுகிருள். கையிலிருக் கும் விளக்கை கீழே போடுகிருள்.

லட் : அப்பா...

துடிதுடிக்கிருள்.

காட்சி 6

ராஜன் தன்னல் கணபதி மரண மடைந்ததாக நினைத்து வருந்தி, அக்குடும்பத்திற்கு உதவி செய்ய முடிவு செய்கிருன். ஆனல் அவன் வரும்போது, விரட்டி விடுகிருள் பார்வதி. லட்சுமி தனக்கு வீடு கட் டும் கூலியாட்களில் ஒருத்தி என் பதறிந்து மிகவும் வருந்துகிருன். மீண்டும் லட்சுமியின் வீட்டுக்கு வருகிருன்.

ராஜ : பார்வதி.

பார் : அக்கா அவர்தானக்கா!

லட்சுமி திரும்பி பார்கிருள்,

லட் : உள்ளே கூப்பிடம்மா. பாயை எடுத்துப்போடு.

பார் : வாங்க வாங்க. உள்ளே வாங்க.

ராஜ : அடேடே, பாய் எதுக் கம்மா?

ராஜ : லட்சுமி! என்மேலே உங்க ளுக்கு கோபமில்லையே?

லட் : எங்க தலைவிதி என்னமோ நடந்துட்டுது. உங்கமேலே என்ன தப்பு இருக்கு? நாங்க எதுக்காக கோபப் படட்போகிறோம்?

ரூ. 1000 ரொக்க இனாம்!

நீங்கள் நாடியதெல்லாம் கைகூடும்



எல்லா விதமான பிரயத்தனம் புரிந்து நீங்கள் மனம் சோர்ந்திருந்தாலும் சரி, இந்த மாயஜால மோதிரத்தை வாங்கி அணிந்து கொள்ளுங்கள். இதை அணிந்தவுடனே நீங்கள் விரும்பிய நபர் ஆணாயிருந்தாலும் பெண்ணாயிருந்தாலும், அக்ஷணமே வசியமாய் விடுவார். இஷ்டப்பட்டவரை நீங்கள் மணப்பீர்கள். இதனால் மலட்டு ஸ்திரீகளுக்கும் புத்திர சந்தானம் உண்டாகும். இறந்தவர்களின் ஆத்மாவோடு பேசலாம். பூமியில் இருக்கும் புதையல் உங்கள் கனவில் தோன்றும். லாட்டரி, வியாபாரம், பந்தயம், சூதாட்டம், வழக்கு, பரீட்சை இவற்றில் வெற்றி பெறுவீர்கள். துஷ்ட கிரகம் சாந்தம் அடையும். ஜீவிய காலம் சுகமாகக் கழியும்.

மாந்திரீக மோதிரம் விலை ரூ. 1. 94. ஸ்பெஷல் மோதிரம் ரூ. 3. 00. ஸ்பெஷல் சக்தி மிகுந்தது ரூ. 3. 94. மின்சார சக்தியைப்போல் உடனே இது பலன் தரும். இந்த மாய மோதிரம் கிரஹணம் போன்ற சமயங்களில் தயார் செய்யப்படுகிறது. சூரியன் தவறுதலாய் மேற்கில் உதித்தாலும் இம் மோதிரத்தின் சக்தி தவறமாட்டாது. அப்படி பலன் இல்லையென்றால் இரட்டிப்புசார்ஜ் வாபஸுக்கு காரண்டி. பலனில்லை என்று நிரூபிப்பவருக்கு ரூ. 1000 இனாம்!

Principal : SHINING MESMERISM HOUSE,
(PPM-3) JULLUNDUR CITY, (Pb.)

இனாம் ! இனாம் !! இனாம் !!!

எமது நெ. 501 கருங்கூந்தல் தைலத்தை (ரிஜிஸ்டர்டு) உபயோகிப்பதன் மூலம் எல்லா விதமான ரோமமும் மைக்கறுப்பாக மாறி, பின்னர் எப்பொழுதுமே கறுப்பாக வளரும். இது முடிகள் உதிர்ந்து போவதைத் தடுத்து, மிகவும் நீண்டதாகவும், பிரகாசமாகவும், சுருண்டதாகவும் வளரச் செய்கிறது.

புட்டி ஒன்றின் விலை ரூ. 1.94.

3 புட்டிகள் (பூராமுறை) ரூ. 5.00.

இந்த அதிசயத் தைலத்தை எங்கும் பரப்ப, ஒவ்வொரு புட்டியுடனும் அழகிய பான்ஸி மியூட் (பொம்மை) வாட்சும், மோதிரமும் (நியூ கோல்டு) அளிக்க நாங்கள் முடிவு செய்திருக்கிறோம். வாட்சின் அழகும் உறுதியும் 15 வருஷங்களுக்கு உத்திரவாதம். 3 புட்டிகள் வாங்குவோருக்கு 6 பான்ஸி ரிஸ்ட் வாட்சுகளும், 6 நியூகோல்டு மோதிரங்களும் இனாம். அங்கீகரிக்காமல் போனால் பணம் வாபஸ்.

ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்.

BHARAT PHARMACY (P. P. M.)
Jullundur City.

ராஜ: அப்படியானால் நான் செய்யுற உதவியை நீங்க மறக்கவே கூடாது.

லட்: உதவி வேறே உங்க அன்பு வேறே. அன்பு இருந்தா போதும். ஏழைங்க, அதுவும் தனியா இருக்கிற பெண்ணுங்க யாரிடமும் உதவியை விரும்பினா ஊர் தப்பா சொல்லும். குலப் பெண்களுக்கு அது அழகும் அல்ல மன்னிக்கணும்.

பார்வதிக்கு பரிமாறுகிறாள். நகருகிறாள்.

ராஜ: உனது பண்பு ரொம்ப உயர்ந்தது. என் இதயத்திலே உன் உருவம் அன்பு தெய்வமாக பதிந்து விட்டது. உக்காரு லட்சுமி. எக்காரணத்தைக் கொண்டும் நீ என்மீது கோபமோ வெறுப்போ கொள்ளாதிருந்தால் அதுவே போதும்.

அவள் ஒரு தட்டின் எதிரில் உட்காருகிறாள்.

லட்: உண்மைக்கு என்றும் அழிவு இருக்காதுங்க. பார்வதி ஏதாவது கோபமா பேசியிருந்தாக்கூட நீங்க... நீங்க மன்னிச்சு மறந்துடணும்.

ராஜ: பார்வதிதானே என்னை மன்னிக்கணும்? அதுக்கு எவ்வளவு ஆழமான அறிவு தெரியுமா?

பார்: நீங்க ரொம்ப நல்லவர்தான். நானும் இனிமே பிரியமா இருப்பேன்.

ராஜன் சிரிக்கிறான். கந்தசாமி வீட்டில் சாப்பிட பலமான ஏற்பாடுகள் செய்திருந்தும் அங்கே சாப்பிடாமல் போய் விடுகிறான் ராஜன்.

காட்சி 7

லட்சுமி தோட்டத்திற்குச் செல்லும்போது, ராஜன் தொடருகிறான். தன் வீட்டு கிரகப்பிரவேசத்திற்கு லட்சுமி வராத காரணம் கேட்கிறான் அவன். அவளும் சரியான பதில் தருகிறாள்.

ராஜ: லட்சுமி...நீ ஏன் கிரகப்பிரவேசத்துக்கு வரல்லே?

லட்: ம்...நான் தனியா வரலாமா? நீங்களே சொல்லுங்க.

ராஜ: அது உண்மைதான். கொஞ்ச நாள் பொறுத்துக்க. அப்புறம் ரெண்டு பேரும் எங்கும் சேர்ந்தே போகலாம்; .

லட்: நான் போறேன். யாராவது பார்க்கப் போறாங்க.

அவன் சற்று நகர்ந்து நிற்கிறான்.

ராஜ: ஆமா ஆமா...எனக்குக்கூட வெட்கமாத்தான் இருக்கு, இப்படி விலகி நின்று பேசறது...சரி...போபே!

லட்: உண்மையிலேயே கோபமா?

ராஜ: லட்சுமி! உன்னிடம் ஒரு விஷயம் பேசணும். என் உதவியை மறுத்து நீ கஷ்டப்படுவதுதான் எனக்குப் புரியவில்லை.

லட்: நான் உங்களுடைய சொத்து என்று ஊர் அறியும் வரை உதவி பெறுவது என்பது எனக்குக் குறைவு. அதை நீங்கள் பாராட்டத்தான் வேண்டும்.

ராஜ: சரி. அதிருக்கட்டும். நாங்கள் வீடு கட்டியிருக்கிறோமே அந்தக் கீழ்மனை யாருடையது?

லட்: எங்களுடையதுதான்.

ராஜ: உனது சித்தப்பாவுக்குச் சொந்தமில்லையா?

லட்: அவர் சொந்தமாக்கிக் கொண்டார். அதுமட்டுமென்ன, இப்போது அவர் ஆண்டு அனுபவித்து வரும் வீடு, வாசல், சொத்து, சுகம் அத்தனையும் எங்கப்பாவை மோசம் செய்து எடுத்துக் கொண்டதுதான். இந்த உண்மை ஊருக்கெல்லாம் தெரியும்.

ராஜ: அப்பா அதைப்பற்றிக் கேட்கவே இல்லையா?

லட்: அவர் தர்மராஜா. தம்பியைத் தன் சொந்தப் பிள்ளை போல வளர்த்தவர். அவர் செய்யும் எதையும் தட்டிக் கேட்டதேயில்லை. அவர் வாழட்டுமே என்று இருந்து விடுவார்.

ராஜ: ஹூம்...அப்படியா விஷயம்? ஆனால் இப்படிப்பட்டவர்களை நம்மைப் போன்ற இக்காலத்து ஆசாமிகள் சும்மாவிட முடியாது, அவரவருக்குச் சொந்தமானது அவரவர்களைச் சேர வேண்டும். அப்போதுதான் நீதி சந்தோஷப்படும்.

லட்: நீங்கள் என்ன சொன்னாலென்ன? இன்னும் கொஞ்ச நாளில் சித்தப்பா இந்த ஊரிலிருக்கும் வீட்டையெல்லாம் விலைக்கு வாங்கி விடுவார்.

ஹூம் ... மோசக்காரர்களுக்குத் தானே இது காலம்?

ராஜ: மோசத்திற்கு மோசம் என்று ஆனல், காலம் தானக சரியாகி விடுகிறது.

லட்: சரி நாழியாகிறது. நான் புறப்படட்டுமா?

ராஜ: இரு லட்சுமி. இனிப்பு உனக்குப் பிடிக்குமில்லே?

லட்: அய்யோ...எத்தனை தடவை சொல்லுவது, உங்களை எனக்குப் பிடித்திருக்கிறதென்று?

ராஜ: ஆ...இந்த இனிப்பு கிடைக்க இன்னும் கொஞ்சம் நாளாகும். அதற்குள் இப்போது வேறு தித்திப்பு. வாயைத்திற.

அவள் திறக்க இனிப்பு போடுகிருன்.

காட்சி 8

கோபால் தாயாருவின் தம்பி முறை உறவினன். நாடக நடிகன். அவன் கந்தசாமியின் வீட்டிலே தங்க, அதனல் அவனுக்கும் கமலத்துக்கும் காதல் ஏற்படுகிறது. ஆனல் ஏழை என்பதற்காக அவனை ஒதுக்கி ராஜனுக்கு மணமுடிக்க முடிவு செய்கிருன் கந்தசாமி. அவனது கொடுமைகளை லட்சுமிமூல மறிந்த ராஜன், கோபாலின் மூலமே கந்தசாமிக்குப் புத்திபுகட்டத் தீர்மானிக்கிருன். இதன் பயனக, தௌலத் அண்டு கம்பெனி ஆரம்பமாகிறது. நாடக நடிகனை கோபாலை தௌலத் ஆக்கி ராஜன் அந்த எண்ணெய்க் கம்பெனியின் மானேஜராகிருன். பணத்தாசை கொண்ட கந்தசாமி 15,000 ருபாய் கொடுத்து பங்குதாரராகச் சேருகிருன். அவன் லட்சுமியின் தகப்பனுரை ஏமாற்றிச் சேர்த்த பணத்தையெல்லாம் கறந்து விடுகிருன் கோபால். கந்தசாமிக்கு ஐம்பதாம் ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடி. மிச்சமுள்ள அரிசி முதலியவற்றைக்கூடத்

இரவில் தனியாக இருக்கும் போதுதான்
பார்த்துக் கொள்ள வேண்டும்

KASHMIRI SHASTRA
(Private)

கொக் சாஸ்திரம்
(இரகசியமானது)

84 படங்களுடன்

விளம்பரத்தினல் சரிவரக் கூறமுடியாத விஷயங்கள் அடங்கியுள்ளன.

படிக்கிறவர் நன்ருகவும் தெளிவாகவும் விஷயங்களைப் புரிந்து கொள்வார்கள். பலவிதமான 48 படங்கள் இருப்பதால் மார்க்கெட்டில் எம்முடைய கொக் சாஸ்திரம்தான் மிக நன்ருயிருக்கிறது எனக் கூறப்படுகிறது. விலை. ரூ. 4.

BED ROOM PHOTOS படுக்கை அறைப் படங்கள்

உங்களுக்குப் படுக்கை அறைக் காக்ஷிகளையும், அழகு, வேறு உற்சாகமளிக்கும் காரியங்களையும் தெரிந்துகொள்ள விருப்பமிருந்தால் இன்றே 25 படங்கள் கொண்ட ஒரு ஸெட்டுக்கு ரூ. 6.00 அனுப்பி பெற்றுக் கொள்ளுங்கள். 12 படங்கள் கொண்ட சாம்பிள் ஸெட் ரூ. 3.50. கடிதப் போக்குவரத்து ஆங்கிலத்தில். அயல் நாட்டிலிருப்பவர் பூரா தொகையையும் பி. பி. ஓ. வில் முன் பணமாக அனுப்ப வேண்டும்.

PARIS ART HOUSE
Durgiana (P.P M.) Amritsar.

தானம் செய்து விடுகிருன் கோபால். எல்லாம்போய் விரக்தியுடனிருக்கும் கந்தசாமியிடம் ஐந்துரூபாய் பணம் கேட்க வருகிருள் பார்வதி. அவளை அடித்துத் துரத்த, அவள் அழுதபடி விடு திரும்புகிருள்.

லட் : பார்வதி...ஏண்டா கண்ணு அழறே? அய்யய்யோ...ஏம்மா உன் உடம்பு இப்படி நடுங்குது?

பார் : சித்தப்பா கோவமா போட்டு அடிச்சிட்டாரக்கா.

லட் : சித்தப்பாவா? ஏம்மா...நீ ஏதாவது தப்பாப் பேசினியா?

பார் : இல்லேக்கா. பணந்தாங் காக்கா கேட்டேன்.

லட் : அதுக்காம்மா மனுஷன் இப்படி அடிச்சிருக்கான்? பார். அவரும் ஒரு பொண்ணை பெத்து வளர்த்தவர் தானே? உன்னை எப்படிம்மா அடிக்க மனசு வந்தது? கொடிய பாம்புகூட உன் முகத்தைக் கண்டா கொஞ்சி விளையாடுமே. இரக்கம் நிறைஞ்ச இந்த ஏழை முகத்தைப் பார்த்தா புலிக்குக் கூட கோபம் வராது. பாவி...கூடப் பொறந்த அண்ணன் பொண்ணுங்கறத் துக்காக இல்லாட்டியும், ஆயி அப்பன் இல்லாத அநாதைக் குழந்தை - அதை நினைச்சாவது என் கண்ணுவை மன் னிச்சிருக்கக் கூடாதா.

பார் : அக்கா! நான் படுத்துக் கறேன்க்கா. எனக்கு உடம்பெல்லாம் ஆடுது. நிக்க முடியல்லே...

இருவரும் உட்காருகின்றனர். பார்வதி கட்டிலில் படுக்கிருள். லட்சுமி அவள் தலையை தன் மடிமீது வைத்துக் கொள்கிருள்.

லட் : அப்பா! உங்க அருமைச் செல்வம் பார்வதி. நீங்கதாம்பா தெய்வமாயிருந்து அதுக்கு ஒரு கெடுதலும் வராமெக் காப்பாத்தணும். உங்களைத் தவிர எங்களுக்கு வேறே யாரும் நாதி யில்லேப்பா.

வேண்டுகிருள்.

காட்சி 9

கந்தசாமியை ஒட்டாண்டியாக்கி விட்டு, ஓடி விடுகிருன், தௌலத் கான் என்கிற கோபால். கந்தசாமி யின் வீடெல்லாம் தனசேகர் என்பவரிடம் அடமானம் வைக்கப்பட்டிருக்கிறது. விடிமுந்த கந்தசாமி,

1960-61 வருடம் உங்களுக்கு எப்படிப்பட்டது . . .



உங்களுக்கு இவ்வருடத்தில் நடக்க விருக்கும் நல்லது கெட்டவைகளை முன்னதாகவே தெரிந்து கொள்ள விருப்பமானுல், எங்களுக்கு, உங்கள் விருப்பமான பூவின் பெயரொன்றை எழுதி, உங்கள் விலாசத்துடன் அனுப்பவும்.

நாங்கள் உங்கள் எதிர்கால குறிப்புகளை ரூபாய் 1. 25. ந. பை. விற்கு அனுப்பி வைக்கிறோம். தபால் சிலவு தனி. தனிப்பட்ட தெளிவான குறிப்புகள்: உங்கள் எதிர்கால வியாபாரத்தில் லாப நஷ்டங்கள், பதவியில் முன்னேற்றம், திருமண விஷயங்கள், உங்கள் உடம்பைப் பாதுகாக்கும் முறை முதலியவை அடங்கியது.

நீங்கள் ஒருமுறை உபயோகித்துப் பார்த்தால் நாங்கள், விஞ்ஞானம், ஆரூடம் முதலியவைகளில் எவ்வளவு முன்னேற்றம் அடைந்துள்ளோம் என்பது தெரியவரும். திருப்தி இல்லையேல் பணம் வாபஸ்.

Sarv-Sidh Jyotish Karyalaya.

Post Box No. 32, Ambala Cantt.

லட்சுமியின் சிறு குடிலுக்குச் செல்கிறன்.

கங் : லட்சுமி...லட்சுமி.

லட் : வாங்க சித்தப்பா.

கங் : அதெல்லாம் அப்புறம். முதல்லே இந்த வீட்டை காலி பண்ணு.

லட் : சித்தப்பா!

கங் : பேசாதே! எனக்கு இப்பவே வீடுவேணும்...புறப்படும்...

லட் : நான் எங்கே போவேன் சித்தப்பா?

கங் : நான் மட்டும் எங்கே போவேன்? அரண்மனை மாதிரி என் வீடு. அங்கே ராஜா மாதிரி இருந்தேன். போச்சு...அத்தனையும் போச்சு. எவனே வந்து இது என் வீடு இப்பவே புறப்பட்ரா, வெளியேறுங்கிருன். இதுக்கு என்ன சொல்றே?

லட் : பார்வதியை பாருங்க சித்தப்பா.

கங் : ஆ...

லட் : இந்த ஆபத்தான நிலைமையிலே தங்கச்சியோட நான் எங்கே போவேன் சித்தப்பா?

கங் : உனக்கு புத்தியிருக்கா? என் பொண்ணும் பொண்டாட்டியும் தெருவிலே நிக்கிருங்க. உனக்கு நானு வீடு தேடிக்கொடுக்கிறது? போ வெளியே.

லட் : சித்தப்பா! மன்னிக்கணும் போக முடியாது.

கங் : என்ன சொன்னே? போக முடியாதா? இது ஒங்கப்பன் வீடா? என் வீடு. இங்கே பாரு ... இது என் வீடு; என் சொந்தம். எந்த நாய்க்கும் இங்கே இடமில்லே, போ!

லட் : உன் வீடு. உனக்கு எத்தனை வீடு மொத்தம்? அதெல்லாம் எப்படி வந்தது? அன்பே உருவான ஒரு அண்ணன். அவர் நல்ல குணத்தை விற்றுத்தானே உன் செல்வத்தைக் குவித்துக்கொண்டாய்? அடுத்த வீடு நுழைந்தறியாத அந்த உததமனை வீடு வீடாய் - தெருத்தெருவாக அலைய விட்டுத்தானே அந்த அரண்மனையைக் கட்டிக்கொண்டாய்? அடித்துக் கேட்க ஆண் பிள்ளை இல்லையென்று அப்பாவியான பெண்களை மோசம் செய்து தானே இருந்த இந்த குடிசை வீட்டையும் வளர்த்த எங்கள் செல்லப் பசுவையும் பறித்துக்கொண்டாய்?

கங் : ஆமாம், பறித்துக் கொண்டேன். பறித்து அப்படியே பெட்டிக்குள்ளே பூட்டிவைத்துத் கொண்டேன். அங்கே வந்துபார். பறித்த அத்தனையும் ஒரே நாளில் போய்விட்ட விந்தையை வந்துபார்.

லட் : அது விந்தையல்ல சித்தப்பா. பறித்தவன் பறிகொடுக்கத்தான் வேண்டும். நல்லது செய்தவனை ஏமாற்றி, நன்றி கெட்டவனுக உயர்கிறவன் முடிவில் நாயாகத் திரியத்தான் வேண்டும். ஆயிரம் குடும்பத்துக்கு ஒருவீடு இல்லை. ஒருவனுக்கு ஆயிரம் வீடுகள் அவசியமா? இந்த ஞாயம் எதற்கு சித்தப்பா? ஆளுக்கு ஒரு வீடு. ஆனல் ஒருவனுக்கு ஒன்பது மாடியும் பலருக்கு நாய் படுக்கும் தெருக்கோடியும் என்ற இழி நிலை ஏற்படாது. ஏமாற்றங்கள் வளராது. ஏழையின் கண்ணீருக்கு இரக்கமில்லா

வாணி தமிழ்-இங்கிலீஷ் போதினி

தமிழ் படிக்கத் தெரிந்தவர்கள் இந்தப் புத்தகத்தின் மூலம் பிறருடைய உதவி இல்லாமல், இங்கிலீஷ் சுலபமாகப் படிக்கவும் பேசவும் கடிதங்கள் எழுதவும் கற்றுக் கொள்ளலாம். 704 பக்கங்கள் கொண்ட பெரிய பைண்டு புத்தகம். விலை ரூ. 5. வி. பி. பி., செலவு ரூ. 1-4-0.

வாணி தமிழ்-இந்தி ஆசான்: தமிழைக் கொண்டு பிறர் உதவியின்றி தானே சுலபமாக ஹிந்தி படிக்கவும் பேசவும் கற்றுக் கொள்ளலாம். விலை ரூ. 2-4-0. வி.பி. செலவு 0-12-0

தையல் கலை : இப்புத்தகத்தின் மூலம் யார் வேண்டுமானுலும் பிறர் உதவிஇல்லாமல் தானே தையல் வேலையைச் சுலபமாகக் கற்றுக்கொள்ளலாம். விலை ரூ. 3. வி. பி. செலவு ரூ. 1.

வாணி புக் டிப்போ,

(தபால் பெட்டி 239), 3, மலையபெருமாள் தெரு, சென்னை - 1.

மல் போகாது. உயிருக்கு ஊசலாடும் சிசுவுக்கு கருணைகாட்ட உங்கள் கல் மனமும் மறுக்காது. கடைசியாகச் சொல்கிறேன, இந்த வீடு உங்களுக்குத் தான் சொந்தம். எப்போது? நாங்கள் செத்தபிறது, தானகவே அது உங்களுக்கு சொந்தமாகிவிடும். ஆனுல் இன்னும் உயிர் போகவில்லே. சித்தப்பா! எங்களுக்கு போக வெதுநாளும் ஆகாமல் போகலாம். வேண்டுமானுல் அதன் பிறகு வந்து நீங்களே இந்த வீட்டில் அடக்கம் ஆகிவிடுங்கள். இப்போது போய் விடுங்கள்.

கந்: ஆகா...ஊமையாட்டம் இருந்த நீ இப்ப உலகந்தியா பேசறே? என்னே விரட்டறே இல்லே?

லட்: அதுதான் உலகம். உதைபட்டவன் விழித்தெழுந்தால் உதைத்தவன் ஓடவேண்டிதான் வரும்.

கந்: ஓ...அவ்வளவு துரத்துக்குப் போயிட்டியா?...அங்கே போனு அவன் விரட்டுகிருன்.இங்கேவந்தா நீவிரட்றே? இப்படியா ஆச்சு என் கதி? இருஇரு... என் மக நிச்சயதார்த்தம் மட்டும் முடியட்டும். நான் பேசிக்கிறேன்...நான் பேசிக்கிறேன்.

பார்வதி உட்காருகிருள். கந்தசாமி வெளியேறுகிருன். லட்மி விம்மி விம்மி அழுகிருள்.

காட்சி 10

பார்வதியின் நிலே மோசமாகவே, ஊரினுள்ள ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்கிருள் லட்சுமி. அங்கே பாதிரி தேற்றுகிருர். பார்வதியின் நிலே மோசமாகவே லட்சுமி பதறி ஓடிக்கீழே விழுகிருள். அவளேத் தேடி யலேந்த ராஜன் அவளே அந்த ஆஸ்பத்திரிக்கே தூக்கிச் செல்கிருன். பார்வதிக்குச் சிறிது குணம் காண்கிறது. லட்சுமியின் படுக்கையருகே வந்து உட்காருகிருள் பார்வதி.

பார்: அக்கா...அக்கா.

லட்: ஏம்மா அழறே?...நான் உன் கூடத்தானேம்மா இருக்கேன்?

நர்: லட்சுமி...நீ என் எழுந்து வந்தே? வந்துபடும்மா.

கட்டிலுக்கு அழைத்துச் செல்கிருள். ராஜனும் பாதிரியும் கட்டிலின் அருகே வருகின்றனர். கமலத்தை ராஜன் மணக்கப்போவதாக நம்பிய லட்சுமி அவனிடம் வெறுப்படைகிருள்.

ராஜ: லட்சுமி... பேசாமல் படு. இனிமேல் பார்வதிக்கு எந்த ஆபத்துமில்லே.

லட்: யார் நீங்கள்? என்னேப்பற்றியோ என் தங்கையைப் பற்றியோ உங்களுக்கு என்ன அக்கறை?

பாதி: லட்சுமி...ராஜனேத் தெரியவில்லேயா ... உனக்கு? இவர்தான்... இரவு பகலாக கண் விழித்து உங்களே கவனித்து வருகிருர்.

லட்: இவர் யார் என்னேக் கவனிக்க? என்னேடு ஆடினுரா. பாடினுரா...ஆசையெல்லாம் காட்டி அன்பு மொழி பேசினுரா? ஹூம்... எதை நினேத்து இங்கு வந்தார்?

ராஜ: லட்சுமி ... தயவு செய்து பேசாமலிரு.

லட்: நாங்கள் ஏழை. எங்களே ஏமாற்றியதெல்லாம் போதும். நீங்கள் போய் விடுங்கள். எங்கள் சித்தப்பா பணக்காரர். அவர் மகளேக் கட்டிக்கொண்டால் பணம் கிடைக்கும். பங்கு கிடைக்கும். வீடு கிடைக்கும். எல்லாமே கிடைக்கும். பிறகு உங்களுக்கு எதைப்பற்றி கவலே?

ராஜ: லட்சுமி! நீ நினேப்பது அத்தனையும் தவறு.

லட்: உம் ... ஊரைக் கூட்டி, கொட்டு மேளம் கொட்டி, தாய், தந்தையர் சம்மதிக்க மணஓலே மாற்றிக் கொண்டதைக்கூட நான் அறிந்திருப்பது தவறுதான். படித்த உங்களுக்கு பெரிய அறிவு இருக்கலாம். ஆனுல் இதயம் இல்லே. உங்களுடைய எந்த ஜாலத்தையும் நம்பி நாசமாக நான் தயாராக இல்லே. போய் விடுங்கள். இல்லாவிட்டால் என் கோபவெறியில் நான் பொசுங்கி அழிந்து விடுவேன். போய் விடுங்கள்!

பாதி: ராஜன்...வாருங்கள் போகலாம். நர்ஸ்! ஓய்வாகப் படுக்கவை.

பாதிரி, ராஜன் இருவரும் வெளியேறுகிருர்கள். பாதிரி தனியே கேட்கிருர்.

பாதி : ராஜன்! லட்சுமி இவ்வளவு ஆத்திரப்பட அப்படி என்ன தவறு நடந்தது?

ராஜ : பாதர்...ஏழைப் பெண்ணின் மனதைப் புரிந்து கொள்ளாமல் எல்லா வற்றையும் மூடி மறைத்தது பெருந் தவறுதான். படித்திருந்தும் நான் முட்டாள் பாதர். நான் ஒன்று நினைக்க அது எவ்வளவு விபரீதமாகி விட்டது பாருங்கள்.

பாதி : ராஜன்! துன்பப்படாதீர்கள்... மெதுவாகப் பேசலாம்.

வெளியேறுகின்றனர்.

காட்சி 11

ராஜனுக்கும் கமலத்துக்கும் திருமணம் நடக்க ஏற்பாடாகிறது. மண விழாவன்று, கந்தசாமி ஒட்டாண்டி என்றறிந்த மாணிக்கம் கமலத்தை மருமகளாக ஏற்க மறுக்கிறார். அப்போது கோபால், தான் கந்தசாமிக்கு உதவுவதாகக் கூறுகிறான். அங்கே லட்சுமி, பாதிரி உட்பட யாவரும் வந்து சேருகின்றனர். ஆனல் கமலத்தைக் காணவில்லை. யாருமறியாமல் கோபாலின் திட்டப்படி ஆணுடையில் அமர்ந்திருக்கிருளே! தனியாக அழைத்துச் சென்று கலெக்டரிடம் விவரம் கூறுகிறார் பாதிரி. கந்தசாமி மனந்திருந்தி, லட்சுமியை ராஜனுக்கு மணமுடிக்க ஒப்புக்கொள்ளுகிறான்.

ராஜன் அருகில் லட்சுமி பணப் படியில் உட்காருகிருள்.

கோபா : ராஜன்! நம்மெ அம் போன்னு விட்டுட்டு நீ மட்டும் போயி உட்காந்துகிட்டே...இருஇரு. வர்ரேன் பாரு இருப்போ.

கமலம் ஆண் உடையில் உட்கார்ந்திருக்கிருள், நாற்காலியில். கோபால் வந்து அவளை இழுத்துப் போகிருன்.

கோ : நம்மளே விட்டுட்டு அவங்க மட்டும் கல்யாணம் பண்ணிக்கிருங்க வா வா...மாமா...மாமா...மாமா மாமா.. ...என்னை மன்னிச்சிடுங்க மாமா. இது யார் தெரியுமா உங்களுக்கு?

கந் : யாரப்பா?

கோ : தெரியாதே ... இதோ பாருங்க ... மீசையை எடுத்துடு! மீசையை எடுத்துடு.

எடுக்கிருள் கமலம்!

கந் : கமலம்!

கம : அப்பா!

கந் : வந்திட்டியாம்மா?

கோபா : ஆ...மாமா...இதே முகூர்த் தத்திலே எங்க ரெண்டு பேருக்கும்... பண்ணிடுங்க...

கந் : உன் மனம்போல ஆகட்டும்ப்பா:

பாதி : சீக்கிரம் டிரஸ், எல்லாம் மாத்திகிட்டு வா...

கோ : ஓ...ஓ...அப்படியே...வாவா.

கமலம் கோபால் ஓடுகின்றனர்.

பாதி : எல்லோரும் ரெண்டு கல்யாணத்துக்கும் வந்திருந்தது மட்டும் போதாது. தர்மசிந்தனைகொண்ட கந்தசாமி பிள்ளை மணமக்களுக்கு கொடுக்கப் போகும் ஆளுக்கொரு வீடு அன்புப் பரிசை இருந்து பார்த்து ஆசீர்வதித்து வீட்டுப் போகவேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இரு கல்யாண ஜோடிகளும் மாலை மாற்றிக் கொள்கின்றனர்.

மாணி : நீடுழி வாழுங்க எல்லாம்.

கந் : ராஜனும் கோபாலும் வயசிலே சியவங்க. அறிவிலே பெரியவங்க. எனக்கு இந்த தர்மவழியைக் காட்டிய இவங்களை நான் மனமார வாழ்த்துகிறேன். என்னைப்போலவே இதயமில்லாமே நடக்கிற ஒவ்வொரு சுய நலக்காரனுக்கும் இதனாலே ஒரு நல்ல புத்தி வந்துட்டா அது இந்த நாட்டுக்கே ஒரு வழிகாட்டியதாக இருக்கும், அது மட்டுமல்ல...இதுபோல் நல்லது ஏற்பட அவுங்க அவுங்க பாடுபடணும்ன்னு நான் கேட்டுக் கொள்கிறேன். ராஜன்-லட்சுமி, கோபால்-கமலம். பார்வதி-பாலு ஆளுக்கொரு வீட்டுக்குப் போக லாம், வாங்க புறப்படுங்க.

கந்தசாமி சென்று பாலு-பார்வதியை அணைத்தவாறே நகருகிருன். ஆமாம், அடுத்தபடியாகத் தனித்தனியே நிற்கும் பாலுவும் பார்வதியும் மணந்து கொள்ள வேண்டியதுதானே! ★


—அழைப்பு—
அன்புடையீர்,
எகிப்து நாட்டின் நடன நடிகை
யான "லைலா ஜலோ இரியா" வை
உங்களுக்கு அறிமுகம் செய்து
வைக்க விரும்புகிறோம். அதற்கான
அழைப்பை இங்கு தருகிறோம்.
தமிழ் பேசும் எகிப்து நடிகை
புகைப்படங்கள்:
ஆனந்தன்

கெய்ரோவின் விமான நிலையத்தில் இருவர் தீவிரமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவர் 'ராக்-என்-ரோல்' படத் தயாரிப்பாளர் டைரக்டர் டி. ஜானகிராம். மற்றவர் எம். ஏ. லத்தீப். அரபுக் குடியரசின் விமானப் படையின் பிரதம இன்ஜினியர் அவர். லைலா என்ற அழகியின் தந்தை.

'ராக் - என் - ரோல்' என்ற தனது படத்தில் நடனமாட, எகிப்தின் பிரபல நடன நடிகையான எல்ஹாம் ஜகி என்பவரைக் கண்டு, ஒப்பந்தம் செய்ய வந்த ஜானகிராம் அது பற்றி என்ஜினியருடன் பேசிக் கொண்டிருந்தார்.

அப்போது அவர் தனது மகள் நடன நடிகை லைலாவைப்பற்றி டைரக்டர் ஜானகிராமிடம் தெரிவித்தார்.

கெய்ரோவில் மியாமி ஸ்டூடியோவில் லைலாவின் நடன மிருக்கிறது என்று கேள்விப்பட்டு உடனே அங்கு சென்று லைலாவின் நடனத்தைக் கண்டார்; அவர்களது வீட்டிற்கும் சென்றார்.

எல்ஹாம் ஜகியைத் தவிர, மற்றொரு நடன நடிகையும் ஜானகிராமுக்கு தேவையாக இருந்தார். எனவே தனது எண்ணத்தை அவர்களிடம் சொன்னார். "இந்தியாவுக்கு வந்து தன்னுடைய படத்தில் நடிக்க விருப்பமா?" என்று கேட்டார். லைலாவை விட லைலாவின் தாயுக்கு இந்தியாவைப் பார்த்துவிட்டு வர வேண்டும் என்ற ஆவல் இருந்தது. எனவே முயற்சிப்பதாகக் கூறினார்கள். ஜானகிராம் இந்தியா திரும்பினார்.

சில மாதங்கள் கழித்து லைலா, தனது பெற்றோர்களுடனும் தம்பியுடனும் சென்னைக்கு வந்தார். ஆனால் ஜானகிராம் அப்போது சென்னையில் இல்லை. வெளிநாட்டில் இருந்தார். எனவே மூன்று மாத காலம் அவர்கள் ஒரு ஓட்டலில் தங்கியிருந்தார்கள். ஜானகிராம் திரும்பியதும் 'ராக்-என்-ரோல்' படத்தில் நடிக்க ஒப்பந்தம் செய்து கொண்டார்.

லைலாவுக்கு இப்போது பதினைந்து வயதாகிறது. வட்டக் கருவிழிகள், கருத்த முடி, சிவந்த மேனி இவற்றுடன் அழகுப் பதுமையாக விளங்கும் இவர், கெய்ரோவில் இருந்த போது ஏராளமான நடன நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டிருக்கிறார். பல டெலிவிஷன் நிகழ்ச்சிகளில் தோன்றி நடனமாடி யிருப்பதுடன், நாடகங்களிலும் நடித்திருக்கிறார்.

எகிப்தின் பிரபல நடன ஆசிரியரான ஸாதிக் என்பவரிடம் இவர் எகிப்திய நடனங்களையும், 'ராக்-என்-ரோல்' நடனங்களையும்

பயின்றார். தற்சமயம் இவர் பரத நாட்டியம் பயின்று வருகிறார். ஆறாவது வயதிலிருந்தே நடனம் பயின்று வரும் இவர், அரபு மொழியில் ஏழாவது வகுப்புவரைப் படித்திருக்கிறார். எட்டாவது வயதிலேயே டெலிவிஷனில் தோன்றியிருக்கிறார்.

லீலா நன்றாக ஹிந்தி பேசுகிறார். ஹிந்திப் படங்கள் எகிப்தில் நிறையத் திரையிடப்படுவதால் ஹிந்தி இவர்களுக்குப் பழக்கமான மொழியாக இருக்கிறது. ஓரளவுக்கு தமிழும் கற்றிருக்கிறார். ஹிந்திப் படங்களில் நடிக்க இவர் தயாராக இருக்கிறார்.

'ராக்-என்-ரோல்' தவிர டைரக்டர் எம். வி. ராமனின் 'அங்காடி' ஹிந்திப் படத்திலும் நடித்து, நடனமாடி வருகிறார்.

விரைவில் ஆரம்பம்!

சென்னை நகருக்கு சிறந்த ஒரு நாகரிக சினிமா
தியேட்டா, நவீன வசதிகள் எலலாம் கொண்டது.

ராம் தியேட்டர்

ஆற்காடு ரோடு, கோடம்பாக்கம்



உலகில் சிறந்த
புரொஜக்ஷன
& ஸவுண்ட்
ஸிஸ்டம் G.K-21
நிறுவப்பட்டது

படங்கள் பார்த்துப்
பரவசமடைய
தமிழ் நாட்டின் தலை சிறந்த
கலைக்கோயில்

உட்கார
சௌகரியமான
கிளைமாக்ஸ்
புஷ்-பேக
(CLIMAX PUSH BACK)
நாற்காலிகள



ஸினிமாஸ் கோப்—வொயிட் ஸ்க்ரீன்
படங்களைத் தெளிவாகத் திரையிட வசதியான
பெர்லெக்ஸ் ஸ்கிரீன் பொருத்தப்பட்டது

திட்டமிட்டு
நிர்மாணித்தவர்கள்—உரிமையாளர்

ராம் அன் கோ

317, தம்பு செட்டி தெரு, மதராஸ்-1.
போன் : 5326 தந்தி : குகா

மெஸர்ஸ்
காமண்ட் காலீ
பிரைவேட்
லிமிட்டெட்
சப்ளை செய்தது

மெஸர்ஸ்
A.R. & பிரதர்ஸ்
சப்ளை
செய்தவை.

EP

பேசும் படம்

REGD. No. M 4523

அக்டோபர் 1960 • 75 காசு